# உதயன்




www.onlineuthayan.com

30 பக்கங்கள் சுடர் 27 கதிர் 348 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 23 வியாழக்கிழமை (08/11/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00


# வடக்கில் தேர்தல் நடக்கவே கூடாது


## ஒரே குரலில் சம்பிக்க, விமல் கர்ச்சிப்பு



கொழும்பு, நவம்பர் 8

"வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடைபெற்றால் அங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிச்சயம் ஆட்சிப்பீடமேறும். அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் நாட்டில் சட்டங்களை அமுல்படுத்த முடியாத நிலை அரசுக்கு ஏற்படும். இந்த விடயத்தில் அரசுக்கு வடமாகாண சபை சிம்ம சொப்பனமாகத் திகழும்.

பார்க்க பக்கம் 4



## அடாத்தாக முகாம்களை அமைக்கும் படையினர்

### வலி.கிழக்கு பிரதேச சபைக் காணிகளில்

யாழ்ப்பாணம், நவ.8

வலி.கிழக்குப் பிரதேச சபைக் காணிகளில் முகாம் அமைப்பதற்குப் படையினர் கோரிய காணிக்களை, மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் வழங்குவதற்குச் சம்மதம் தெரிவிக்கப்படாத நிலையிலும், படையினர் மேற்படி காணிகளில் அடாத்தாக இராணுவ முகாம்களை அமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் படையினர் முகாம் அமைப்பதற்குக் காணிகளைப் பிரதேச செயலரிடம் கோரியிருந்தனர்.

தம்பானை-கதிரிப்பாய்

பார்க்க பக்கம் 4

## ஆயுதப் போராட்டத்தை தூண்டுகிறார் வீரவன்ஸ

### சாடுகிறார் மனோ கணேசன்

கொழும்பு,நவ 08

புலிகளுக்குப் பயந்தே அதிகாரப்பகிர்வுக் கொள்கையும், மாகாணசபை முறைமையும், 13ஆவது திருத்தமும் கொண்டு வரப்பட்டது. இன்று புலிகள் இல்லை ஆகவே மாகாணசபையும், 13 உம் தேவை இல்லை என்று அமைச்சர் விமல் வீரவன்ச குறிப்பிட்டுள்ளார். எனவே, அதிகாரப் பகிர்வை பெறுவதற்காக ஆயுதப் போராட்டம் நடத்துங்கள் என்று விமல் வீரவன்ச கூறுகின்றார். நாட்

பார்க்க பக்கம் 4

## ஜனவரியில் நவிப்பிள்ளை வருகிறார் கொழும்புக்கு

### பரிந்துரைகள், மனித உரிமைகள் குறித்து ஆராய

ஜெனிவா, நவ.8

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 20 ஆவது ஜெனிவா கூட்டத்தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பமாவதற்கு முன்னர், மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு அவசர பயணம் ஒன்றை மேற்கொண்டு வரவிருக்கிறார்.


எதிர்வரும் ஜனவரி மாதம் விஜயத்தை மேற்கொள்ளவுள்ள அவர், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் இலங்கையின் மனித உரிமை நிலைவரங்கள் குறித்து முக்கிய ஆய்வு ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமை பேரவையில் அதன் ஆணையாளர் நவ

பார்க்க பக்கம் 4

## மீண்டும் ஒபாமா

### 2 தடவைகள் ஜனாதிபதியாக கறுப்பினத்தவர்; அமெரிக்க வரலாற்றில் புதிய சாதனை படைப்பு



வோஷிங்டன், நவ.8

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதியும், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளருமான பராக் ஒபாமா (வயது - 51) தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட குடியரசுக் கட்சியின் வேட்பாளரான மிட் ரோம்னியைத் தோற்கடித்து இரண்டாவது தடவையும் வெற்றிபெற்றுள்ளார்.

பார்க்க பக்கம் 4

## அரசமைப்புக்கு அமையவே நீதியரசர் மீது நடவடிக்கை

கொழும்பு, நவ.8

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணையானது நாட்டின் அரசமைப்பில் உள்ள சட்டவிதிகளுக்கமையவே கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், அரசமைப்பு நாடாளுமன்ற அதிகாரங்களுக்கமைய இது தொடர்பான விசாரணைகள் மேற் கொள்ளப்படும் என்றும் அரசு நேற்று அறிவித்தது.

பார்க்க பக்கம் 4

## 2013 பட்ஜெட் இன்று

### ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்படும்

கொழும்பு, நவ.8

இலங்கை அரசின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் இன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

சம்பள உயர்வையும், நிவாரணங்களையும் மக்கள் இந்த வரவு - செலவுத்திட்டத்தில் பரவலாக எதிர்பார்த்திருக்கும் நிலையில், பிற்பகல் 12.50 மணிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சர் என்ற வகையில் இந்த வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கின்றார். இதையொட்டி நாடாளுமன்றத்திற்குள்ளும் வெளியேயும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் நேற்று முதல் நாடாளுமன்றத்தினதும் அதைச் சூழவுள்ள பகுதிகளினதும் பாதுகாப்பை பொறுப்பேற்றுள்ளனர்.

நாடாளுமன்றத்தில் உள்ள அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரினதும் அறைகளும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவால் நேற்று துருவித் துருவி சோதனை

பார்க்க பக்கம் 4

## இலங்கை விடயத்தில் ஒபாமா தலையிடாராம்

கொழும்பு, நவ.8

"அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் மிட் ரோம்னி வெற்றி பெற்றிருந்தால் நிச்சயம் மூன்றாம் உலகப்போர் வெடித்திருக்கும். அந்த அடிப்படையில் பார்க்கையில் ஒபாமாவின் வெற்றி பெரு மகிழ்ச்சியை அளிக்கின்றது" என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

உலக சமாதானத்தை

பார்க்க பக்கம் 4

## இலங்கைத் தமிழர் ஆதரவு தீர்மானங்கள் தொடரட்டும்

### ஒபாமாவுக்கு சம்பந்தன் வாழ்த்து

கொழும்பு, நவ.8

அமெரிக்க ஜனாதிபதியாக பராக் ஒபாமா மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளதைப் பாராட்டி வரவேற்றிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கை தொடர்பில். அமெரிக்கா கையாண்டுவரும் கொள்கை மேன்மேலும் ஆக்கபூர்வமானதாக அமையுமென்று நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

ஒபாமாவின் வெற்றி குறித்து கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மேலும் கூறியவை வருமாறு:-

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஒரு முற்போக்குவாதி. பன்முகத்தன்மை கொண்டவர். அமெரிக்க மக்களும்

பார்க்க பக்கம் 4

## இறுதிப் போரில் காணாமற் போனோர்; நேற்றும் 20இற்கும் மேல் முறைப்பாடு

### கிளிநொச்சி மனித உரிமை அலுவலகத்தில்

கிளிநொச்சி, நவ.8

இறுதிப் போரின்போது காணமற் போனவர்கள் தொடர்பான சுமார் 20 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகளை நேற்றுப் புதன்கிழமை கிளிநொச்சியில் இயங்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதியில் இருந்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் [illegible] திய அலுவலகத்தின் நடமாடும் அலுவலகம் ஒன்று

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டு வைக்கும் போட்டி நடத்தினால் முன்னாள் போராளிகளை அனுப்புவோம்

## அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே

கொழும்பு, நவ. 8

குண்டுவைப்பதும்தேசிய விளையாட்டுக்களின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தால் முன்னாள் புலிப் போராளிகளை இந்தப்போட்டியில் கலந்துகொள்ளச் செய்வேன் என்கிறார் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே.

நேற்றுமுன்தினம் ''சர்வதேச நாடுகளால் வேண்டப்படும் சந்தேக நபர்களை அந்த நாடுகளிடம் ஒப்படைக்க வேண்டும்'' என்ற தலைப்பில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தின்போதே விளையாட்டுத்துறை அமைச்சர் இப்படிக் கூறினார்.

இப்பொழுது குமரன் பத்மநாதனை (கே.பி.) அரசு விடுதலை செய்துள்ளதாகப் பலரும் அலட்டிக் கொள்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் முன்னாள் போராளிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். அவர்களை சுதந்திரமாக நடமாட விடவேண்டும். புனர்வாழ்வு அளிக்கப்படல் வேண்டும் என்று போராட்டம் நடத்துகின்றனர்.

கே.பி.யும் முன்னாள் போராளிதானே. இவர்கள் கேட்டுக்கொண்டதன்படி தானே அவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இப்போது கே.பி.யை விடுதலை செய்தது ஏன்? என்று கேட்பவர்கள், 12 ஆயிரம் முன்னாள் போராளிகளை விடுதலை செய்துள்ளோம். அப்போது ஏன் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை.

இப்பொழுது பல ஆயிரம் இளைஞர், யுவதிகள் சிவில் பாதுகாப்புப் படையில் சேர்ந்து கடமையாற்றுகின்றனர்.

குறிபார்த்துச் சுடுவதில் மாகாண ரீதியான போட்டியில் முன்னாள் போராளி ஒருவரே முதல் இடத்தைப் பிடித்துள்ளார்.

அதேபோன்று புலிகளின் தற்கொலைப் படையில் இருந்த ஒருவர்தான் நீச்சல் போட்டியில் முதலாவதாக வந்துள்ளார்.

இவர்களை தேசியமட்டப் போட்டிகளில் கலந்துகொள்ள ஏற்பாடு செய்வதுடன் சர்வதேச ஒலிம்பிக் போட்டிகளிலும் கலந்துகொள்ளச் செய்வோம் என்றார்.

அப்போது ஜே.வி.பி. உறுப்பினர் ஒருவர் முன்னாள் புலிகள் குண்டு வைப்பதிலும் கெட்டிக்காரர்கள் தானே? என்றார்.

ஆம்! குண்டு வைப்பதும் தேசிய விளையாட்டுக்களின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டால் அந்த விளையாட்டுக்கும் முன்னாள் போராளிகளை அழைத்துச் செல்வோம் என்று பதிலடி கொடுத்தார் அமைச்சர்.

ரணில் விக்கிரமசிங்கதான் புலிகளை இரண்டாகப் பிரித்தார் என ஐ.தே.க.வினர் கூறுகின்றனர். புலிகளை இரண்டாக்கித்தான் நன்மையடையலாம் என அவர் நினைத்தார். பாவம் அதற்குள் அவருடைய ஆட்சியே உடைந்துவிட்டது.

ஆனால் எங்கள் ஜனாதிபதி புலிப் போராளிகளையும் நட்புறவுடன் அனுப்பி வெற்றி கண்டுள்ளார். இது எதிர்க்கட்சியினருக்கு எரிச்சலாக இருக்கின்றது என்று சாடினார் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே. (ஐ-2)

# சக்கோட்டை மாணவி கொலை; சந்தேகநபர்களுக்குப் பிணை

யாழ்ப்பாணம், நவ. 8

பருத்தித்துறை சக்கோட்டைப் பகுதியில் 17 வயது மாணவியைக் கடத்திச்சென்று, வன்புணர்வுசெய்து படுகொலை செய்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இரண்டு சந்தேகநபர்களும் யாழ். மேல்நீதிமன்றினால் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

சந்தேக நபர்களைப் பிணையில் விடுவிக்கும்படி கோரி யாழ். மேல்நீதிமன்றில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த விண்ணப்பம் தொடர்பாக மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே பிணை அனுமதி வழங்கப்பட்டது.

பருத்தித்துறை சக்கோட்டைப் பகுதியில் கடந்த ஜனவரி மாதம் 25 ஆம் திகதி இருதயநாதர் மேரி டிலக்ஷனா (வயது -17) என்ற மாணவி அவரது வீட்டுக்கு அண்மையில் சடலமாக மீட்கப்பட்டார்.

மாணவியைக் கடத்தி வன்புணர்வுக்குட்படுத்தி கொலை செய்த குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த பி.மாணிக்கதாஸ், இ.ஜெயரூபன் ஆகிய இரண்டு சந்தேகநபர்களும் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். பருத்தித்துறை நீதிமன்றில் முன்நிறுத்தப்பட்ட இருவரையும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. இதனையடுத்து அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

அவர்களைப் பிணையில் விடுவிக்கக்கோரி சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி யாழ். மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்தார். அதனைப் பரிசீலித்த நீதிமன்றம் சந்தேக நபர்கள் இருவரையும் நேற்றுப்பிணையில்விடுத்தது.

இதன்படி தலா 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 2 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணையிலும் சந்தேகநபர்கள் விடுவிக்கப்பட்டனர். இதுதவிர ஒவ்வொரு மாதமும் முதலாம், 15 ஆம் திகதிகளில் பருத்தித்துறை பொலிஸில் கையொப்பமிட வேண்டும் என்றும் நீதிமன்று அவர்களுக்கு நிபந்தனை விதித்தது. (த-4)

# சுகாதாரப் பரிசோதகர்களுக்கு வடமாகாணத்தில் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், நவ.8

வடக்கு மாகாணத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் 50 பேருக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன. அத்துடன் சிற்றூழியர்களுக்கும் பற்றாக்குறை நிலவுவதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது சுகாதாரத்துறை தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டது.

இதில் சுகாதாரத்துறையில் நிலவும் வெற்றிடங்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் நிலவுகின்ற வைத்திய வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன. 27 வெற்றிடத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டபோதும் 17 வைத்தியர்களே விண்ணப்பித்திருந்தனர்.

> குறிப்பாகத் தீவகப் பிரதேசத்தின் 8 வைத்தியசாலைகளுக்கும் எவரும் விண்ணப்பிக்கவில்லை.

குறிப்பாகத் தீவகப் பிரதேசத்தின் 8 வைத்தியசாலைகளுக்கும் எவரும் விண்ணப்பிக்கவில்லை.

மேலும் வடமாகாணம் முழுவதுமாக 50 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கான வெற்றிடம் நிலவுகின்றது. இந்த வெற்றிடத்தைப் பூர்த்தி செய்வதற்காக சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடி வருகின்றோம்.

வைத்தியசாலை சிற்றூழியர்கள், வைத்திய உத்தியோகத்தர்கள் எனப் பல இடங்களில் வெற்றிடம் நிலவுவதாக அவர் சுட்டிக் காட்டினார். (த-5)

## சர்வமதக் குழுவின் உதவியுடன்

# போதனா வைத்தியசாலையின் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்படும்

### வைத்தியசாலை பதில் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ். போதனா வைத்தியசாலையில் உட்கட்டமைப்பை ஒழுங்குபடுத்துவதற்காக உபகரணங்களை வழங்குவதாக சர்வமதப் பேரவை உடன்பட்டுள்ளதாக என்று யாழ். போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த சர்வமதக் குழுவினர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சென்று நிலைமைகளைப் பார்வையிட்டனர்.

இதன்போது பதில் பணிப்பாளர் வைத்தியசாலையில் உள்ள குறைபாடுகள் குறித்து விளக்கமளித்தார். குறிப்பாக தாதியர் பற்றாக்குறை பெருங் குறையாக உள்ளது. சுமார் ஆயிரத்து 500 பேர்வரை பணிக்குத் தேவைப்படுகின்ற போதும் தற்பொழுது சுமார் 450 இற்கும் குறைவானவர்களே பணியில் உள்ளனர். நோயாளர் வருகை அதிகரித்துள்ள நிலையில் தாதியர் பற்றாக்குறையினால் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது. அந்தப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.

வைத்தியசாலையில் உட்கட்டமைப்புகள் ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும். அதன்மூலமாக இங்கு பணிகளை இலகுவாக்க முடியும். அதற்கு சர்வமதப் பேரவை உதவ வேண்டும் என்றும் வைத்தியசாலைத் தரப்பினரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த சர்வமதக் குழுவினர், உட்கட்டமைப்பை ஒழுங்குபடுத்த உபகரணங்களை வழங்குவதாக உறுதியளித்தார் என பதில் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை யாழ். போதனா வைத்தியசாலையில் மனித உடற்பாகங்களை எரியூட்டுவதற்கான இயந்திரம் ஒன்றைப் பெற்றுத் தருமாறும் வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் சர்வமதப் பேரவையிடம் வேண்டுகோள் விடுத்தார். அது தொடர்பில் ஆராய்வதாகவும் சர்வமதக் குழு தெரிவித்துள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் சத்திரசிகிச்சைகள், நோய்கள் காரணமாக அகற்றப்படும் மனித உடற்பாகங்கள், மனித உடற்கழிவுகள் என்பன சிரமத்தின் மத்தியில் வைத்தியசாலையில் வைத்து தொற்று நீக்கப்பட்டு பின்னர் அதற்குரிய கழிவு குழாய் ஊடாக வைத்தியசாலையில் இருந்து வெளியேற்றப்பட்டுவருகின்றன.

மாற்று வழி இன்மையால் ப்ல வருடங்களாக இந்த முறையே பின்பற்றப்பட்டு வருகிறது. இது சிரமமானது.

இந்த நிலையை இலகுவாக்கவே மனித உடற்பாகங்களை எரிப்பதற்கான இயந்திரம் ஒன்று வைத்தியசாலையில் பொருத்தப்படுவது கட்டாயதேவையாகவுள்ளது. அந்த இயந்திரம் 9 மில்லியன் ரூபா பெறுமதியானது என்று தெரிவிக்கப்படுகிறது. அது பற்றி ஆராய்வதாக சர்வமதக்குழு தெரிவித்துள்ளது என்று தெரிவித்தார் பதில் பணிப்பாளர்.

நேற்றைய சந்திப்பில் அமெரிக்காவைச் சேர்ந்த சமாதானப் பேரவைச் செயலாளர் சுகிஸோ, ஜப்பான் சமாதானப் பேரவைத் தலைவர் சக்காய், ஐரோப்பாவின் சமாதானப் பேரவைச் செயலாளர் லியான் பென்டாஸ்டோஸ் ஆகியோர் தலைமையிலான 15பேர் கொண்ட குழுவினர் கலந்து கொண்டனர். (ஐ-4)

## நீண்ட கால இழுபறிக்குப் பின்னர்

# யாழ். போதனா வைத்தியசாலை "லிப்ற்" பயன்பாட்டுக்கு வந்தது

யாழ்ப்பாணம், நவ.8

யாழ். போதனா வைத்தியசாலையில் நான்கு மாடிக் கட்டடத் தொகுதிக்கான இரண்டு 'லிப்ற்'களில் ஒன்று நேற்று பொருத்தும் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு விடப்பட்டது. மற்றைய 'லிப்ற்' பொருத்தம் பணி தொடர்கிறது.

சுமார் ஒன்றரை வருடங்களாக மின்சார சபையினரால் இழுத்தடிக்கப்பட்டு வந்த 'லிப்ற்' அமைக்கும் பணியில் நேற்றைய தினம் ஒரு 'லிப்ற்' இயங்க வழி பிறந்துள்ளது. இதனால் அந்த கட்டடத் தொகுதியிலுள்ள நோயாளர்கள், அந்த விடுதிகளுக்குச் செல்லும் வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்களின் பணி இலகுவாக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் நோயாளர்களை கைத்தாங்கலாக நான்கு மாடி வரை தோளில் தூக்கிச் சென்றும், மேலிருந்து கீழே இறங்கியும் பாடுபட்ட சென். ஜோன்ஸ்அம்புலன்ஸ் பணியாளர்களுக்கும், வைத்திய சாலை ஊழியர்களுக்கும் அந்தச் சிரமங்கள் நீங்கியுள்ளன.

'' இதுவரை காலமும் தொடர்ந்து நோயாளர்களை காவியபடி படிகளில் ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தோம் இன்று (நேற்று) சற்று ஆறுதலாக உள்ளது என்றார் செஞ்சிலுவைச் சங்க பணியாளர் ஒருவர்.

மற்றைய லிப்ற்றும் விரைவில் பொருத்தப்பட்டு பயன்பாட்டுக்கு விடப்பட்டால் மாத்திரமே - 'லிப்ற்' இன் பயன்பாட்டை முழுமையாக அடைய முடியும்.

சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் வைத்திய சாலையில்'லிப்ற்' அமைக்கவென இலங்கை மின்சார சபைக்கு வைத்திய சாலை நிர்வாகம் 81 இலட்சம் ரூபாவை வழங்கியிருந்தது. தற்போது அந்தப் பணியில் அரைவாசி நிறைவடைந்துள்ளது எனபது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# சமாதானத்தை ஏற்படுத்துவதானால் வடக்கில் படைக்குறைப்பு அவசியம்

## சர்வமதக் குழுவிடம் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், நவ. 8

இனங்களுக்கிடையே சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த வேண்டுமானால் வடக்கில் இராணுவத்தின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும். இதனைவிட வடமாகாண தேர்தலை நடத்த வேண்டும். சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான குழுவின் செயலாளர் பரமநாதன் சரவ மதக் குழுத் தலைவரிடம் சுட்டிக்காட்டினார்.

சர்வமதத் தலைவர்களுடனான கலந்துரையாடல் நேற்று யாழ். வர்த்தக சங்கத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தொடர்ந்து அவர் தெரிவித்த போது-

இலங்கையில் சமாதானம் ஏற்படுத்தப்பட்ட போதும் வடக்கு, கிழக்கில் அவ்வாறானதொரு நிலையை உணர முடியாதுள்ளது. போரால் பாதிக்கப்பட்ட மக்கள் சமாதானமும் நல்லிணக்கமும் இல்லாத சூழலிலேயே வாழ்ந்து கெண்டிருக்கிறார்கள்.

குறிப்பாகக் காணி அபகரிப்பு இராணுவத் தலையீடு, மீள்குடியமர முடியாத நிலைமை இராணுவக் கட்டுப்பாடு, கண்ணிவெடி அகற்றல் சீராக நடைபெறாமை, புத்தர் சிலைகள் உடைக்கப்படுகின்றமை போன்ற பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வதாகவும் அவர் சர்வமதத் தலைவர்களிடம் சுட்டிக்காட்டினார். (ஐ-14)

# கடந்த ஒரு வாரத்தில் 15 பேருக்கு 'டெங்கு'

இந்த மாதத்தின் முதல் வாரத்தில் மாத்திரம் டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு 15 பேர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

திருநெல்வேலி, குருநகர், அரியாலை, வட்டுக்கோட்டை, கந்தர்மடம், நல்லூர், வடமராட்சி, திக்கம், சுழிபுரம், நல்லூர் ஆகிய இடங்களிலிருந்தே இந்த 15 பேரும் டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளனர். மழைகாலம் ஆரம்பித்து விட்டதனால் டெங்குப் பரவல்தொடர்பில் அனைவரும் அவதானமாக இருத்தல் வேண்டும். சில நாள்களாக மழை இல்லாதுவிடினும் டெங்குத் தாக்கம் பெருக வாய்ப்புள்ளது.(ஐ- 4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதங்கள் ஊடாக நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும்

**சர்வமத சமாதானக் குழுத் தலைவர் கூறுகிறார்**

யாழ்ப்பாணம், நவ.8

மதங்கள் ஊடாகவே நாட்டில் சமாதானம் ஏற்படுத்தப்படவேண்டும். மதங்கள் இனரீதியாகவும் மதரீதியாகவும் மக்களை இணைக்கும் செயற்பாடுகளைமேற்கொள்ள வேண்டும். மாறாகப் பிரிவினைவாதத்தை ஏற்படுத்துவதாக இருந்தால் அதனால் சமாதானம் ஏற்படாது எனத் தெரிவித்தார் அகில இலங்கைச் சர்வமத சமாதானக் குழுத் தலைவர் பெல்லன்விலா விமலரட்ணதேரர்.



சர்வமத சமாதானக் குழுவின் பிரதிநிதிகள் மற்றும் ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பா நாடுகளின் பிரதிநிதிகள் ஆகியோருடனான சந்திப்பு ஒன்று நேற்றுப் புதன்கிழமை யாழ்.வர்த்தக சங்கத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கருத்துரை வழங்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சர்வமதக் குழு மதங்கள் ஊடாக ஒற்றுமையை ஏற்படுத்தி நாட்டில் சமாதானத்தை உண்டுபண்ணும் செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. மக்கள் மத்தியில் இன, மத முரண்பாடுகளைத் தோற்றுவிக்காமல் நல்லெண்ணத்தை ஏற்படுத்தி சமாதானமாக வாழ வேண்டும் என்பதே எமது குழுவின் செயற்பாடாக உள்ளது - என்றார்.

யாழ்ப்பாண சர்வமத சமாதானக் குழுத் தலைவர் பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமெரிக்காவின் ஐக்கிய பேரவை செயலாளர் சுகினோ, ஜப்பான் நாட்டு சமாதானபேரவைத்தலைவர் கச்சாய், பிரிட்டனின் சர்வமத பேரவை செயலாளர் ஸ்ரெயின் வின்செஸ்ற் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.(த-14)

## நெடுந்தீவு மேற்குப் பிரதேசத்துக்கு மின்சாரம் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், நவ.8

நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கான மின்சார விநியோகம் கடந்த சனிக்கிழமை வழமைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்பட்டபோதும் நேற்றுப் புதன்கிழமை வரை அது கிடைக்கவில்லை என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

**சமீபத்தில் வீசிய புயல் காரணமாக மின் கம்பங்கள் சரிந்து விழுந்ததை அடுத்து மின் விநியோகம் பாதிக்கப்பட்டது.**

சமீபத்தில் வீசிய புயல் காரணமாக மின் கம்பங்கள் சரிந்து விழுந்ததை அடுத்து மின் விநியோகம் பாதிக்கப்பட்டது.

இதனைச் சீர்செய்யும் பொருட்டு மின்கம்பங்களை மீள நிறுத்தும் நடவடிக்கைகள் கடந்த வெள்ளிக்கிழமை நிறைவடையும் எனவும் மறுநாள் மின்சாரத்தை வழங்கக் கூடியதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது. மின்கம்பங்கள் சீர் செய்யப்பட்டுள்ள போதும் மின் விநியோகம் இதுவரை இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (த-7)

## சுதுமலை தெற்கில் கோழிகள் திருட்டு

வலி.தென்மேற்கு,நவ.8

இரவு நேரம் மழை பெய்து கொண்டிருந்ததைப் பயன்படுத்தி ஒரு வீட்டுக்குள் நுழைந்த திருடர் அங்கு கூட்டில் அடைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் ரூபா 8 ஆயிரம் பெறுமதியான கோழிகளைத் திருடிச் சென்றுள்ளார்கள்.

இந்தத்திருட்டு சுது மலை தெற்கில் உள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவரின் வீட்டில் இடம்பெற்றுள்ளது. இதுபற்றிக்கூறப்படுவதாவது:-

மேற்படி வீட்டில் வசித்து வரும் வயோதிபத் தம்பதிகள் இரவு நேரம் தூக்கத்திலிருந்த சமயம் பார்த்து மழை பெய்துகொண்டிருந்ததைப் பயன்படுத்தி அங்கு சென்ற திருடர் கூட்டில் அடைத்துவைக்கப்பட்டிருந்த சுமார் 8 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழிகளை கூட்டை வெட்டித் திருடிச் சென்றுள்ளனர். (த-115)

# வலி.வடக்கில் மாணவர்கள் பலர் பாடசாலை செல்லாத நிலையில்

**அவர்களை மீள இணைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பம்**

*வலி.வடக்கு, நவ.8*

*வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் அண்மைக்காலத்தில் பாடசாலைகளில் இருந்து இடை விலகியவர்கள் அல்லது பாடசாலை செல்லாத மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகக் காணப்படுவதாகத் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.*

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள பல இடங்கள் அண்மைக்காலத்தில் மீளக்குடியமர்வு இடம்பெற்ற பகுதிகளாகும்.

இந்தப் பகுதிகளில் உள்ள மாணவர்களில் பலர் தமது சொந்த இடத்துக்கு அண்மையாக உள்ள பாடசாலைகளில் கற்காது இடம்பெயர்ந்த வேளையில் கற்ற பாடசாலைகளிலேயே தொடர்ந்தும் கற்கும் நிலைமை காணப்படுகின்றது. இந்தப் பாடசாலைகள் தூர இடங்களில் உள்ளமையால் பெரும் சிரமங்கள் ஏற்படுகின்றன.

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 120 மாணவர்கள் பாடசாலை செல்லாமல் இருப்பதாகவும் இதில் 20 மாணவர்கள் மீள இணைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாணவர்கள் பாடசாலை செல்ல வேண்டிய வயதில் பாடசாலை செல்லாமல் இருப்பதாகவும் இதனை இனம் கண்டு உரிய அதிகாரிகள் மூலம் மீண்டும் பாடசாலைகளில் இணைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை சுகாதாரத் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-86)

## உரும்பிராய் கிழக்கில் கடை உடைத்து திருட்டு

வலி.வடக்கு, நவ.8

இரவு வேளையில் உரும்பிராய் கிழக்குப் பகுதியில் உள்ள பலசரக்குக் கடையை உடைத்துச் சுமார் 23 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடிச் செல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இரவு கடையைப் பூட்டி விட்டுச் சென்ற கடையின் உரிமையாளர் காலையில் கடையைத் திறக்க வந்த போது கடை உடைக்கப்பட்டு பால் மா வகைகள் உட்பட பல்வேறு பொருள்களும் திருடப்பட்டுள்ளமை தெரியவந்தது.

இது தொடர்பாகக் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு யிடப்பட்டதை அடுத்து கோப்பாய் பொலிஸார் தொடர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-86)

## புத்தகம் இணையத்தின் தமிழ் மென்பொருள் அறிமுக விழா

புத்தகம் இணையத்தளம் தமிழ் மென்பொருள் அறிமுக விழா நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ்.நாவலர் மண்டபத்தில் நடைபெறும். இந்த விழாவில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

## தாக்குதலுக்கு இலக்கான இரண்டு பேர் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி,நவ.8

தென்மராட்சிப் பிரதேசத்தின் வெவ்வேறு இடங்களில் தாக்குதலுக்கு இலக்கான இரண்டு பேர் சாவகச்சேரி வைத்திய சாலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கைதடி - நாவற்குழியைச் சேர்ந்த கருணசிங்கம் சதீஸ்குமார் (வயது-22) மீசாலை மேற்கைச் சேர்ந்த குலசிங்கம் சிவலோஸ்வரன் (வயது-28) ஆகியோரே தாக்குதல்களுக்கு இலக்கான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர். (த-9)



*எபேட் கணினி நிறுவனத்தின் "இளம் விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு 2012" என்னும் தொனிப்பொருளில் அமைந்த கண்காட்சி யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறுகிறது. இந்தக் கண்காட்சியில் பாடசாலை மாணவர்கள், தனியார் நிறுவனங்கள், தனிநபர்கள் ஆகியோர் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களைக் காட்சிப்படுத்தியுள்ளனர். (த-13)*

# சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு புதியவர்களை நியமியுங்கள்

**ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கோரிக்கை**

வலி.வடக்கு, நவ.8

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் இயங்கும் சிவில் பாதுகாப்புக் குழுக்களின் காலம் நிறைவடைந்துள்ளமையால் புதியவர்களை உள்ளடக்கிய சிவில் பாதுகாப்புக் குழுக்களை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

உடுவில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தலைமையில் பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாதுகாப்பு நிலைமை தொடர்பாக இதில் ஆராயப்பட்டது. இதன்போது பின்வரும் விடயங்கள் சபையின் கவனத்துக்கு கூட்டத்தில் கலந்துகொண்ட[illegible]களினால் முன்வைக்கப்பட்டன.

தற்போது இயங்கும் சிவில் பாதுகாப்புக் குழுவின் கால எல்லை நிறைவடைந்துள்ளதுடன் பல குழுக்கள் இயங்காத நிலையிலும் காணப்படுகின்றன.

இத்தகைய குழுக்களைப் புனரமைப்புச் செய்து கிராமங்களில் இடம்பெறும். குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் தமிழ் தெரிந்த பொலிஸாரின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுவதனால் பொதுமக்கள் பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாடுகளைப் பதிவு செய்வதில் சிரமங்களுக்கு உள்ளாகின்றார்கள். இதனை நிவர்த்திக்கும் வகையில் மேலும் தமிழ்ப்பொலிஸாரை பொலிஸ் நிலையங்களில் நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனப் பிரதேச சபை உறுப்பினர்களினால் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயங்கள் தொடர்பாக உரிய பொலிஸ் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-86)

# மழை நீரை கடலுக்குள் விடாது அராலியில் தேக்கும் திட்டம்

**ஆராய்கிறது வலி.மேற்குப் பிரதேச சபை**

யாழ்ப்பாணம், நவ.8

வலி.வடக்கு- வலி.தென்மேற்கு ஊடாக வழுக்கையாறு பாலத்தை அடையும் மேலதிக மழைநீரை கடலுக்கு செல்லவிடாமல் தேக்கும் திட்டம் குறித்து வலி.மேற்குப் பிரதேச சபை ஆராயவுள்ளது.

பெரும்போக பயிர்ச் செய்கைக் காலங்களில் பெய்யும் மழை நீர் வழுக்கையாற்று படுக்கையூடாக அராலிப் பாலத்தை அடைகின்றது.

இந்தப் பாலத்தின் ஊடாக மேலதிகமாகச் செல்லும் மழை நீர் கடலுடன் கலக்கிறது.

வலி.மேற்குப் பிரதேச சபையினர் நீர்ப்பாசன பொறியியலாளர் திணைக்களம், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, இரணைமடு திட்ட அலுவலகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் மேலதிகமான மழை நீரை மண்தடுப்பு அணை அமைத்து தேக்குவதற்கான ஆலோசனையை முன்வைத்துள்ளனர்.

கடந்த வாரம் தொழில்நுட்ப அலுவலர்களான ம.சிவநாதன், வே.புலேந்திரன் சபை உறுப்பினர் த.நடனேந்திரன் ஆகியோர் உள்ளிட்ட குழு இதனை ஆய்வு செய்ததுடன் நில அளவையும் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படிதிட்டத்தைவடக்கு மாகாண கண்காட்சியிலும் முன்வைக்க சபைத் தலைவர் திருமதி நா.ஐங்கரன் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றார். (த-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவாக 270 வாக்குகள்தேவை. அமெரிக்காவில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பராக் ஒபாமா 274 வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட மிட் ரோம்னி 201 வாக்குகளை மட்டுமே பெற்று தோல்வியைத் தழுவியுள்ளார்.

ரோம்னியைவிட 73 மேலதிக வாக்குகளைப் பெற்று மீண்டும் வெற்றிபெற்றுள்ள ஒபாமாவுக்கு உலகத் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். அதேவேளை, பராக் ஒபாமா டுவிட்டர் இணையதளம் மூலம் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தம்மை வெற்றிபெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார். மேலும் நான்கு ஆண்டுகளுக்குப் பதவி வகிக்க வாய்ப்பளித்த மக்களுக்கும் அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

## ஆயுதப்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
டைப் பிளவுபடுத்துங்கள் என்று அவர் குறிப்பிடுகின்றார் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் குறிப்பிட்டார்.

இன்று தமிழ் தலைமைகள் நாம், ஐக்கிய இலங்கைக்குள்ளே தீர்வைக் கோருகிறோம். நேர்மையான அதிகாரப்பகிர்வு என்ற நிபந்தனையுடன் ஒன்றுப்பட்ட இலங்கையைக் கோருகிறோம். நாட்டைப் பிரிக்க வேண்டும் என நாங்கள் கேட்கவில்லை. ஆயுதப் போராட்டம் நடத்தவில்லை. புலிகளுக்குப் பயந்துதான் அதிகாரப்பகிர்வு வந்தது என்று சொன்னால் என்ன அர்த்தம்?' அதிகாரப் பகிர்வு வேண்டும் என்றால் புலிகளை மீண்டும் கொண்டு வாருங்கள் என்றுதானே அர்த்தம்' என்றும் மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

'அதிகாரத்தை பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம்' என்ற தலைப்பில் கொழும்பில் நேற்று இடம்பெற்ற எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய மனோ கணேசன் கூறியதாவது:-

'1987களில், மாகாணசபை முறைமையும், 13ஆவது திருத்தமும் உருவானது. ஆனால், அதிகாரப்பரவலாக்கல் கொள்கை என்பது இந்த நாட்டில், புலிகளுக்கு முன்னமே உருவாகி இருந்ததை, தெரிந்தும் தெரியாததுபோல் சிறுபிள்ளைத்தனமாக விமல் வீரவன்ஸ பேசுகிறார்.

1958இல் பண்டா - செல்வா ஒப்பந்தம், 1965இல் டட்லி - செல்வா ஒப்பந்தம் என்பவை அதிகாரப்பரவலாக்கல் கொள்கையின் அடையாளங்கள். அப்போது புலிகள் இல்லையே. அதுமட்டும் அல்ல, சுதந்திரத்துக்கு முன்னர், 1940களில், கண்டி சிங்கள பிரதானிகள், யாழ்ப்பாணத்துக்குச் சென்று இலங்கைக்கு சமஷ்டி ஆட்சி முறையே என்று தேவை கூறி அதற்கு தமிழர்களின் ஆதரவை கோரினார்கள்.

இந்த நாட்டின் சரித்திரம் எமக்கு தெரியாது என விமல் வீரவன்ச நினைப்பது மடமைத்தனம்.-என்றார். (த)

## அரசமைப்புக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
மேற்படி பிரேரணை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கான தெரிவுக் குழு சபாநாயகரால் பெயரிடப்பட்டு ஒரு மாத காலத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப் படும். அதுவரையில் எவரும் இது விடயம் தொடர்பாக இறுதி முடிவுக்கு வரவேண்டாம் என்றும் அரசு தெரிவித்தது.

மகாவலி கேந்திர நிலைய கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இதன்போது உரையாற்றிய அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கூறியவை வருமாறு:-

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான அரசியல் குற்றப்பிரேரணை நேற்று(நேற்றுமுன்தினம்) நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்பட்டது. இந்த அரசியல் குற்றப் பிரேரணையானது நாட்டின் அரசியல் யாப்பின் சட்டதிட்டங்களுக்கமையவே கொண்டுவரப்பட்டுள்ளது. நாட்டின் சட்ட வரையறைக்கமையவே நாம் செயற்படுகின்றோம். இது நாட்டின் வரலாற்றில் பிரதம நீதியரசருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட முதலாவது அரசியல் குற்றப் பிரேரணையல்ல.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் இப்போது தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. என்னென்ன குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன எனவும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. இந்தப் பிரேரணை தொடர்பான விசாரணை நடவடிக்கைகள் அனைத்தும் நாட்டின் அரசியல் யாப்பு, நாடாளுமன்ற அதிகாரங்களுக்கமைய மேற்கொள்ளப்படும் - என்றார்.

## அடாத்தாக...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
(ஜே/287) கிராம அலுவலர் பிரிவில் 179.43 பரப்புக் காணியையும், ஊரெழு பொக்கணையில் வலி.கிழக்குப் பிரதேச சபைக்குச் சொந்தமான 110 பரப்புக் காணியையும், வாதரவத்தை (ஜே/280) கிராம சேவகர் பிரிவிலும் படைமுகாம் அமைப்பதற்குப் படையினர் கோரியிருந்தனர்.

இதில் ஊரெழு பொக்கணையில் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியைப் படையினருக்கு வழங்குவதில்லை என்று பிரதேச சபை தீர்மானத்தைச் சபையில் நிறைவேற்றியிருந்தது. இந்தநிலையில் மேற்படி காணியில் தற்போது படையினர் அடாத்தாக முகாம் அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளதாக பிரதேச சபையின் தவிசாளர் அ.உதயகுமார் தெரிவித்தார்.

தம்பாலை - கதிரிப்பாய் (ஜே/287) கிராம அலுவலர் பிரிவுக் காணியை வழங்குமாறு இராணுவத்தினரால் கோரிக்கை விடுக்கப்பட்டது. கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி காணியைப் படையினருக்கு வழங்குதற்குச் சம்மதம் தெரிவிக்கப்பட்டதாகக் கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் தெரிவித்துள்ள போதும், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் சில்வஸ்திரி அலன்ரின் அந்தக் காணிகள் படையினருக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து வருகிறார்.

இருந்தபோதும் மேற்படி காணியில் படையினர் முகாம் அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் படையினர் கோரிய காணிகள் உட்பட யாழ்.மாவட்டத்தில் படையினர் கோரிய எந்தக் காணிகளும், மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் சம்மதம் வழங்கப்படாத நிலையில் படையினர் தாம் கோரிய காணிகளில் அடாத்தாகப் படைமுகாம்களை அமைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(த-5)

## 2013...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
யிடப்பட்டன. ஜனாதிபதியின் இன்றைய வரவு - செலவுத் திட்ட உரை தொடர்பான செய்திகளைச் சேகரிக்கும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு ஊடகவியலாளர்கள் அரச தகவல் திணைக்களத்தில் வைத்து ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரால் சோதனையிடப்பட்டு அங்கிருந்து நாடாளுமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

வரவு-செலவுத்திட்டம் இன்று சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து நாளை முதல் டிசெம்பர் மாதம் 8ஆம் திகதிவரை வரவு-செலவுத்திட்டம் மீதான விவாதம் இடம்பெற்று அது வாக்கெடுப்புக்கு விடப்படும். இந்த வரவு-செலவுத்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் கடந்த மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அந்தச்சட்டமூலத்தின்படி அடுத்த ஆண்டின் மொத்த செலவுக்காக ஒரு இலட்சத்து 33 ஆயிரத்து 500 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புச் செலவுக்காக 28 ஆயிரத்து 950 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

## இலங்கை விடயத்தில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
விரும்பும் ஒபாமா இனி இலங்கை விடயத்தில் மென்போக்கை கடைப்பிடிப்பாரெனத் தான் நம்புகிறார் என்று அந்த அமைப்பின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் பராக் ஒபாமா வெற்றியீட்டியுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''மிட்ரோம்னி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றிருப்பாரானால், ஈரான் மீது தாக்குதல் தொடுப்பதற்கு இஸ்ரேலுக்கு முழுமையாக உதவியளித்திருப்பார். இதனால் உலகளாவிய ரீதியில் பாரிய பிரச்சினைகள் உருவாகியிருக்கும். ஏன் மூன்றாம் உலகப் போர் கூட வெடித்திருக்கலாம்.

ஈரான் மீதான போர் முஸ்லிம் நாடுகளையும், அமெரிக்க எதிர்ப்பு நாடுகளையும் கொதிப்படையச் செய்திருக்கும். அதன் பின்னர் கூட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப் படும். இதனால் பாரிய விளைவுகள் ஏற்பட்டிருக்கும்'' என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இறுதிப்போரில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் அலுவலகத்தில் உறவினர்கள் பதிவு செய்துள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதியில் இருந்து இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தின் நடமாடும் அலுவலகம் ஒன்று கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் அலுவலகத்தின் ஒரு பகுதியில் ஒவ்வொரு புதன் கிழமையும் இயங்கி வருகின்றது.

இந்தநிலையில் நேற்றுப் புதன்கிழமை மேற்படி அலுவலகத்தில் சுமார் இருபதுக்கும் மேற்பட்ட உறவினர்கள் தங்களுடைய பிள்ளைகள் மற்றும் இறுதிப் போர்க் காலத்தில் காணாமல் போயுள்ளதாகவும், அவர்கள் பற்றிய எந்த விதமான தகவல்களும் இதுவரை கிடைக்கவில்லை என்றும், இது தொடர்பான விவரங்களை பெற்றுத் தருமாறும் தமது முறைப்பாடுகளை கிளிநொச்சி நடமாடும் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளனர். இதைவிட ஏற்கனவே இருபத்திமூன்று வரையான முறைப்பாடுகள் காணாமல்போனமை தொடர்பாக கிளிநொச்சி நடமாடும் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(த-6)

## இலங்கைத் தமிழர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
பன்முக சமுதாயத்தைக் கொண்டவர்களாக இருப்பதால்தான் மீண்டும் அவரைத் தெரிவுசெய்துள்ளனர்.

பராக் ஒபாமா தனது முதலாவது பதவிக்காலத்தின்போது இலங்கையைப் பொறுத்தவரை மனித உரிமைகள் விடயத்திலும், அனைத்து மக்களும் சுயமரியாதையுடன், நியாயபூர்வமாக வாழவேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் மிகத் தெளிவாக இருந்துவந்தார். ஜெனிவாவின் மனித உரிமைகள் தொடர்பான அமர்வில் இலங்கை குறித்து விசேட பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்து அவரது தலைமையின் கீழ் தான் ஆக்கபூர்வமான விடயங்கள் இடம் பெற்றன. இதுபோன்ற கருமங்கள் தொடருமென்று நாம் நம்புகின்றோம். ஜனாதிபதியாக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஒபாமாவை வாழ்த்துகின்றோம். இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படவும், மக்கள் சுபீட்சத்துடன் வாழவும் ஒபாமா தலைமையிலான அமெரிக்க அரசு எப்போதும் உதவுமென்று நாங்கள் முழுமையாக நம்புகின்றோம் - என்றும் குறிப்பிட்டார் சம்பந்தன்.

## ஜனவரியில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
நீதம்பிள்ளையை மு.க.ஸ்டாலினும், நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலுவும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்தனர்.

அப்போது, டெசோ மாநாட்டுத் தீர்மானங்களின் அடிப்படையில், தி.மு.க. தலைவர் கருணாநிதி கையெழுத்திட்டு அனுப்பிய அறிக்கையை அவரிடம் கையளித்தனர்.

சுமார் 35 நிமிடங்கள் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் ஈழத் தமிழர்கள் விவகாரம் தொடர்பாக மு.க.ஸ்டாலின் எடுத்துரைத்துள்ளார்.

இதன்போதே மேற்கண்ட தகவலை தி.மு.கவின் பொருளாளர் மு.க.ஸ்டாலினிடம் நவநீதம்பிள்ளை உறுதிப்படுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக தி.மு.க. தலைமைக் கழகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையில் நடைபெற்ற போரில் 90 ஆயிரம் பேர் விதவைகளாக்கப்பட்டு, பரிதாப நிலையில் இருக்கின்றனர்.

தமிழர் பகுதிகளில் சிங்களவர்கள் குடியேற்றம் செய்யப்படுகின்றனர். அதனைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

போரின் போது வீடுகளை விட்டு இடம் பெயர்ந்தனர் என அறிவிக்கப்பட்ட ஒரு இலட்சத்து 25 ஆயிரம் தமிழர்களை மீண்டும் அவர்கள் பகுதிகளில் குடியமர்த்த வேண்டும் என ஸ்டாலின் எடுத்துரைத்தார். ஸ்டாலின் அளித்த ஆவணங்கள் முக்கியமானவை என்று நவநீதம் கூறினார்.

மேலும், இலங்கை போர்க் குற்றங்கள் மற்றும் நல்லிணக்க ஆணையப் பரிந்துரைகள் தொடர்பாக மனித உரிமைப் பேரவையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

இந்தத் தீர்மானம் அமெரிக்கா கொண்டு வந்து இந்தியா ஆதரித்ததாகும். இது எந்தளவுக்கு செயல்படுத்தப்படுகிறது என்பது தொடர்பாக, ஐ.நா. மனித உரிமை பேரவை மூலம் ஆய்வு செய்ய உள்ளோம். எனது (நவநீதம்பிள்ளை) தலைமையில் குழு ஒன்று ஜனவரி மாதம் இலங்கைக்குச் சென்று மேற்பார்வையிடும் என்று நவநீதம்பிள்ளை கூறினார்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
எனவே, வடக்கில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறவே கூடாது.''

- இவ்வாறு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முக்கிய இரு பங்காளிக் கட்சிகளான ஜாதிக ஹெல உறுமயவும், தேசிய சுதந்திர முன்னணியும் நேற்று கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

அத்துடன், வெளிநாட்டுச் சக்திகளுக்கு அடிபணியாது ஜனாதிபதி 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை ஒழிக்கவேண்டும் என்றும், இதற்காக மக்களை அணிதிரட்டுவோம் என்றும் அந்தக் கட்சிகள் சூளுரைத்துள்ளன.

13ஆவது அரசமைப்புத் திருத்தத்தைப் புலிகளுக்குப் பயந்து நீதிபதிகளை அச்சுறுத்தியே அன்று ஜே.ஆர். அமுல்படுத்தினார் என்றும் அந்தக் கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

கொழும்பு பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் ஜாதிக ஹெல உறுமயவும், தேசிய சுதந்திர முன்னணியும் நேற்று கூட்டாக ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தின.

அங்கு கருத்து வெளியிடும்போதே மேற்படி கட்சிகளின் தலைவர்களான அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்கவும், விமல் வீரவன்ஸவும் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

இங்கு உரையாற்றிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ஸ கூறியவை வருமாறு:-

ஹெல உறுமயவும் தேசிய சுதந்திரமுன்னணியும் இணைந்து முதல் தடவையாக ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடத்தியுள்ளன.

இந்த விடயத்திற்காக வெளிநாட்டு சக்திகளுக்கும் இந்தியாவுக்கும் அடிபணியாமல் தமிழர் விடுதலை முன்னணிக்கு எதிராகவும் இந்த விடயத்தில் மிக பலமாக நாங்கள் நிற்போம். அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கே முதலில் நாம் இணைந்துள்ளோம். இதன் பின்னர் நாடு முழுவதிலும் பல்கலைக்கழக மாணவர்கள், பௌத்த தேரர்கள், புத்திஜீவிகள் எனப் பலர் இதற்கு எதிராக எங்களுடன் இணைந்துள்ளனர்.

இந்த நாட்டில் மாகாணசபை என்ற ஒரு சபை தேவையில்லை. அதனால் அரசின் பணம் வீண்விரயமாகின்றது. ஒரு நாடு ஓர் ஆட்சி என்ற ரீதியில் நாடு முழுவதிலும் ஆட்சியமையவேண்டும். இம் மாகாண சபையினால் மக்களுக்கு ஒரு நன்மையும் கிட்டுவதில்லை. இதனால் மாகாண மத்திய அரசின் நிருவாகம் குழம்பிப்போயுள்ளது. விடுதலைப் புலிகள் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டன. இனி இந்தச் சட்டம் தேவையில்லை. என்றார் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

**அமைச்சர் சம்பிக்க ரணவக்க**

வடக்கில் விடுதலைப் புலிகளுக்காகவே - அவர்களது ஆயுதங்களைக் கீழே வைப்பதற்காகவே ஜே.ஆர். இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தார். ஆனால், விடுதலைப் புலிகள் ஆயுதத்தைக் கையளிக்கவில்லை. மாறாக, வெளிநாட்டுப்படை கொண்டுவரப்பட்டது. 66 ஆயிரம் பேர் இந்தச் சட்டத்தின் பின் இறந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் 29 ஆயிரம் சிங்கள மக்களும், 32ஆயிரம் முஸ்லிம் மக்களும் வெளியேற்றப்பட்டனர்.

வடக்கில் மாகாணசபை என்ற தேர்தல் நடைபெறக்கூடாது. அண்மையில் கொண்டுவரப்பட்ட 'திவிநெகும' சட்டம் நாடாளுமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டபோது உயர்நீதிமன்றம் 9 மாகாண சபைகளிலும் இச்சட்டம் கொண்டுவரப்படல் வேண்டும், வடக்கில் மாகாணசபைத் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் தமிழ்க் கூட்டமைப்பு ஆட்சிக்கு வரும். இதன் பின்னர் இந்த நாட்டில் எந்தவொரு சட்டத்தையும் நாம் அமுல்படுத்த முடியாது. அதற்கு வடக்கு மாகாணசபை தடையாக இருக்கும். வடக்கில் தமிழ்க் கூட்டமைப்பு பொலிஸ், காணி அதிகாரங்களையும் கொண்டுவந்து வடக்கு, கிழக்கை இணைத்து பெடரல் ஆட்சியைக் கொண்டுவந்துவிடும். அதன் பின்னர் இந்த நாட்டை ஒரு பிரிவினைவாதத்திற்கும் தனி ஈழம் அமைப்பதற்கும் நாமே வழியமைத்துக் கொடுப்பது போன்றதாகும். அதற்காகவே இரு கட்சிகளும் இணைந்து இதனைத் தடுக்க முன்வந்துள்ளோம் - என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு காணிப் பிரச்சினைக்கு தீர்வு காண ஐ.நா. ஒத்துழைப்பு

கொழும்பு, நவ 8

இலங்கையின் வடக்கில் போரினால் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியமரும் போது எதிர்நோக்கும் காணிப் பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்துவதாகக் கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகம் தெரிவித்துள்ளது.

மீள்குடியமரும் மக்கள், காணி, வீடு மற்றும் சொத்துக்கள் தொடர்பில் பாரிய சவால்களை எதிர்நோக்குகின்றனர். போருக்கு பின்னர் ஆயிரக்கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் மீளத் திரும்பிய பலருக்குக் காணி தொடர்பான ஆவணங்கள் இல்லை. எனவே அவர்களால் தமது காணிகளை, வீடுகளை மீண்டும் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக மீள் குடியமர்ந்துள்ள குடும்பங்கள், தமது வாழ்க்கையை மீண்டும் ஆரம்பிப்பதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். நட்ட ஈடுகளைப் பெற்றுக் கொள்வதில், வீடுகளை திருத்தியமைத்தலில் அவர்கள் பாரிய சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

இதனையடுத்து, குறித்த பிரச்சினையை தீர்க்கும் முகமாக ஐக்கிய நாடுகளின் கொழும்பு அலுவலகம், மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில் உள்ள சுமார் 45 அரச பணியாளர்களுக்கு கணினிகள், பிரதி இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வழங்கியுள்ளதாக ஐக்கிய நாடுகள் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில் குறித்த அரச பணியாளர்களின் ஊடாக மீள்குடியமர்ந்தோர் தமக்குரிய ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும் என்று அலுவலகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (த)

8 வயதுச் சிறுமி வன்புணர்வின் பின் கொலை

## சந்தேக நபர்களுக்கு நிபந்தனையுடன் பிணை

யாழ்ப்பாணம், நவ. 8

சுழிபுரத்தில் 8 வயதுச் சிறுமியைக் கடத்திச் சென்று வன்புணர்வுக்குட்படுத்திக் கொலை செய்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட இரண்டு சந்தேகநபர்களும் யாழ். மேல் நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இது தொடர்பான பிணை விண்ணப்பம் யாழ். மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. அதனைப் பரிசீலித்த மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் சந்தேகநபர்களுக்குப் பிணை வழங்கினார்.

சுழிபுரத்தைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி சாளினி என்ற சிறுமியே கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் கடத்திச் செல்லப்பட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டவராவார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தவம் சுரேஸ்குமார், முருகேசு கேதீஸ்வரன் ஆகிய இருவரும் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். மல்லாகம் நீதிமன்ற உத்தரவுக்கமைய அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

அவர்களைப் பிணையில் விடுவிக்கும்படி கோரி பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. அதனடிப்படையில் சந்தேகநபர்கள் தலா 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், தலா 2 லட்சம் ரூபா பெறுமதியான 2 ஆள் பிணையிலும் விடுவிக்கப்பட்டனர். அத்துடன் ஒவ்வொரு மாதமும் முதலாம், 15 ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும் என்றும் நீதிமன்றம் நிபந்தனை விதித்தது.

(த-4)

# பிரதம நீதியரசரின் சொத்து விவகாரம் வெளியிட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை

### தேசிய சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, நவ 8

பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கவின் சொத்துகள் பற்றிய விவரத்தை பகிரங்கப்படுத்தியதன் மூலம் இலங்கை ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தண்டனை பெறக்கூடிய குற்றம் ஒன்றைப் புரிந்துள்ளதாக சட்டத்தரணிகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையை திரும்பப்பெறுமாறு கோரி கையெழுத்துப் போராட்டம் ஒன்றை கொழும்பு மேல்நீதிமன்ற வளாகத்தில் தேசிய சட்டத்தரணிகள் சங்கத்தினர் நடத்தினர்.

இதன்போது செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரான உபுல் ஜெயசூரிய:-

குற்றப் பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்ட பின்னர், பிரதம நீதியரசரின் வங்கிக் கணக்குகள் மற்றும் சொத்துக்கள் பற்றிய விவரங்கள் பகிரங்கப் படுத்தப்பட்டன.

குற்றப் பிரேரணை தாக்கல் செய்யப்பட்ட பின்னர் நீதியரசரின் தனிப்பட்ட சொத்து விவரத்தை வெளியிட்டமை, நாடாளுமன்ற விதிமுறைகளின்படி தண்டனைக்குரிய குற்றமாகும். இந்தக் குற்றத்தை செய்த ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்து, தண்டனை வழங்க நீதிமன்றங்களுக்கு அதிகாரம் இருக்கின்றது.

இந்தநிலையில் பிரதம நீதியரசர் மீது முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை குறித்த விடயங்களை கண்காணிக்க சர்வதேச கண்காணிப்பாளர் கள் அவசியம் தேவை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். தமது கையெழுத்துப் பெறும் செயற்பாடு நாடு முழுவதும் நடைபெறும் என்றும் சட்டத் தரணிகள் சங்கத்தினர் தெரிவித்தனர். (ஐ)

# உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிடமாட்டோம்

புதுடில்லி, நவ.8

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றப்பிரேரணை தொடர்பில் நாம் கருத்து வெளியிட முடியாது. அது ஒரு உள்நாட்டு விவகாரம். அதனை அவர்களே தீர்த்துக் கொள்ள வேண்டும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் இந்திய வெளிவிவகார அமைச்சர் குர்ஷித்.

இலங்கையில் பிரதம நீதியரசருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள குற்றப் பிரேரணை தொடர்பில் அமெரிக்கா கருத்து வெளியிட்டுள்ள நிலையில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேவையான தருணங்களில் இந்தியா இலங்கை அரசுடன் இணைந்து பணியாற்றும். ஆனால் உள்நாட்டு விவகாரங்களில் அது ஒரு போதும் தலையிடாது. குறிப்பாக ஜனநாயகத்தைத் தாங்கி நிற்கும் துறைகளுக்கு இடையில் அதிகாரப் பிரிப்பு என்பது முக்கியமானது. ஆனால் நீதியரசர் விவகாரம் தொடர்பில் கருத்துத் தெரிவிப்பது உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதாக அமையும்.

நாம் ஜனநாயகத்துக்கு ஆதரவளிக்கின்றோம். ஜனநாயகத் [illegible] கின்றோம். ஜனநாயகத்தைக் கொண்டாடுகின்றோம்- என்றார்.(ஐ)

## மரண அறிவித்தல்கள்

### சவரிமுத்து தோமஸ்

(முன்னாள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தொழில்நுட் பவியலாளர்)



நாவாந்துறை சேமக்காலை வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து தோமஸ் நேற்று (07.11.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவரி முத்து-சூசானம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்ற பிரான்சிஸ் மற்றும் அடைக்கலம் தம்பதியரின் அன்பு மருமகனும், ஈஸ்வரியின் அன்புக் கணவரும், வினோரேகா, ஜெனி (ஆசிரியர், Kids Park திருநெல்வேலி), நீலுகா (பல்கலைக்கழகம், மட்டக்களப்பு), டெனிசன் (விரிவுரையாளர்-ESOFT) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பெகினியின் (ஆசிரியர்-அக்குறண) அன்பு மாமனும், சிங்கராயர், மிக்கேசம்மா, காலஞ்சென்ற பிலோமினம்மா, யோகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், வின்சன் ரவி (நவாலி), தயாளன் (இளவாலை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (08.11.2012) வியாழக்கிழமை பி.ப 3.30 மணிக்கு நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

18, சேமக்காலை வீதி,
நாவாந்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி அலெக்சாந்திரா அமிர்தநாயகம்

(இளைப்பாறிய ஆசிரியர் யா/திருக்குடும்ப கன்னியர்மடம்)



யாழ்ப்பாணம் வசாவிளானைப் பிறப்பிடமாகவும் இல.128, வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தைப் வசிப்பிடமாகவும் கொண்ட அலெக்சாந்திரா அமிர்தநாயகம் கடந்த (05.11.2012) திங்கட்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற ஜேம்ஸ் அமிர்தநாயகம் (இளைப்பாறிய ஆசிரியர், யா/புனித பத்திரிசியார் கல்லூரி) அவர்களின் அன்புமனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பிப் பிள்ளை மரியமுத்து தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான அருட்சகோதரி மேரி லுசிலா (தி.கு),கிறிஸ்ரீன் பயஸ் மற்றும் புளொசம் மரியநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், விநோதினி திருச்செல்வம் (ஜேர்மனி), அலோசியஸ் புஸ்பராஜா (நீர்கொழும்பு) அருட்தந்தை ஜேம்ஸ் நாதன்(பங்குத் தந்தை,பளை) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக நாளை (09.11.2012) வெள்ளிக்கிழமை மு.ப 11 மணிக்கு திருக்குடும்ப கன்னியர் மடத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

அன்னாரது உடலம் பி.ப 1 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் இடம்பெறும் வழிபாட்டினைத் தொடர்ந்து பண்டத்தரிப்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மாலை 4 மணிக்கு தூய அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெறும் இரங்கல் திருப்பலியின் பின் பண்டத்தரிப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

அருட்தந்தை
ஜேம்ஸ் நாதன்

## கண்ணீர் அஞ்சலி



உடுவில் பிரதேச செயலகத்தில் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்
செல்ரன் றஞ்சித்றாஜ்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி எசக்கியல் எலிசபேத் (இராசமணி)
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம் வலிதெற்கு,
உடுவில்.

## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஊழியர்
தோமஸ் டெனிசன்
அவர்களின் அன்புத் தந்தையார்
சவரிமுத்து தோமஸ்
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன்
அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ESOFT METRO CAMPUS
ஊழியர்கள்

(25141)(3.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்

### கேள்வி அறிவித்தல் - 2013

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கருவாட்டுக் கடை, இறைச்சிக்கடைகள் 2013.01.01ஆம் திகதி தொடக்கம் 2013.12.31ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2012.11.22 பி.ப 12.00 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 2012.11.23 பி.ப 12.00 மணிவரை

கேள்வி திறக்கும் திகதி :- 2012.11.23 பி.ப 03.00 மணி

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதி **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்** எனும் முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

1. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்படப்பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிட சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

2. சங்கானை மரக்கறிச் சந்தைக்கு விண்ணப்பப் பத்திரம் பெற்றுக்கொள்ள விரும்புவோர் (கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்கள்) ஏதாவது ஒரு வங்கியில் தங்கள் பெயரில் ரூபா 200 000.00 க்கு குறையாது வைப்பில் உள்ளதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுணராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.

4. ஆகக் குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

5. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.

6. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை 30.11.2012ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.

7. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

8. 01.01.2013 முதல் சங்கானை மீன் சந்தையில் கோழி உரித்தல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. மீன் வெட்டும் இடத்தின் தூய்மையை குத்தகைகாரர் பொது சுகாதார பரிசோதகரின் அறிவுறுத்தலுக்கமைய பராமரிப்பதுடன் தொடர்ந்து இதனைக் கண்காணித்து நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

9. ஒப்பந்தகாரர் குத்தகை ஏற்கும் போது உள்ள கட்டடத்தின் தரம், கட்டட அமைப்புக்கள் யாவும் உரிய முறையில் பேணப்பட்டு குத்தகைக் காலம் பூர்த்தியடையும் போது மீண்டும் அதே நிலையில் கையளித்தல் வேண்டும்.

10. சந்தைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் சந்தைகளின் தூய்மைக்குப் பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகள் சேகரிப்பதற்குள்ள கூடைகளில் கழிவுகளை இடல்வேண்டும்.

11. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர் கொண்டு வரும் பொருள்களின் விற்பனை விலையில் 4%ம், மீன் கிலோ ஒன்றிற்கு ரூபா 5.00 உம், வியாபார நோக்கத்திற்கு வரும் லொறிக்கு ரூபா 30.00 உம், வியாபாரிகளின் பாவனையில் உள்ள பகுதியில் (மரக் கறிச்சந்தை, மீன் சந்தை, மீன் வெட்டும் இடம்) ஊடு ஒன்றிற்கு ரூபா 30.00 உம், துவிச்சக்கர வண்டி பாதுகாப்புக் கட்டணம் ரூ 5.00 உம், மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு கட்டணம் ரூ 10.00 உம் அறவிடலாம். மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் அறவிடக்கூடாது.

12. மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**2013 ஆம் ஆண்டு சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல | சந்தைகள் (துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையத்துடன்) இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடைகள் | மாத வாடகை சபைக்கு செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT, NBT நீங்கலாக) | கேள்விப் பிணைப்பணம் மீளளிக்கக் கூடியது | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (VAT, NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| சுழிபுரம் உப அலுவலகம் | | | | | |
| 01 | சத்தியகாட்டுச் சந்தை | | 1,097,800.00 | 5000.00 | 1000.00 |
| 02 | பொன்னாலைச் சந்தை (மூளாய்) | | 287,650.00 | 2000.00 | 500.00 |
| 03 | பல்லகட்டிச்சந்தை | | 12,210.00 | 500.00 | 250.00 |
| 04 | தொல்புரம் மத்திய சந்தை | | 14,300.00 | 500.00 | 250.00 |
| 05 | சத்தியகாட்டு மாட்டிறைச்சிக்கடை | 100.00 | 13,200.00 | 500.00 | 250.00 |
| 06 | சத்தியகாட்டு ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 3,300.00 | 500.00 | 250.00 |
| சங்கானை உப அலுவலகம் | | | | | |
| 01 | சங்கானை மரக்கறிச்சந்தை | | 5,940,000.00 | 10000.00 | 1000.00 |
| 02 | சங்கானை மீன்சந்தை | | 1,216,600.00 | 5000.00 | 1000.00 |
| 03 | சங்கானை மாட்டிறைச்சிக்கடை | 200.00 | 325,600.00 | 5000.00 | 1000.00 |
| 04 | சங்கானை ஆட்டிறைச்சிக்கடை | 150.00 | 56,200.00 | 2000.00 | 500.00 |
| 05 | சங்கானை கருவாட்டுக்கடை | 100.00 | 22,250.00 | 1000.00 | 500.00 |
| வட்டுக்கோட்டை உப அலுவலகம் | | | | | |
| 01 | வட்டுக்கோட்டை பொதுச்சந்தை | | 60,000.00 | 2000.00 | 500.00 |
| 02 | சங்கரத்தை சந்தை | | 150,000.00 | 3000.00 | 750.00 |
| 03 | வட்டுக்கோட்டை மாட்டிறைச்சிக்கடை | | 17,215.00 | 2000.00 | 500.00 |
| 04 | கோழி இறைச்சிக்கடை, சங்கரத்தை | 100.00 | 19,800.00 | 1000.00 | 500.00 |
| அராலி உப அலுவலகம் | | | | | |
| 01 | அராலி செட்டியார் மடம் சந்தை | | 10,500.00 | 500.00 | 250.00 |
| 02 | வண்ணபுரம் தற்காலிக சந்தை | | 9,300.00 | 500.00 | 250.00 |

குறிப்பு:- பொன்னாலை சந்தை, பல்லகட்டி சந்தை, வட்டுக்கோட்டை மாட்டிறைச்சிக்கடை என்பவற்றைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் இவற்றை நடத்துவதற்குரிய இடத்தினை தாமே தெரிவு செய்தல் வேண்டும்.

**தலைமை அலுவலகம்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை,**
**சுழிபுரம்.**
**06.11.2012**

[illegible]
**தவிசாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**




## கோழிக்குஞ்சு விநியோகம்

**BAHIRAHA நம்பர் -1 புறொயிலர் குஞ்சுகள் 10.11.2012 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.**

**றாஜீவ்,**
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

(25453)(6-7-45)

## கண்ணீர் அஞ்சலி



முன்னாள் வடக்குக்கிழக்கு மாகாணக் கல்விப்பணிப் பாளராகவும், பிரதிக் கல்விச் செயலாளராகவும் எமது சமூகத்துக்கு கல்விப் பணியாற்றிய

**இளையதம்பி சிவானந்தன்**

அவர்களது மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சி அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு குடும்பத்தவருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருமதி
**றெஜீனா இருதயநாதன்**
(ஓய்வுநிலை கல்விப்பணிப்பாளர்)

(25120)(45.6.7)

## கண்ணீர் அஞ்சலி

### மயில்வாகனம் சேனாதிராசா



எமது பாடசாலையின் ஆசிரியர் *சே. செல்வராசா* அவர்களின் அன்புத் தந்தை **மயில்வாகனம் சேனாதிராசா** அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஆசிரியர் கழகம்,யா/ ஊறெழு கணேச வித்தியாசாலை*

(25125)(5 6)

## கண்ணீர் அஞ்சலி



முன்னாள் லயன்ஸ் கழக அங்கத்தவர் அமரர்

***இன்னாசிமுத்து மரியதாசன்***

*(இளைப்பாறிய அதிபர்)*

அவர்கள் 03.11.2012 அன்று காலமான செய்தி கேட்டு துயரடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

**தலைவர், நிர்வாக அங்கத்தினர், யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம்.**

## மரண அறிவித்தல்

### *திருமதி பிலோமினா சூசைப்பிள்ளை*

கரம்பொன் தெற்கைப் பிறப்பிடமாகவும் பெரியபுலம் வீதி, நாரந்தனை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிலோமினா சூசைப்பிள்ளை நேற்று முன்தினம் (06.11.2012) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளையின் அன்பு மனைவியும், அன்ரனி நோபேட், றோபேட், டிசன்ரா, பேணாட், ஜெறாட், றெஜினோல்ட், சுபத்திரா ஆகியோரின் அன்புத் தாயும், கிருஷ்ணவேணி, காலஞ்சென்ற யேசுதாசன் மற்றும் தயாளம், சில்வியா, வலன்ரீனா ஆகியோரின் மாமியும், பிரகல்யா, தர்சி, கமல், சுதா, நீக்கலஸ், மோனிஷா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
பெரியபுலம் வீதி, நாரந்தனை. (25126)(3.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# நாட்டுப்பற்றைப் பிரதிபலிக்கும் அமெரிக்க அதிபரின் நிலைப்பாடு

**மே**லும் உறுதியுடனும் கூடுதல் உற்சாகத்துடனும் மீண்டும் வெள்ளை மாளிகை செல்லவுள்ளேன். வரவு- செலவுத்திட்ட பற்றாக்குறையை இல்லாமல் செய்யவும், வரி விதிப்பு நிதியை வகுத்துக்கொள்ளவும், குடிவரவு முறைமையைத் திருத்தி அமைக்கவும் பாடுபடுவேன். அவற்றை எய்துவதற்கு காங்கிரஸில் உள்ள குடியரசுக் கட்சித் தலைவர்களுடன் இணைந்து செயற்படுவேன்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வென்று, மீண்டும் அந்நாட்டின் தலைவராகி உள்ள பராக் ஒபாமா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாம் அமெரிக்கக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நாம் ஒன்றாகவே உயர்வோம்; ஒன்றாகவே தாழ்வோம்- என்ற தூர நோக்குடனான அவரது வெற்றிப் பேச்சு, நாட்டின் நலன்மீதும், நாட்டு மக்கள் மீதும் அவர் வைத்துள்ள பற்றை எடுத்தியம்புவதாக உள்ளது.

அத்தோடு-

எமது நாட்டை முன்நோக்கி இட்டுச் செல்வதற்கு, மிட் ரோம்னியுடன் சேர்ந்து பணியாற்றக்கூடிய வாய்ப்புகள் குறித்து அவருடன் பேச்சுநடத்தவுள்ளேன்- என்றும் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அவரது இந்தக் கருத்து, தேர்தலில் தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளரின் நாட்டுநலன் கருதிய செயல் திட்டங்களை முன்னெடுப்பதென்ற முடிவு, மேல்நாட்டவர்களின் நாட்டுப்பற்றைப் பிரதிபலிக்கிறது.

நலிவுற்ற பொருளாதாரத்தில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதில் சரியான இலக்கை அடைய முடியாது போனமை, அவுட் சோர்ஸ் (Out source) காரணமாக உண்டாகியுள்ள வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றுக்கு மத்தியிலும் ஒபாமாவின் வெற்றி நிலைநாட்டப்பட்டுள்ளமை அவர் மீது அமெரிக்க மக்கள் வைத்துள்ள நம்பிக்கையின் வெளிப்பாடே.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இரண்டாவது தவணைப் பதவிக் காலத்துக்காகப் பதவி ஏற்கவுள்ள ஒபாமா எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளில், 1, 000 கோடி அமெரிக்க டொலர்கள் வருடாந்த நிதிப் பற்றாக்குறை, 16ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்கள் தேசிய கடன் மற்றும் சமூகநலத்திட்டங்களுக்குத் தேவைப்படும் பெரும் தொகைப் பணம் என்பன முக்கிய இடம் வகிப்பதாகப் பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்க மக்களில் மிகவும் குறைந்த எண்ணிக்கையானோரே, நாட்டின் பொருளாதாரத்தில் 80 சதவீதத்தை அனுபவிக்கிறார்கள். இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் லிபரல் பொருளாதாரக் கொள்கையை வரிந்துகட்டிக் கொண்டதன் விளைவு இது. இதனால் அமெரிக்க மத்திய வர்க்கத்தின் பொருளாதார நிலை உயரவில்லை. ஒபாமாவின் வெற்றி இதனால் பாதிக்கப்படலாம் என்று எதிர்வு கூறப்பட்டது. எனினும், தடைகளை எல்லாம் தாண்டி மீண்டும் வெற்றிபெற்றுள்ளார் அவர். பொருளாதாரப் பிரச்சினைக்கு ஒபாமா தீர்வு கண்டுவிடுவார் என்று பெரும்பாலான அமெரிக்கர்கள் நம்புவதே அதற்குக் காரணம்.

ஒபாமாவின் வெற்றிக்கு அமெரிக்காவின் பாரம்பரிய ஜனநாயகக் கட்சி ஆதரவாளர்கள் மட்டுமன்றி அமெரிக்கக் குடியுரிமை பெற்ற ஆபிரிக்கர்கள், சோமாலியர்கள், இந்தியர்கள், பாகிஸ்தானியர்கள், இலங்கையர்கள் குறிப்பாக இலங்கைத் தமிழர்கள், சீனர்கள், ஈரானியர்கள், சிரியர்கள் மற்றும் அமெரிக்காவில் உள்ள ஆபிரிக்க அமெரிக்கர்கள், முஸ்லிம்கள் ஆகியோரும் முக்கிய காரணமாகக் கருதப்படுகின்றனர்.

கடந்த ஆண்டு பாகிஸ்தானில் வைத்து பின்லேடன் கொல்லப்பட்டமை, அமெரிக்க முஸ்லிம்களின் வாக்கு வங்கியில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதனையும் ஏற்படுத்தவில்லை என்றே நம்பப்படுகிறது. கடந்த 50 வருட காலத்தில் அமெரிக்க யூதர்களின் முழு ஆதரவைப் பெறத் தவறிய ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர், வெற்றிபெற்றிருப்பதும் இம்முறை அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சம் எனலாம்.

2008 தேர்தலில் ஒபாமாவுக்கு இருந்த 78 சதவீத யூத வாக்குகள், இம்முறை 64 சதவீதமாகக் குறைவடைந்தபோதிலும், யூதக் குடியிருப்புகள் உட்பட இஸ்ரேல் - பலஸ்தீனப் பிரச்சினையில் அவரது மிதவாதப் போக்கு தொடரும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

இஸ்ரேலுக்கு எந்த வேட்பாளர் முழு ஆதரவு வழங்குகிறாரோ அவரே வெற்றிபெறுவார் என்ற கடந்த கால வரலாறு, இம்முறை பொய்யாகிவிட்டது. குடியரசுக்கட்சி வேட்பாளர் மிட் ரோம்னி, கடும்போக்குடைய இஸ்ரேல் பிரதமர் நெத்தன்யாகுவுக்கு முழு ஆதரவு வழங்கி இருந்தார். அமெரிக்காவில் உள்ள 50 இலட்சம் யூதர்கள் அமெரிக்க அரசியலில் பெரும் செல்வாக்கு வகித்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒபாமாவின் மீள் வெற்றி உலகிலே ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கிடைத்த வெற்றி எனலாம். அடிமை வியாபாரம் நடைபெற்ற அமெரிக்காவில், அன்று எந்தக் கறுப்பர் இன மக்கள் அடிமைகளாக விற்கப்பட்டார்களோ, அந்த இன மக்களில் ஒருவர் ஜனாதிபதியாக மீண்டும் ஒருதடவை தேர்ந்தெடுக்கப்பட்டமை உலகம் முழுவதும் ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் ஒரு மன நெகிழ்வை ஏற்படுத்தி உள்ளது.

அதேபோக்கில், இலங்கைப் பிரச்சினையிலும் ஒபாமா போன்று எந்த ஒரு ஜனாதிபதியும் செயற்பட்டதில்லை. இலங்கை மீதான அமெரிக்காவின் அழுத்தங்கள் தொடரும் என எதிர்பார்க்கலாம்.

# வடக்கில் ஆடம்பர வீடுகள் யாழ்ப்பாணத்திலேயே அதிகம்

## அதிக குடிசை வீடுகள் முல்லைத்தீவில்

யாழ்ப்பாணம்,நவ.8

இலங்கையில் அதிகளவான குடிசை வீடுகள் முல்லைத்தீவு மாவட் டத்திலேயே அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் வடமாகாணத்தில் யாழ்ப் பாணத்திலேயே அதிகளவான ஆடம்பர வீடுகள் காணப்படுவதுடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் எந்தவொரு ஆடம்பர வீடும் இல்லையென்று புள்ளிவிவர திணைக்கள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்.மாவட்டத்தில் ஒரு லட்சத்து 35 ஆயிரத்து 837 வீட்டுக்கூறுகளும், மன்னார் மாவட்டத்தில் 23 ஆயிரத்து 338 வீட்டுக்கூறுகளும், வவுனியா மாவட்டத்தில் 40 ஆயிரத்து 844 வீட்டுக்கூறுகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 24 ஆயிரத்து 278 வீட்டுக்கூறுகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 28 ஆயிரத்து 300 வீட்டுக்கூறுகளுமாக வடமாகாணத்தில் 2 லட்சத்து 52 ஆயிரத்து 647 வீட்டுக் கூறுகளும் காணப்படுகின்றன.

யாழ்.மாவட்டத்தில் தனி வீடுகளாக ஒரு லட்சத்து 23 ஆயிரத்து 55 வீடுகளும், மன்னார் மாவட்டத்தில் 20 ஆயிரத்து 170 வீடுகளும், வவுனியா மாவட்டத்தில் 31 ஆயிரத்து 478 வீடுகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 12 ஆயிரத்து 983 வீடுகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 17 ஆயிரத்து 264 வீடுகளுமாக வடமாகாணத்தில் 2 லட்சத்து 4 ஆயிரத்து 960 வீடுகள் தனி ஒற்றைகள் வீடுகளாக உள்ளன.

ஆடம்பர மாடி வீடுகளாக யாழ்.மாவட்டத்தில் 47 வீடுகளும், மன்னார் மாவட்டத்தில் 11 வீடுகளும், வவுனியா மாவட்டத்தில் 27 வீடுகளும் காணப்படுகின்ற அதேவேளை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் எந்தவொரு ஆடம்பர வீடும் இல்லை.

யாழ்.மாவட்டத்தில் 9 ஆயிரத்து 131 குடிசை வீடுகளும், மன்னார் மாவட்டத்தில் ஆயிரத்து 672 குடிசை வீடுகளும், வவுனியா மாவட்டத்தில் 5 ஆயிரத்து 953 குடிசை வீடுகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 10 ஆயிரத்து 577 குடிசை வீடுகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 5 ஆயிரத்து 892 குடிசை வீடுகளுமாக வடமாகாணத்தில் 33 ஆயிரத்து 225 வீடுகள் காணப்படுகின்றன-என்றுள்ளது. (த-5)

# இலங்கையரை திருப்பியனுப்புக

## ஆஸி. எதிர்க்கட்சி அமைச்சர் கோரிக்கை

கான்பரா,நவ.8

படகுகள் மூலம் ஆஸ்திரேலியாவுக்கு வருவோரைக் கையாள்வதில் ஆஸ்திரேலிய அரசு மென்போக்கை கடைப்பிடிப்பதாக குற்றம் சாட்டியுள்ள ஆஸ்திரேலிய எதிர்க்கட்சியின் குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொறிஸன், ஆஸ்திரேலியாவுக்கு புகலிடம் கோரிவரும் இலங்கையரை உடனடியாகத்திருப்பியனுப்ப இன்னுமொரு விமானத்தை வாடகைக்கு அமர்த்த வேண்டுமெனக் கூறியுள்ளார்.

மனித கடத்தலில் ஈடுபடுவோருக்கு பிரதமர் கிலாட் தலைமையிலான அரசின் போக்கு பெருமளவு ஊக்கம் அளிப்பதாக உள்ளது. அரசு நாட்டின் எல்லைகளைப் பாதுகாக்கத் தவறியுள்ளது.

உடனடியாகத் திருப்பி அனுப்பப்போவதாக அரசு கூறியிருப்பது உண்மையானால் இன்று இலங்கைக்குப் போகும் விமானம் ஒன்று இருக்க வேண்டும். அப்படியில்லையாயின் இதுவும் அரசின் ஒரு தந்திரம் எனவே கொள்ளப்பட வேண்டும் எனக் கூறினார்.

கடந்தவாரம் கிறிஸ்மஸ் தீவிலிருந்து 26 இலங்கையர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர் எனக் குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவான் கூறினார். இலங்கையில் ஒரு படகைக் கடத்திக்கொண்டு ஆஸ்திரேலியாவுக்கு வந்த 15 பேரும் திருப்பி அனுப்பப்பட்டனர்.

ஒரு விமானத்தில் ஆள்களைத் திருப்பி அனுப்பிவிட்டதால் மட்டும் உடனடியாகத் திருப்பி அனுப்பும் கொள்கையைச் செயற்படுத்துவதாகக் கூறமுடியாது என எதிர்க்கட்சி உறுப்பினரான ஸ்கொட் மொறிஸ் கூறினார்.

'இலங்கைப் படகுகள் இங்கு அடிக்கடி வருவது போல இலங்கைக்கு விமானங்களும் அடிக்கடி போனால் தான் இது உண்மையாகவே அரசின் கொள்கை என நாம் கருதமுடியு'மெனவும் அவர் கூறினார். (த)

# குற்றப்பிரேரணையில் சிறுபான்மையினர் 15 பேர் கையொப்பம்

கொழும்பு,நவ.8

பிரதம நீதியரசருக்கு எதிராக சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்றப்பிரேரணையில் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என 117 பேர் கையொப்பமிட்டுள்ளனர்.

இவர்களில் 15பேர் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களாவர். அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, ஏ.எல்.எம்.அதாவுல்லா, பிரதியமைச்சர்களான முத்துசிவலிங்கம், விநாயகமூர்த்தி முரளிதரன், எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, அப்துல் காதர் ஆகியோரும் நாடாளுமன்ற உறுப்பினர்களான திகாம்பரம், ராதாகிருஷ்ணன், பிரபா கணேசன், சட்டத்தரணி ராஜதுரை, சில்வெஸ்திரி அலன்ரின், ஹரிஸ், ஏ.எச்.எம்.அஸ்வர் மற்றும் பஸீர் சேகுதாவுத் ஆகியோரே இவ்வாறு கைச்சாத்திட்டுள்ளனர். (த)

# 'திவிநெகும'வுக்கு மு.கா. வழங்கிய ஆதரவுக்கு நன்றி

## அமைச்சர் பஸில் சபையில் தெரிவிப்பு

கொழும்பு, நவ.8

'திவிநெகும' சட்டவரைவை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வழங்கிய ஒத்துழைப்பு மறக்க முடியாதது. இதற்காக நாம் மு.காவுக்கு விசேடமாக நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். இவ்வாறு தெரிவித்தார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ. 'திவிநெகும' சட்டவரைவை நேற்று முன்தினம் நாடாளுமன்றில் சமர்ப்பித்து விசேட உரை நிகழ்த்தும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

போரை வெற்றி கொண்டது போல நாட்டின் பொருளாதாரத்தையும் வெற்றிகொள்வதற்கே திவிநெகும சட்டவரைவு கொண்டு வரப்பட்டுள்ளது.

'திவிநெகும' சட்டவரைவு தொடர்பிலான உயர் நீதிமன்றத்தின் முடிவை சபாநாயகர் சபைக்கு அறிவித்தார். வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் கட்டியெழுப்புவதற்கே இந்த சட்டவரைவை கொண்டு வந்தோம் என்பதை ஆரம்பத்திலேயே கூறிக்கொள்கின்றேன்.

இந்த நாட்டில் இரண்டு தடவைகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டவரைவாக இந்த திவிநெகும திணைக்கள சட்டவரைவு இருக்கிறது.

மாகாணங்களின் அங்கீகாரத்தைப் பெறுமாறு உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதன்படி இயங்கிக் கொண்டிருக்கும் மாகாண சபைகள் அனைத்தினதும் அனுமதியை நாம் பெற்றுள்ளோம். குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் இந்த சட்டவரைவை நிறைவேற்றிக்கொள்வதற்கு முஸ்லிம் காங்கிரஸ் வழங்கிய ஆதரவு மறக்கமுடியாததொன்று. அதற்காக நாம் அவர்களுக்கு நன்றிகளை விசேடமாகத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வறிய மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் நல்லெண்ணத்துடன் தான் இந்தச் சட்டவரைவு கொண்டுவரப்பட்டுள்ளது. கொழும்பில் குளிரூட்டப்பட்ட அறைகளில் இருப்பவர்களுக்கு இது எங்கே புரியப்போகிறது.

வறிய மக்களுக்கு உதவி வழங்குவதற்காக 'திவிநெகும' திணைக்களம் செயற்படும் - என்றார். (ஐ)

# நாடாளுமன்றத்துக்கு முன்னால் சமுர்த்தி ஊழியர்ஆர்ப்பாட்டம்

கொழும்பு, நவ. 8

'திவிநெகும' சட்டவரைவுக்கு ஆதரவு தெரிவித்து நாடாளுமன்றத்துக்குச் செல்லும் நுழைவாயிலில் நேற்று முன்தினம்சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு, கிழக்கு என நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வந்திருந்த சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அரசுக்கு ஆதரவாகக் கோஷமெழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.அத்துடன், அரச சார்பான சில தொழிற்சங்கங்களும் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு ஆதரவாக நேற்று முன்தினம் களமிறங்கின.

'திவிநெகும'வில் தலையிடாதே, சட்டவரைவை அங்கீகரிக்கவும் ஆகிய வசனங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்திக்கொண்டு அரசுக்கு ஆதரவாகக் கோஷமெழுப்பிய வண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் நடைபவனியாக நாடாளுமன்ற வளவு வரை வந்தனர். இதனால் அந்தப் பகுதியில் கடும் வாகன நெருக்கடி ஏற்பட்டது. (த-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலோகத் துண்டுகளுடன் வாழ்கின்ற மாணவர்களுக்கு விசேட சிகிச்சை

## முல்லை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

போரின் போது படுகாயமடைந்து, உடலில் உலோகத் துண்டுகளுடன் அவஸ்தை வாழ்வு வாழ்கின்ற பாடசாலை மாணவர்களுக்கு விசேட வைத்திய வசதிகள் செய்து சிகிச்சையளிக்க நடவடிக்கை எடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் இந்த விடயம் குறித்து அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்ததை அடுத்தே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்தி குறித்தும் மாவட்டத்தில் நிலவுகின்ற பிரச்சினைகள் குறித்தும் ஆராய்வதற்கான மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அமைச்சர் றிஷாத் பதியுதீன் தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கடந்த 5 ஆம் திகதி பிற்பகல் 3மணியளவில் நடைபெற்றது. முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ந.வேதநாயகன் அனைவரையும் வரவேற்றார்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், எஸ்.வினோநோகராதலிங்கம் ஆகியோரும், பல்வேறு திணைக்களங்களின் உயரதிகாரிகளும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும், இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கல்வி, சுகாதாரம், மின்சாரவசதி, சாலைவசதி, போக்குவரத்துப் பிரச்சினைகள், மீள்குடியமர்வு, மீன்பிடி, காணி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் இங்கு ஆராயப்பட்டது.

போர் முடிவுற்று மூன்றரை ஆண்டுகளாகியும் வன்னி மாணவர்களின் உடலில் உள்ள வெடிபொருள் சன்னங்களின் துகள்கள் அகற்றப்படாமல் இருப்பதுடன் அவ்வாறு பாதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கைகூட தெரியாமலிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கூறினார். இது தொடர்பான விவரங்களைத் திரட்டித் தம்மிடம் வழங்குமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான றிஷாத் பதியுதீன் மாகாண கல்விப்பணிப்பாளரைக் கேட்டுக்கொண்டார்.

மேலும் முல்லைத்தீவு கல்வித் திணைக்களத்துக்கென தனியான கணக்காளர் இன்மையால் நூற்றுக்கும் மேற்பட்ட திட்டப்பணிகள் முடங்கியுள்ளதாக கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

தற்பொழுது துணுக்காயைச் சேர்ந்த கணக்காளர் தற்காலிகமாக முல்லைத்தீவில் பணியை மேற்கொண்டுள்ளதாகவும் போக்குவரத்துப் பிரச்சினையால் இவரால் கடமைகளைச் சரிவர நிறைவேற்ற முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவருக்குப் போக்குவரத்து ஏற்பாடு செய்து கொடுப்பதற்கும் நிரந்தர கணக்காளரை நியமிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் மற்றும் கருநாட்டுக்கேணி ஆகிய இடங்களில் முப்பதாண்டுகளின் பின்னர் மீள்குடியமர்ந்த சுமார் 200குடும்பத்தினருக்கு இன்னமும் தற்காலிக வீடுகள் கூட வழங்கப்படவில்லை.

அத்துடன் மேற்படி கிராமங்களைச் சேர்ந்தவர்களின் 2 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட வயல்காணி மற்றும் மேட்டுக்காணிகளில் ஏற்கனவே சிங்களவர்கள் குடும்பம் குடும்பமாக அத்துமீறிக் குடியேற்றப்பட்டுள்ளனர்.

இப்பொழுது மேலும் 500 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்படுகின்றது என்று பொதுமக்கள் சார்பில் முறையிடப்பட்டது. இதைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட அரச அதிபரையும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினத்தையும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

கொக்கிளாய் முகத்துவாரத்தில் தற்பொழுது 160 படகுகளில் வேற்று மாவட்டங்களைச் சேர்ந்த சிங்களவர்களும் நீர்கொழும்புவாசிகளும் தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு முன்னர் வந்தவர்களும் கொட்டில் போட்டு இப்பகுதியில் தங்கி வருகின்றனர். இப்பொழுது பருவகாலம் இன்மையால் அவர்கள் தமது சொந்த மாவட்டங்களுக்குச் சென்றுள்ளனர்.

எனவே இவர்களின் அத்துமீறல்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவ அமைப்புக்கள் கேட்டுக்கொண்டன.

இந்திய வீடமைப்புத் திட்டத்தில் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் மற்றும் கருநாட்டுக்கேணி கிராம மக்களுக்குப் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாக முறையிடப்பட்ட போது இந்த வீட்டுத்திட்டம் இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம். இதில் என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று அமைச்சர் பதிலளித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையைத் தவிர ஏனைய மருத்துவமனைகளில் வைத்தியர்கள் பற்றாக்குறையும் தாதியர் உள்ளிட்ட மருத்துவ ஊழியர்கள் பற்றாக்குறையும் நிலவுவதாக முறைப்பாடு செய்யப்பட்டது. வைத்தியர்களைப் பொறுத்தவரை தன்னால் ஒன்றும் செய்ய முடியாதுள்ளதாகவும் இதற்கு சுகாதார அமைச்சர் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வடமாகாண சுகாதாரச் செயலாளர் இங்கு தெரிவித்தார்.

(க-400-12)

### மல்லாவி மருத்துவ மனையில் அதிகரித்தது நோயாளர் எண்ணிக்கை

அக்கராயன்,நவ.8

முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி மருத்துவமனையில் நோயாளர்கள் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

பருவமழை பெய்ய ஆரம்பித்துள்ளதால் சாதாரண காய்ச்சல் உட்பட பல்வேறு தொற்று நோய்த்தாக்கங்களுக்கும் மக்கள் உள்ளாகி வருகின்றனர். இதன் காரணமாகவே நோயாளர்கள் தொகை சடுதியாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள புத்துவெட்டுவான் பழைய முறிகண்டி, ஐயன்கன்குளம், அம்பலப்பெருமாள்குளம், கோட்டை கட்டிய குளம், தென்னியன்குளம், உயிலங்குளம் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மல்லாவி மருத்துவமனைக்குச் சென்று வருவதில் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்தப் பகுதிகளுக்கான பஸ் சேவைகள் இல்லாமையே இதற்கான முக்கிய காரணமாக அமைந்துள்ளது. துணுக்காய் பிரதேச செயலகத்தில் இடம்பெறும் கூட்டங்களில் இந்தக் கிராம மக்களின் போக்குவரத்து நெருக்கடி தொடர்பாக நீண்ட காலமாக குரல் எழுப்பப்பட்ட போதிலும் பயன் எதுவும் கிடைக்கவில்லையென மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(க-18)

### வங்காலை கிராம மக்களுக்கு வங்கியொன்றினால் கடன் திட்டம்

மன்னார், நவ.8

வங்காலை கிராம மக்களுக்கு வங்கி ஒன்றினால் கடன் வழங்கும் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு வங்காலை ஆலய கேட்போர் கூடத்தில் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் விக்டர் சோசை தலைமையில் கடந்த 31 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்றது.

வங்காலை மக்கள், குருமுதல்வர் மூலமாக மேற்கொண்ட விடாமுயற்சியின் பயனாக சம்பத் வங்கியின் ஊடாக இந்தக் கடன் வசதியை வழங்குவதற்கான ஏற்பாடுகளை வங்கியின் முகாமையாளரான தங்கராஜா குகநேசன் மேற்கொண்டிருந்தார்.

வங்காலை மக்கள், குருமுதல்வர் மூலமாக மேற்கொண்ட விடாமுயற்சியின் பயனாக சம்பத் வங் கியின் ஊடாக இந்தக் கடன் வசதியை வழங்குவதற்கான ஏற்பாடுகளை வங்கியின் முகாமையாளரான தங்கராஜா குகநேசன் மேற்கொண்டார்.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் குழுவொன்றுக்கு இந்தக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட குருமுதல்வர் அங்கு உரையாற்றுகையில்:-

பயனாளிகளின் வேண்டுகோளுக்கிணங்கவே இந்த வசதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான பரிந்துரையை நான் மேற்கொண்டேன்.

இந்த மக்கள் அனைவரும் தமது வாழ்வாதாரத்தில் மிகவும் துடிப்புடன் செயற்படுபவர்கள் என்பதனையும் வங்கி அதிகாரிகளுக்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன் எனத் தெரிவித்தார்.

இதேவேளை வங்கியின் பிராந்திய முகாமையாளர் திரு. அன்ரன் நிதர்சன் தனது உரையில்:-

மன்னாரில் நீண்ட காலமாக நிலவிய போர்ச் சூழ்நிலையின் பின்னர் இங்கு வந்தமையையிட்டு மகிழ்ச்சியடைவதாகவும் தற்போது மக்கள் ஒரு குழுவாக செயற்படுவதையிட்டுத் தான் பெருமைப்படுவதாகவும் கூறியதுடன் கடனைத் திருப்பியளிக்கும் முறைபற்றியும் விளக்கமளித்தார்.

பின்னர் கடனுதவிக்கான முதலாவது காசோலையை குருமுதல்வர் விக்டர் சோசை வழங்கிவைத்தார். இந்த நிகழ்வில் சம்பத் வங்கியின் வன்னிப் பிராந்திய நிறைவேற்று அதிகாரிகளான குகதாசன் கோகுலன், ஆனந்தன் ரட்ணசபாபதி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(க-12)



மன்னாரில் இடம்பெற்ற இடர் முன்னறிவித்தல் தொடர்பான கலந்துரையாடலின்போது இடர் முன்னெச்சரிக்கையை அறிவிக்கும் பொருட்டு ஒலிபெருக்கிச் சாதனம் ஒன்றை அரச அதிபர் சரத் ரவீந்திர தலைமன்னார் பொலிஸ் தலைமை அதிகாரியான ஏ.எல்.எம். ஜெமீலிடம் கையளிக்கின்றார்.

(க-12)

### வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிதி ஒதுக்கீடு

**மன்னார் இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் தகவல்**

மன்னார், நவ.8

மன்னாரில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நிலையை மேம்படுத்தும் பொருட்டு ஒரு கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.முகமது றியாஸ் தெரிவித்தார்.

ஏற்கனவே வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளை மீளவும் ஆரம்பித்துள்ள போதிலும் தமக்குத் தேவையான நீரைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவர்கள் பயன்படுத்தி வருகின்ற குளம், நீர்த்தேக்கம், குழாய்க் கிணறுகள் என்பனவற்றைப் புனரமைப்புச் செய்வதற்கு இந்த நிதியின் ஒரு பகுதி பயன்படுத்தப்படவுள்ளது.

மேலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இந்த நிதியின் மூலமாக உலர் உணவுகளும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு மேலும் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-12)

# நுளம்புகளின் பெருக்கத்தினால் நோய்கள் தாக்கும் ஆபத்து

அக்கராயன்,நவ.8

கிளிநொச்சி மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதால் வசதிகளற்ற நிலையில் வாழும் மீள்குடியமர்ந்த குடும்பங்கள் நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

[illegible] தொடர்ந்து [illegible] இங்குள்ள பல்வேறு இடங்களிலும் மழைவெள்ளம் தேங்கி நிற்கின்றது. இவற்றுக்கு மத்தியிலேயே மீள்குடியமர்ந்த மக்கள் வசதியீனங்களுக்கு இடையில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் நுளம்புகளின் பெருக்கமும் இங்கு அதிகரித்துக் காணப்படுவதால் பல்வேறு நோய்கள் மக்களைத் தாக்குவதற்கான [illegible] நிலைகள் அதிகரித்துக் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாகத் தற்போது நாட்டின் பல பகுதிகளிலும் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் கிளிநொச்சியிலும் இந்த நோய் தொடர்பான அச்சம் ஏற்பட்டுள்ளது.

மழை வெள்ளத்துக்கும் குளிருக்கும் மத்தியில் தற்காலிக குடிசைகளில் வாழும் மக்கள் பல்வேறு நோய்களால் பீடிக்கப்பட்டுள்ள நிலையில் டெங்கு தொடர்பான அச்சமும் அவர்களிடத்தில் தோன்றியுள்ளது.

எனவே நுளம்புகளை அழிப்பதற்குரிய நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறும், தமக்கு மருந்து விசிறப்பட்ட நுளம்பு வலைகளை வழங்க வேண்டுமெனவும் மீள்குடியமர்ந்த மக்கள் உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதியளவு பஸ்கள் இல்லை அதனால் சேவைகள் பாதிப்பு

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் இ.போ.ச. முகாமையாளர் தகவல்

யாழ்ப்பாணம், நவ.8

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய சேவையில் போதியளவு பஸ்கள் இல்லாமையால் மக்கள் கோரிக்கை விடுக்கும் சகல இடங்களுக்கும் பஸ் சேவையை நடத்த முடியாத நிலையில் இருப்பதாக இலங்கைப் போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. அதன்போதே இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிராந்திய முகாமையாளர் அஷ்கர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சாலைகளின் திருத்தத்துக்கு 16.5 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுகின்றது. மல்லாகம் வேலைத்தளத்தை மேம்படுத்துவதற்கு 4.2 மில்லியன் ரூபாவும் யாழ்.டிப்போ திருத்தத்துக்கு 5.3 மில்லியன் ரூபாவும் பருத்தித்துறை டிப்போ திருத்தத்துக்கு 4 மில்லியன் ரூபாவும் காரைநகர் டிப்போ திருத்தத்துக்கு 3 மில்லியன் ரூபாவுமாக 16.5 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுதாக அவர் அங்கு கூறினார்.

மேலும் தற்போது சேவையில் ஈடுபடும் 29 பஸ்கள் 25 வருடங்கள் பழைமையானவை.

இதனால் தூர இடத்துக்குச் சேவையை நடத்த முடியாது உள்ளது என்று அவர் கூறினார். இதன்போது வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி , அடுத்த வருடம் 15 புதிய பஸ்கள் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநர் குறிப்பிட்டதைப் போன்ற எந்தவொரு விடயமும் தமக்குத் தெரிவிக்கப்படவில்லை என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் அஷ்கர் தெரிவித்தார். (த-5-4)

## கோவில் வயலில் பிடிபட்டது கசிப்பு

பளை, நவ.8

இயக்கச்சி கோவில் வயல் பகுதியில் பளைப் பொலிஸார் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பெருமளவு சட்ட விரோத கசிப்பினைக் கைப்பற்றியதுடன் வைத்திருந்த நபரையும் கைது செய்துள்ளனர்.

பொது மக்கள் கொடுத்த தகவலையடுத்து கடந்த திங்கட்கிழமை இந்தப்பகுதிக்கு விரைந்த பொலிஸார் கசிப்பினைக் கைப்பற்றியதுடன் நபரையும் கைது செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ராஜபக்ஷவின் பணிப்பின் பேரில் சப் இன்ஸ்பெக்டர் நிஷாந்த தலைமையில் சார்ஜன்ட் காந்தன் கான்ஸ்டபிள்களான இந்திக்க, சரத் விஜய் நாயக்க, அழகேசன் ஆகியோர் கொண்ட குழுவினர் பரிசோதனைகளை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## நிசாந்தனின் உறவினர் வீடு மீது இனந்தெரியாதோர் தாக்குதல்



யாழ்ப்பாணம், நவ. 8

யாழ். மாநகரசபை முன்னாள் உறுப்பினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீவகப்பகுதி இளைஞர் அணியின் உறுப்பினருமான எஸ்.நிசாந்தனின் உறவினர் வீடு மீது இனந்தெரியாதோரால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வேலணைப் பகுதியிலேயே இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு நடைபெற்றுள்ளது.

"சம்பவ இடத்தில் ஊர்காவற்றுறைப் பொலிஸாருடன் நின்றிருந்த நபர்களே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்" என்று நிசாந்தன் குற்றம் சுமத்தியுள்ளார். இது குறித்து நிசாந்தன் மேலும் தெரிவித்ததாவது :-

"வேலணை சோளாவத்தையில் உள்ள எனது உறவினர் வீடு மீதே திங்கட்கிழமை இரவு 11 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இரும்புக்கம்பி மற்றும் வீட்டில் இருந்த உலக்கை என்பவற்றினால் ஜன்னல் கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன.

அதனையடுத்து வீட்டிலிருந்தோர் "திருடர்களின் கைவரிசையோ?" என்று நினைத்து உதவிக்கு அயலவர்களை அழைத்தனர். பின்னர் அவர்கள் வெளியே வந்து பார்த்தபோது ஊர்காவற்றுறைப் பொலிஸார் ஜீப் வாகனத்துடன் அங்கு நின்றனர். அவர்களுடன் அரசியல் கட்சியைச் சேர்ந்த சிலரும் நின்றுள்ளனர்.

இதுதொடர்பில் நேற்று முன்தினம் ஊர்காவற்றுறைப் பொலிஸில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் எனக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலாகவே தென்படுகிறது. அண்மைக்காலமாக தீவகத்தில் குறிப்பாக வேலணையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்களைத் தடுப்பதற்காகவே இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதெனக் கருத வேண்டியுள்ளது.

எமக்கு ஆதரவாகவுள்ள மக்களை வீடுவீடாகச் சென்று சில சமூகவிரோதிகள் அச்சுறுத்தி வருகின்றனர். இதற்கு நாம் அஞ்சப்போவதில்லை.

முன்னைய காலத்தில் தீவகத்தில் மக்களை அச்சுறுத்தி அவர்களைத் தமது அடிமைகளாக நினைத்துத் தமது கோரிக்கைகளை சிலர் நிறைவேற்றியிருக்கலாம். எதிர்காலத்தில் இவ்வாறு செயற்பட முடியாது." - என்றார்.

இது தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸாருடன் தொடர்புகொண்டு கேட்டபோது "பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடனேயே இதுதொடர்பில் கதைக்க வேண்டும்" என்று கூறி தொடர்பைத் துண்டித்துவிட்டனர். (ங-4)

## மீண்டும் பாடசாலைகளில் இணைக்கப்பட்ட மாணவர்கள்

வலி.தென்மேற்கு.8

சாவல்கட்டு கிராம உத்தியோகத்தர், மகாத்மா சனசமூக நிலைய நிர்வாகத்தினர் இணைந்து எடுத்துக்கொண்ட துரித நடவடிக்கையின் பயனாகப் பாடசாலைக்குச் செல்லாமல் அலைந்து திரிந்த பத்து மாணவர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டு மீண்டும் பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளனர்.

மீனவர் கிராமமாக விளங்கும் சாவல்கட்டு கிராமத்தில் வசிக்கும் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வரும் மகாத்மா சனசமூக நிலைய நிர்வாகத்தினர், சிறுவர்கள் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு வயதுக் கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்தியதுடன் அதைக் கடுமையாகவும் கடைப்பிடித்து வருகிறார்கள்.

இவர்களின் அயராத உழைப்பினால் கல்வியில் பின்தங்கிய நிலையிலிருந்த சாவல்கட்டு கிராமம் தற்பொழுது கல்வியில் வளர்ச்சியடைந்துள்ளது. பல பட்டதாரிகளும் உருவாகியுள்ளார்கள்.

இந்தநிலையில் பெற்றோரின் அக்கறையின்மையினாலும் பொருளாதார வசதியின்மையினாலும் கல்வி கற்று வந்த பல மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் வீணே பொழுதைப் போக்கி வந்தனர்.

**பெற்றோரின் அக்கறையின்மையினாலும் பொருளாதார வசதியின்மையினாலும் கல்வி கற்று வந்த பல மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் வீணே பொழுதைப் போக்கி வந்தனர்.**

இவர்களை மீண்டும் பாடசாலையில் இணைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்ட சாவல்கட்டு கிராம உத்தியோகத்தர் வி.சந்திரராசா, மகாத்மா சனசமூக நிலைய நிர்வாகிகள், பாடசாலை அதிபர் ஆகியோர் இணைந்து பாடசாலைக்குச் செல்லாமல் வீடுகளில் முடங்கிக் கிடந்த பத்து மாணவர்களை மீண்டும் பாடசாலையில் இணைத்துள்ளனர்.

(த-115)

## லயன்ஸ் கழக நலத்திட்டங்கள் தென்மராட்சி கிழக்கில் ஆரம்பம்

தென்மராட்சி,நவ.8

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்துக்கு சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.எஸ். தங்கராஜா, பிராந்தியத் தலைவர் லயன் கா.சற்குணதேவன் ஆகியோர் கடந்த 4 ஆம் திகதி உத்தியோக பூர்வ பயணத்தை மேற்கொண்டு கழகத்தின் பல்வேறு நலத் திட்டங்களை ஆரம்பித்து வைத்தனர்.

கழக அலுவலகத்தில் தலைவர் லயன் வ.நடராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேசத்தைச் சேர்ந்த 15 முன்பள்ளிகளின் சிறார்களுக்கான கற்றல் உபகரணங்கள் முன்பள்ளி ஆசிரியைகளிடம் கையளிக்கப்பட்டன.

அத்துடன் 3 ஆயிரம் தென்னங்கன்றுகள் பயனாளிகளுக்கு வழங்கும் திட்டத்தினையும் பிரதேசத்தில் பனம் விதைகள் நாட்டும் திட்டத்தையும் மாவட்ட ஆளுநரும் பிராந்தியத் தலைவரும் கூட்டாக ஆரம்பித்து வைத்தனர்.

நிகழ்வில் யாழ்.மாவட்ட லயன்ஸ் கழகங்களின் பிரதிநிதிகளும் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் மாவட்ட பிராந்திய வலயத் தலைவர்களும் கலந்து கொண்டதாக லயன்ஸ் கழக மாவட்ட ஊடகப் பிரிவின் தலைவர் லயன் எஸ்.கே.நவரத்தினம் தெரிவித்தார். (த-9)

## வெடிபொருள்களைக் கண்டால் உடன் தகவல் வழங்குங்கள்

### பொது இடங்களில் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம், நவ.8

படையினரின் பாவனையில் உள்ள ஆயுதங்கள் அல்லது வெடிபொருள்கள் ஆகியவற்றைப் பொது மக்கள் வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். அவ்வாறு வைத்திருப்போர் அல்லது வாழ்விடங்களுக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டால் அருகில் உள்ள பாதுகாப்புப் படைமுகாமிற்கோ அல்லது காவல்துறை நிலையத்துக்கோ அறிவித்து பணப்பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

இவ்வாறான அறிவித்தல் பிரசுரங்கள் பொதுமக்கள் கூடும் இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன. அதில் குறிப்பிடப்பட்டுள்ள விவரம் வருமாறு:-

★ துப்பாக்கிகளையோ அல்லது துப்பாக்கிகளின் உதிரிப்பாகங்கள் மற்றும் பிற ஆயுத உபகரணங்கள் வெடிபொருள்கள் வைத்திருப்பது சட்டவிரோதமாகும்.

★ அவ்வாறு எவரேனும் வைத்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டால் பிணையில் வர முடியாத தடுப்பில் வாட நேரிடும்.

★ இதன் காரணமாக தடுப்பில் இருப்பவரது குடும்பம் மற்றும் குழந்தைகள் வாழ்வதற்கு வழியற்று தவிக்கும் நிலை ஏற்படும்.

★ எனவே நீங்கள் கண்டெடுத்த துப்பாக்கிகளோ உபகரணங்களோ, வெடிபொருள்களோ உங்கள் வசமிருப்பின் அல்லது அவற்றை உங்கள் வதிவிடங்கள் எங்கேனும் கண்டறிந்தால் தயக்கமின்றி அருகில் உள்ள பாதுகாப்பு படை முகாமுக்கோ அல்லது காவல் துறை நிலையத்துக்கோ தெரியப்படுத்தி வெகுமதியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

★ பாதுகாப்புப் படையினர் அல்லது காவல் துறையினர் நீங்கள் கண்டறிந்த ஆபத்தான ஆயுத உபகரணங் களை பாதுகாப்பாக அகற்ற உதவுவார்கள்.

துப்பாக்கிகள் அல்லது பிற ஆயுத உபகரணங்கள் வெடி பொருள்கள் இராணுவ உபயோகத்துக்குரிய ஏதேனும் பொருள்கள் எவரேனும் வைத்திருப்பதை அறிந்தால் 0773368259 இலக்க தொலைபேசிக்கு அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-7)

## விபத்தில் உயிரிழந்தவரை அடையாளம் காண கோரிக்கை



தென்மராட்சி,நவ.8

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுக்காடு பகுதியில் ஒரு மாதத்துக்கு முன்னர் இடம்பெற்ற வீதி விபத்தில் பலியான நபரின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சடலம் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் உள்ளது.

புகைப்படத்தில் உள்ளவரே இறந்தவர் என்பதால் உறவினர்கள் அடையாளம் காட்டி உதவுமாறு பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (த-9)

## பொது சுகாதாரப் பரிசோதகர் தாக்கப்பட்டமைக்கு கண்டனம்

யாழ்ப்பாணம், நவ. 8

டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின்போது, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தாக்கப்பட்டமை தொடர்பில் யாழ். மாவட்டப் பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் சங்கம் அனுப்பியுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

திருநெல்வேலி பாரதிபுரம் பகுதியில் வடமாகாண பெண்கள் அமைப்புடன் இணைந்து நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நேற்று முன்தினம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது அந்தக் குழுவுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த நபரே மதுபோதையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகருடன் தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் அவரைத் தாக்கியும், காயப்படுத்தியும் உள்ளார்.

இந்தச் செயலானது, பல்வேறு சிரமங்களின் மத்தியிலும், யாழ். குடாநாட்டில் போர்க்காலச் சூழ்நிலைகளின்போதும் பல்வேறுபட்ட அர்ப்பணிப்புகளுடனும் சேவையாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் கடமைகளைச் செய்வதில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

**இந்தச் சம்பவத்தை எமது சங்கம் வன்மையாகக் கண்டிப்பதுடன், உரிய அதிகாரிகள் இது தொடர்பாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

இந்தச் சம்பவத்தை எமது சங்கம் வன்மையாகக் கண்டிப்பதுடன், உரிய அதிகாரிகள் இது தொடர்பாகக் கடுமையான நடவடிக்கை எடுப்பதுடன், சமூக அமைப்புகளும் பொதுமக்களும் இவ்வாறான சம்பவங்களை மேலும் தொடராதவண்ணம் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றது - என்றுள்ளது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒபாமாவுக்கு கருணாநிதி வாழ்த்து

சென்னை, நவ.8

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் பராக் ஒபாமா மீண்டும் வெற்றி பெற்றுள்ளமைக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் அனுப் பியுள்ள வாழ்த்துச் செய்தி யில், அமெரிக்க மக்களி டையே ஏற்றத் தாழ்வற்றதும், இன வேற்றுமையுணர்வு அற் றதுமான சமத்துவம் நிலைக் கவும், சமதர்ம உணர்வு துளிர்த்துச் செழிக்கவும் வேண்டும். இவற்றோடு இந்தியா போன்ற நாடுக ளுடன் உறவு தழைக்கவும் ஒபாமாவின் இந்த வெற்றி பயன்படும் என்று நம்புகி றேன்-என்று அதில் உள்ளது. (வ)

## இலங்கை போர்க் குற்றவாளிகளுக்கு ஒபாமா தண்டனை பெற்றுக் கொடுப்பார்


**ராமதாஸ் நம்பிக்கை**

இலங்கை போர்க் குற்ற வாளிகளுக்கு ஒபாமா தண் டனை பெற்றுக் கொடுப் பார் என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் பராக் ஒபாமா மீண்டும் வெற்றி பெற்ற மைக்கு பா.ம.க நிறுவுநர் ராமதாஸ் வாழ்த்துத் தெரி வித்துள்ளார்.

அவர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில், அமெ ரிக்க மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று மீண் டும் ஜனாதிப தியாக வெற்றி பெற்றுள்ள ஒபாமாவுக்கு பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் வாழ்த் துக்கள்.

இந்தியா அமெரிக்க இடையிலான உறவு தழைக் கவும், இலங்கையில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் மற் றும் போர்க் குற்றங்களுக்கு காரணமானவர்களுக்கு தண்டனை பெற்றுத்தர ஜனா திபதி ஒபாமா பாடுபடுவார் என்று நம்புகிறேன் என்று அவர் கூறியுள்ளார். (வ)



இந்தியாவுக்குச் சென்றுள்ள கனேடியப் பிரதமர் ஸ்ரீபன் ஹாப்பருக்கும் இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜிக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்ற போது...

## குழந்தையைத் திருடியவரை காட்டிக் கொடுத்த கமரா

*மருத்துவமனையில் குழந்தையைப் பெண்ணொருவர் திருடிச்சென்ற வேளை கமராவில் பதிவானதால் குறித்த புகைப்படத் தின் உதவியுடன் மேற்படி பெண்ணை பொலிஸார் தேடி வருகின்றனர்.*

*புனேவில் பிம்ரி சின்ச் வாட் பகுதியில் உள்ள மருத் துவமனை ஒன்றில் பிறந்து ஒரு நாளேயான பச்சிளம் குழந்தை திருடிச்செல்லப் பட்டுள்ளது.*

*மருத்துவமனைகளில் பிறந்த குழந்தைகள் கடத் தப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிற நிலையில், நேற்று முன்தினம் நண்பகல் யஷ் வந்த்ராவ் சவன் மருத்துவமனையில் பிறந்து சில மணி நேரங்களே ஆன ஆண் குழந்தை திருடப்பட்டது. இதையடுத்து, மருத்துவ மனையின் கமராவில் ஒரு பெண் அந்த குழந்தையை எடுத்துச் செல்வது பதிவாகி யுள்ளது.*

*அந்தப் பெண்ணின் புகைப்படத்தை எடுத்து, அதனை மருத்துவமனைக்கு அருகே ஓட்டோச் சாரதிகளிடம் காண்பித்து பொலிஸார் விசாரணை நடத்தி மேற்கொண் டுள்ளனர். (வ)*

# நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகுக

## திரிணாமுல் காங். கட்சியினருக்கு மம்தா அழைப்பு

கொல்கத்தா, நவ.8

நாடாளுமன்றத் தேர்தல் எந்த நேரமும் வர லாம் அதற்கு திரிணாமுல் காங் கிரஸ் கட்சியினர் தயா ராக இருக்க வேண்டும் என்று மம்தா பானர்ஜி தெரிவித் தார்.



சில்லறை வர்த்தகத்தில் நேரடி அந்நிய முதலீடு, சமையல் எரிவாயு சிலிண்டர் எண்ணிக்கை குறைப்பு போன்றவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக் குக் கூட்டணி அரசுக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிக்கொண்டார் மம்தா பானர்ஜி. இந்தநிலையில் மேற்கு வங்க மாநிலத்தில் அந்தக்கட்சியின் சட்ட பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப் பினர் கள், அமைச்சர்கள் ஆலோச னைக்கூட்டம் கொல்கத் தாவில் நடைபெற்றது. இதில் அந்தக்கட்சியின் தலைவர் மம்தா பானர்ஜி கலந்து கொண்டு பேசிய தாவது:-

மத்தியில் ஆட்சி செய் யும் காங்கிரஸ் அரசு பெரும் பான்மையாக உள்ளது. ஜனநாயக அமைப்பில் பொரு ளாதார சீர்திருத்தம் தேவை தான். அது ஏழை எளிய மக்களைப் பாதிக்கும் வகையில் இருக்கக்கூடாது. விலைவாசி உயர்வு, சில் லறை வர்த்தகத்தில் நேரடி அந்நிய முதலீடு போன்ற விடயங்களில், இடது சாரி கட்சிகள் வாய்மூடி மௌனம் காக்கின்றன. காங்கிரஸ் கட்சி மக்கள் விரோத போக்கைக் கடைப்பிடிக் கிறது. மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட் டணி ஆட்சியில் 2-ஜி ஊழல், நிலக்கரி ஊழல் போன்ற வற்றால் காங். தனது பெய ரைக் கெடுத்து கொண் டது. எனவே தற்போதைய சூழ் நிலையில் நாடாளுமன் றத் துக்கு முன்கூட்டியே தேர் தல் வரும். அதற்குத் திரி ணாமுல் காங். கட்சி தயா ராக இருக்க வேண்டும்.

மத்திய அரசின் பொரு ளாதார சீர்திருத்த கொள் கையை எதிர்த்து திரிணா முல் காங். தொடர்ந்து போரா டும். 2013 ஆம் ஆண்டு மேற்குவங்க மாநிலத்தில் உள்ளாட்சித்தேர்தல் நடை பெற உள்ளது. இதில் திரிணாமுல் காங். வெற்றி பெறப் பாடுபட வேண்டும்-என்றார். (வ)

## வைரஸ் காய்ச்சலால் ஒரே நாளில் மூன்று சிறுமிகள் உயிரிழந்த பரிதாபம்

சேலம், நவ.8

தமிழ் நாட்டில் சேலத் தில் வைரஸ் காய்ச்சல் காரணமாக நேற்றுமுன் தினம் ஒரு நாளில் மூன்று சிறுமியர் அடுத்தடுத்து உயிரிழந்த சம்பவம் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியுள் ளது. இதில், இரண்டு சிறுமி கள் சேலம் அரசு மருத்து வ மனையில் சிகிச்சை பல னின்றி உயிரிழந்துள்ளனர்.

இடைப்பாடியைச் சேர்ந்த 7 வயதுச் சிறுமி ஹரிணி, அரசு மருத்துவமனையில் நேற்று முன்தினம் உயிரிழந் தார். இதேபோன்று, நெத்தி மேடு பகுதியைச் சேர்ந்த ஸ்ரீவர்ஷா என்ற சிறுமியும் சிகிச்சை பலனின்றி உயிரி ழந்தார். காய்ச்சலால் பாதிக்கப் பட்டு தனியார் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டிருந்த ஸ்ரீவர்ஷாவின் சகோதரியான ஸ்ரீநிஷாவும் உயிரிழந்தார்.

இரட்டைச் சகோதரர் களாக இவர்கள் இருவரும் ஒரே நாளில் உயிரிழந்தமை அப்பகுதி மக்களைச் சோகத் தில் ஆழ்த்தியுள்ளது.

இதனிடையே, சேலம் அரசு மருத்துவமனையில் போதிய வசதிகள் இல்லை எனக் கூறி பொதுமக்கள் அரசு மருத்துவமனையை முற்றுகையிட்டுப் போராட் டம் நடத்தினர். (வ)

## போர்க்காட்சியில் விபத்து நடிகர் அஜீத்துக்கு காயம்

சென்னை, நவ.8

திரைப்படப் படப்பி டிப் பின்போது போர்க் காட்சி யில் ஏற்பட்ட விபத்தில் நடிகர் அஜீத்குமாரின் காலில் காயம் ஏற்பட்டது.



விஷ்ணுவர்தன் இயக் கத்தில் அஜீத்குமார் நடிக்கும் படத்துக்கு இது வரைக்கும் பெயர் வைக்க வில்லை. ஏ.எம்.ரத்னம் தயாரிக்கும் குறித்த திரைப்படத்தில் நயன்தாரா, ஆர்யா, டாப்ஸி உட்பட பலர் நடிக் கின்றனர். இதன் படப்பிடிப்பு கடந்த சில தினங்களாக, மும்பையில் நடைபெற்று வருகிறது. நேற்று முன் தினம் இடம்பெற்ற படப் பிடிப்பில் போர்க் காட்சி பட மாக்கப்பட்டு வந்தது. ஒரு காரிலிருந்து இன்னொரு காருக்குத் தாவும் காட்சியில் வேறொருவரை பயன்படுத் தலாம் என்று இயக்குநர் கூறினாராம். அஜீத், தானே நடிப்பதாகக் கூறியதை அடுத்து அந்தக் காட்சி பட மாக்கப்பட்டது.

ஒரு காரில் இருந்து இன் னொரு காருக்குத் தாவும் போது கால் வழுக்கியது. இதில் நிலை தடுமாறிய அஜீத், கீழே விழுந்தார். இதில் அவரது வலது காலில் காயம் ஏற்பட்டது. இதைய டுத்து படப்பிடிப்பு நிறுத்தப் பட்டது. உடனடியாக வைத் தியர்கள் வரவழைக் கப் பட்டு அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தால் படப்பிடிப்பு தளத்தில் பரபரப்பு ஏற்பட் டது. அனைத்து நடிகர்களும் பங்கேற்ற காட்சி என்பதால் படப்பிடிப்பை ரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

## சமூக இணையங்களில் அவதூறுச் செய்தி பரப்புவோருக்கு 3 வருட சிறைத்தண்டனை

### சென்னை மாநகர ஆணையாளர் தெரிவிப்பு

சென்னை, நவ.8

சமூக வலைத்தளத்தில் அவதூறுச் செய்திகள் பரப்பு பவர்களுக்கு 3 ஆண்டுகள் கடும் தண்டனை விதிக்கப் படும் என்று சென்னை மாநக ராட்சி ஆணையாளர் அலுவ லகம் அறிவித்து இருக்கிறது.

இதுதொடர்பாக செய்தி யாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமூக வலைத்தளங்களில் அவதூறுச் செய்திகள் மற் றும், பெண்களைப் பற்றி அவதூறாகச் சித்திரிப்பவர்க ளுக்கு மிகக்கடுமையான தண்டனையாக 3 ஆண்டு கள் சிறைத் தண்டனை விதிக்கப் படும்-என்றார்.

அண்மைக்காலமாக டுவிட்டர் மற்றும் பேஸ்புக் போன்ற வலைத்தளங்களில் தனி நபர்கள் தங்களைப் பற்றி அவதூறு பரப்பி வரு வதாக பதிவு செய் யப்படும் வழக்குகள் அதிகரித்துள் ளன. இதில் பிரபலங்களும் அடங்குவர். கடந்த மாதம் பாடகி சின்மயி தன்னைப் பற்றி இணைய தளத்தில் அவதூறு சேதிகள் பரப்பி னார்கள் என்று மொத்தம் நன்கு பேர் மீது முறைப்பாடு கொடுத்திருந் தார்.

அதேபோன்று மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் மகன் கார்த்தி சிதம்பரமும் தன்னைப் பற்றி இணையத் தளத்தில் அவதூறுச் செய்தி பரப்பிய பாண்டிச்சேரி நபர் ஒருவர் மீது முறைப்பாடு கொடுத்து இருந்தது குறிப் பிடத் தக்கது.

## இந்திய மீனவர்கள் பாகிஸ்தானில் கைது

பங்களாதேஷ் கடல் பகுதியில், மீன் பிடித்த, இந் திய மீனவர்கள் 72 பேர் கைது செய்யப்பட்டனர்.

பங்களாதேஷில் ஷரன் கோலா, என்ற இடத்தில் அத்துமீறி மீன் பிடித்ததாக, மேற்கு வங்க மாநிலம், இல. 24 பர்கானாவைச் சேர்ந்த மீனவர்கள் 72 பேரை, அந்த நாட்டுக் கடற்படையினர் கைது செய்துள்ளனர். (வ)

## பத்திரிகையாளரை கொலை செய்ய திட்டமிட்டிருந்தாராம்

**பெங்களூரில் தீவிரவாதி கைது**

பெங்களூரில் பத்திரி கை யாளர் ஒருவரை கொலை செய் யத் திட்டமிட்டிருந்த தீவிர வாதி கைது செய்யப் பட்டார்.

கர்நாடகா மாநிலத்தில் சில மாதங்களுக்கு முன்பு பெங்களூரு, ஹுப்ளி, [illegible] போன்ற நகரங் களில் தீவிரவாத அமைப் புடன் தொடர்பு வைத்தி ருந்த 14 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில், ஜோயித் அஹமது மிர்ஜி என்ற தீவிரவாதி கொடுத்த தகவ லின்படி பெங்களூர் ஜெகஜீ வன்ராம் நகரைச் சேர்ந்த சையத் தம்ஜித் அஹமது என்பவரைப் பொலிஸார் தேடி வந்தனர்.

இந்தநிலையில் கடந்த 4 ஆம் திகதி வசந்த நகர் பகுதியில் சையத்தை பொலி ஸார் கைது செய்தனர்.

அவரிடம் நடத்திய விசா ரணையில் அவர் பெங்களூ ரைச் சேர்ந்த பத்திரிகையா ளர் ஒருவரைக் கொலை செய்ய திட்டமிட்டிருந்தது தெரிய வந்தது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லாவோசின் வியான்டைன் நகரில் நடைபெற்ற ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளின் கூட்டத்தின்போது ஐரோப்பிய குழுத் தலைவர் ஹெர்மேன் வான் ரோம்பை மற்றும் லாவோஸ் பிரதமர் தாங்சிங் தம்மவோங் ஆகியோர் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

## பண நெருக்கடியில் கனேடிய இளைஞர்கள்

ரொறொண்டோ,நவ.8

கனடாவில் இளைஞர்களுக்கு பண நெருக்கடியும், அதிகளவான வேலையும் மன உளைச்சலை தருவதாக ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

கனடாவின் இப்ஸோஸ் ரெய்ட் இணையம் மூலமாக 18 - 24 வரையிலான இளைஞர்களிடம் ஆய்வு நடத்தியது.

இதில் 56 சதவீதமானோர் தங்களின் தற்போதைய நிலை மனநிறைவைத் தருவதாகத் தெரிவித்துள்ளனர். 28 சதவீதமானோர் தங்களின் திறமைக்கேற்ற வேலை கிடைக்கவில்லை என்றும், 16 சதவீதமானோர் அளவுக்கு அதிகமான வேலை செய்ய வேண்டியுள்ளது என்றும் தெரிவித்துள்ளனர். குறிப்பாக 24 வயதுக்கு உட்பட்டவர்களில் 39 சதவீத பேர் தங்களின் தகுதிக்கு ஏற்றவாறு வேலை கிடைக்கவில்லை என்று கூறியுள்ளனர்.(வ)

## மண்டேலாவின் புகைப்படத்துடன் ரேண்ட் நாணயங்கள் வெளியீடு



பிரிட்டோரியா, நவ.8

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான நெல்சன் மண்டேலாவின் புகைப்படங்களுடன் கூடிய ரேண்ட் நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கறுப்பின மக்களுக்காகப் போராடியவர் நெல்சன் மண்டேலா. தற்போது அவரது புகைப்படங்களுடன் கூடிய நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பிரிட்டோரியா நகரில் உள்ள ரிசர்வ் வங்கியின் ஆளுநர் கில் மார்க்ஸ், ஒரு சிறிய கடையில் பொருள்களை வாங்கி அந்த நாணயத்தை வெளியிட்டார்.

இதன்போது அவர் கூறுகையில், பாதுகாப்புக் காரணத்துக்காகவும், புதிய தொழில்நுட்பத்தை புகுத்துவதற்காகவும் 7 ஆண்டுகளுக்கு ஒருமுறை நாணயங்களை மாற்றத் திட்டமிட்டுள்ளோம் என்றார்.

தற்போது வெளியிடப் பட்டுள்ள 10, 20, 50, 100, 200 ரேண்ட் நாணயங்களில் ஒரு பக்கம் மண்டேலாவின் படமும், மறுபக்கத்தில் ஏற்கனவே இருப்பது போன்று 5 பெரிய விலங்குகளின் படமும் உள்ளது. (வ)

# அணு ஆயுத தயாரிப்பை நிறுத்தாவிடில் போரை விரைவில் சந்திக்க நேரும்

## இஸ்ரேல் பிரதமர் ஈரானுக்கு எச்சரிக்கை

ஜெருசலேம், நவ.8

அணு ஆயுதம் தயாரிக்கும் முயற்சியில் ஈரான் தொடர்ந்து ஈடுபட்டால், அந்தநாட்டின் மீது போர் தொடுக்க உத்தரவிடுவேன் என்று இஸ்ரேல் பிரதமர் அறிவித்துள்ளார்.

ஈரான் இரகசியமாக அணு ஆயுதம் தயாரிப்பதாக அமெரிக்கா, இஸ்ரேல் உட்பட மேற்குலக நாடுகள் சந்தேகப்படுவதுடன், பல்வேறு பொருளாதாரத் தடைகளையும் விதித்துள்ளன.

இந்தநிலையில் இஸ்ரேல் நாட்டின் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு தெரிவித்ததாவது:-



**ஈரான் மீது தாக்குதல் நடத்தும் எங்கள் திட்டத்தை, அமெரிக்கா தான் தடுத்து நிறுத்தி வைத்துள்ளது**

நான் பிரதமர் பதவியில் இருக்கும் வரை, ஈரான் அணு ஆயுதங்களை வைத்திருக்க முடியாது.

பொருளாதாரத் தடையை மீறி ஈரான் அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபட்டால், அந்தநாட்டின் மீது உடனடியாகப் போர் தொடுக்கும் உத்தரவை இடுவேன்.

ஈரான் மீது தாக்குதல் நடத்தும் எங்கள் திட்டத்தை, அமெரிக்கா தான் தடுத்து நிறுத்தி வைத்துள்ளது-என்றார். (வ)

## சிரியா இராணுவத்தளபதிகள் 7 பேர் துருக்கியில் தஞ்சம்

அங்காரா, நவ.8

சிரியா இராணுவத் தளபதிகள் ஏழு பேர், துருக்கி நாட்டில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தை பதவி விலகும்படி கோரி, கிளர்ச்சியாளர்கள் 18 மாதங்களாக போராடி வருகின்றனர். அவர்களை ஒடுக்க சிரிய இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. ஆசாத்தைப் பதவி விலகும் படி அமெரிக்கா வற்புறுத்தியது. ஆனால் சிரியா ஜனாதிபதிக்கு, சீனாவும், ரஷ்யாவும் ஆதரவளித்து வருகின்றன.

ஆசாத் பதவி விலகாத காரணத்தால், கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்கா, ஆயுதம் வழங்கி வருகிறது. இதனால், சிரியாவில் போர் தொடர்கிறது. ஓயாத போரால் 25 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். இரண்டு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் அயல் நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். இதற்கிடையே, சிரியா நாட்டு இராணுவத் தளபதிகள் ஏழு பேர், துருக்கியில்தஞ்சம் அடைந்துள்ளதாக, துருக்கி அரசு தெரிவித்துள்ளது. குறித்த தளபதிகள், கிளர்ச்சியாளர்களுடன் இணைந்து போராட திட்டமிட்டுள்ளதாக துருக்கி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (வ)

## 105 தடவைகள் பரீட்சை எழுதி தோல்வி அடைந்த பிரிட்டன் பெண்

லண்டன், நவ.8

பிரிட்டனைச் சேர்ந்த பெண் ஒருவர், 105 தடவைகள் பரீட்சையில் தோல்வி அடைந்தமை அனைவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

பிரிட்டனில் சாரதி பயிற்சிக்கு முன்பாக எழுத்துப் பரீட்சை நடத்தப்படுகிறது. இந்தப்பரீட்சையில் வெற்றி பெற்றால்தான் சாரதி பயிற்சி கற்றுத்தரப்படும்.

இதில் கேட்கப்படும் 50 கேள்விகளில், 43 கேள்விக்கு கண்டிப்பான முறையில் பதிலளித்தாக வேண்டும்.

பிரிட்டன் எல்போர்டு பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர், மேற்படி பரீட்சையை 105 முறை எழுதி தோல்வி அடைந்துள்ளார்.

இதற்காக 2.5 லட்ச ரூபாய் வரை செலவழித்துள்ளார். ஏன் இந்த சாதாரண பரீட்சையில் கூட வெற்றி பெற முடியவில்லை என்பது குறித்து நடந்த ஆராய்ச்சியில், சிலர் பதற்றத்தின் காரணமாகவும், கடைசி நேரத்தில் படிப்பதாலும் தான் தோல்வி ஏற்படுகிறது என்று தெரியவந்துள்ளது. (வ)

## சீன மாலுமிகளை கொலை செய்த வழக்கில் 4 பேருக்கு தூக்கு

பீஜிங்,நவ.8

சீன மாலுமிகள் 13 பேரை கொலை செய்த வழக்கில், நான்கு பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் மெக்கோங் நதியில் வந்து கொண்டிருந்த சரக்குக் கப்பல் கடந்தாண்டு ஒக்ரோபர் மாதம் கடத்தப்பட்டது.

குறித்த கப்பலில் இருந்த 13 மாலுமிகள் கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர். இதுதொடர்பாக நடந்த விசாரணையில், மியன்மார் நாட்டைச் சேர்ந்த போதை மருந்து கும்பலுக்குத் தொடர்பு இருந்தது தெரியவந்தது.



இதனையடுத்து 5 மியன்மார் நாட்டவர்கள் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது சீன நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு, நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

இதில் மியன்மார் நாட்டைச் சேர்ந்த நௌஹாம் என்ற போதை மருந்துக் கடத்தல் கும்பல் தலைவன் உட்பட 4 பேருக்குத் தூக்குத் தண்டனையும், 3 பேருக்கு எட்டு ஆண்டுகள் சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது.

## ஊழல் முறைப்பாட்டால் பறிபோனது ரஷ்ய பாதுகாப்பு அமைச்சரின் பதவி

மாஸ்கோ, நவ.8

ஊழல் முறைப்பாட்டில் சிக்கிய பாதுகாப்பு அமைச்சர் அனடோலி செர்டியூகோவின் பதவி பறிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சரான அனடோலி, பாதுகாப்பு அமைச்சகத்துக்குச் சொந்தமான நிறுவனத்தில் ரூ.540 கோடி மதிப்புள்ள சொத்தில் ஊழல் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.



இதனையடுத்து அவரிடம் விசாரணை நடத்துவதற்கு ஏதுவாக, அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று ஜனாதிபதி மாளிகை செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து மாஸ்கோ ஆளுநரும் தனது நெருங்கிய நண்பருமான செர்கெய் ஷோய்குவை புதிய பாதுகாப்பு அமைச்சராக நியமித்துள்ளதாக கிரெம்ளின் மாளிகை செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு எதிராக உள்நாட்டு கிளர்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில் பாதுகாப்பு அமைச்சர் நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

## பாகிஸ்தான் சிறுமி மீதான தாக்குதல்; மன்னிப்புக் கோரினார் தலிபான் சகோதரி



AFP

டாக்கா, நவ.8

பாகிஸ்தானில் தாலிபான்களுக்கு எதிராக கருத்து வெளியிட்ட பாடசாலை மாணவி மலாலா மீது தாக்குதல் நடத்திய தாலிபானின் சகோதரி அவரிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.

தலையில் சுடப்பட்டு படுகாயம் அடைந்த அவருக்கு தற்போது பிரிட்டனில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்தநிலையில், மலாலாவைச் சுட்ட தாலிபான் இயக்கத்தைச் சேர்ந்தவர் அட்டஹுல் லாஹ் கான் என்பது தெரிய வந்துள்ளது.

இதுகுறித்துப் பேசிய அட்டாஹுல் லாஹ்வின் சகோதரி ரெஹானா ஹலீம், இந்த தகவல் தெரிய வந்ததும், தங்களது குடும்பமே அதிர்ச்சி அடைந்ததாகவும், தங்களது குடும்பத்துக்கு மிகப்பெரிய அவமானத்தை தனது சகோதரன் செய்துவிட்டதாகவும் கூறியுள்ளார்.

எனது சகோதரனின் செயலுக்கு அவனது சார்பில் நானும் எனது குடும்பமும் மலாலாவிடம் மன்னிப்புக் கோருகிறோம்.

மலாலாவும் எனது சகோதரி போலத்தான். அவள் விரைவில் குணமடைய வேண்டும் என்றும், மீண்டும் தனது மகிழ்ச்சியான வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டும் என்றும் நாம் விரும்புகிறோம். என்னையும், எனது குடும்பத்தையும் மலாலா எதிரியாக பாவிக்க மாட்டாள் என்று நாம் நம்புகிறோம் என்றும் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெ.ஜனாதிபதித் தேர்தலில் ஒபாமா வெற்றி பெறுவதற்காக பிரார்த்தனை செய்த அவரது பாட்டி

கென்யா, நவ.8

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் பராக் ஒபாமா வெற்றி பெற அவரது பாட்டி பிரார்த்தனை செய்துள்ளார்.

ஆபிரிக்க நாடான கென்யாவின் கொகெலோ என்ற இடத்தில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் பெற்றோர் வழிச்சொந்தமான 90 வயதான பாட்டி சாரா ஒபாமா வாழ்ந்து வருகிறார்.

ஒபாமாவின் தாத்தாவுக்கு மூன்றாவது மனைவியான சாரா ஒபாமாவிற்கு அமெரிக்காவில் தேர்தல் நடை பெற்றுக் கொண்டிருப்பதை முன்னிட்டு அவருக்கு அங்கு பலத்த பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருந்தது.



தேர்தலுக்கு முன்னர் பத்திரிகையாளர்களிடம் தனது பேரன் பராக் ஒபாமா குறித்துபேசிய அவர்,

அவருடைய வெற்றிக்காக நான் பிரார்த் திக்கிறேன். அமெரிக்க தேர்தல் கடுமையான போட்டி நிறைந்தது. அவருடைய வெற்றி, சந்தோஷத்திற்காக ஒபாமாவுக்கு கடவுள் அருள் புரிவார்- என்றார்.(வ)

## மனித வெடிகுண்டுத் தாக்குதல்

### ஈராக்கில் 26 பேர் சாவு

பக்தாத், நவ.8

ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள இராணுவ முகாமில் இடம்பெற்ற மனித வெடி குண்டுத்தாக்கு தலில் 27 பேர் உயிரிழந்தனர்.

பொது இடங்களில் நடைபெறும் குண்டு வெடிப்பு சம்பவங்களில் அதிகமாக மக்கள் உயிரிழப்பது ஈராக்கில் தற்போது சர்வசாதாரணமாகி விட்டது.

ஈராக்கில் 2006 ஆம் ஆண்டு வன்முறைச் சம்பவங்கள் உச்சக்கட்டத்தில் இருந்தன. பின்னர் படிப்படியாகக் குறையத் தொடங்கிய வன்முறைத் தாக்குதல்கள் மீண்டும் இந்த ஆண்டு தலை தூக்க ஆரம்பித்துள்ளன.



ஈராக் தலைநகர் பக்தாதிலிருந்து 30 கிலோ மீற்றர் தூரத்தில் டஜி என்ற இடத்தில் உள்ள ராணுவ முகாம் அருகில் சக்தி வாய்ந்த கார்க் குண்டு வெடித்தது.

இந்தச்சம்பவத்தில் 26 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 30 இற்கும் மேற்பட்டோர் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

## ஜனாதிபதித் தேர்தலில் விண்வெளியிலிருந்து வாக்களித்தார் சுனிதா

சர்வதேச விண்வெளி நிலையத்தின் பொறுப்பாளரான சுனிதா வில்லியம்ஸ் அங்கு தங்கியிருந்து பணியாற்றி வருகிறார்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. அதில், விண் வெளியில்இருந்தபடியே சுனிதா வில்லியம்ஸ் வாக்களித்தார்.

கடந்த 1997 ஆம் ஆண்டு சட்டதிருத்தத்தின் படி டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள விண்வெளி வீரர்கள் தாம் இருக்கும் இடத்தில் இருந்தே மின்னஞ்சல் மூலம் ஹுஸ்டனில் உள்ள நாசா விண்வெளி மைய்த்துக்கு தங்களின் வாக்குகளைப் பதிவு செய்யமுடியும்.

அதன்படி, சுனிதா வில்லியம்ஸ் சர்வதேச விண்வெளி மையத்தில் இருந்தவாறே மின்னஞ்சல் மூலம் வாக்களித்தார். (வ)

## பிரிவினையைத் தூண்டும் செயல்களை பொறுத்துக் கொள்ளமாட்டோம்

### பாக். நீதிபதிகளுக்கு இராணுவத் தளபதி எச்சரிக்கை

டாக்கா,நவ.8

இராணுவத்துக்கும் மக்களுக்கும் இடையில் பிரிவினையைத் தூண்டி விடும் எந்தச் செயலையும் பொறுத்துக் கொள்ள முடியாது. இராணுவத்தைக் குறைத்து மதிப்பிட வேண்டாம் என்று பாகிஸ்தான் நீதிபதிகளை இராணுவத் தளபதி அஷ்பக் கயானி எச்சரித்துள்ளார்.

பாகிஸ்தான் அரசியலில் இராணுவம் மற்றும் உளவு நிறுவனம் ஐ.எஸ்.ஐ.யின் தலையீடு அதிகமாக உள்ளது என்ற குற்றச்சாட்டு பல ஆண்டுகளாக உள்ளது. இராணுவப் புரட்சி மூலம் நாட்டின் அதிகாரத்தை பலர் பிடித்த வரலாறும் உண்டு. ஆனால், தற்போது உச்ச நீதிமன்றம் அதிரடியாக பல உத்தரவுகளைப் பிறப்பித்து வருகிறது. அரசியலில் தலையிட வேண்டாம். அரசியலில் தலையிடுவதை இராணுவ அதிகாரிகள் இத்துடன் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று இராணுவத்துக்கு கடந்த மாதம் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி இப்திகார் சவுத்ரி உத்தர விட்டார்.

இதுகுறித்து இராணுவத் தளபதி அஷ்பக் கயானி தெரிவித்ததாவது:-



தேசிய நலனை பொறுத்தவரை இராணுவத்துக்கும் மக்களுக்கும் இடையில் பிரிவினையைத் தூண்டும் வகையிலான நடவடிக்கைகளைப் பொறுத்துக் கொள்ள முடியாது என்று கூறினார்.

எனினும், அவர் நீதிமன்றம் அல்லது நீதிபதிகள் பற்றி குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. எனினும், உச்ச நீதிமன்றத்தைத் தான் அவர் மறைமுகமாகக் கூறியுள்ளார் என்று பெயர் வெளியிட விரும்பாத இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். எந்த ஆதாரமும் இல்லாமல், விசாரணை இல்லாமல் தீர்ப்பளிக்கக் கூடாது. அது பொதுமக்களாக இருந்தாலும் இராணுவத்தினராக இருந்தாலும் சட்டம் தன் கடமையைச்செய்ய வேண்டும்- என்றார்.

ஆனால், அரசியலில் இராணுவத்தின் தலையீடு அதிகமாக உள்ளது. இதைத் தடுக்க வேண்டும் என்று கோரி ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி ஒருவர் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். இந்த வழக்கில் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

## இந்தியாவுடன் அணு வர்த்தக ஒப்பந்தம் கனடா இணக்கம்

இந்தியாவுடன் பாதுகாப்பு தொடர்பான அணு வர்த்தகம் மேற்கொள்ளப்படும் என்று கனடா பிரதமர் தெரிவித்தார்.

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்ட கனடாப் பிரதமர் ஸ்டீபன் ஹோர்பர், பிரதமர் மன்மோகன்சிங் உட்பட ஏனைய தலைவர்களைச் சந்தித்துப் பேசினார்.

(வ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(27)



சீனர்கள் புன்சிரிப்புக்கு மதிப்பு தருகிறார்கள். வியாபாரம் செய்பவர்கள் புன்சிரிப்புடன் காணப்பட வேண்டும் என்பது சீனர்களின் கொள்கை. 'சிரிக்கத் தெரியாதவன் கடையைத் திறக்கக் கூடாது' என்பது சீனர்களின் பழமொழி.

மனிதன் தோன்றிய காலத்திலிருந்து சிரிப்பு மனிதனிடம் இருந்து வந்திருக்கிறது. பண்டைய மனிதர்கள் கூட பேசத் தெரியாமல் வாழ்ந்த காலத்தில்கூட ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்சிரிப்பு செய்யக் கற்றிருந்தார்கள். புன்சிரிப்புக்கு மொழி தெரிய வேண்டியதில்லை. எல்லா மொழியினருக்கும் புன்சிரிப்பு ஒன்றுதான் புரிந்த மொழி.

ஓர் ஆணும் பெண்ணும் சந்திக்கும்போதும் காதல் கொள்ளும்போதும் புன்சிரிப்புத் தான் அவர்களை இணைக்கிறது. காதலர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து சிரிக்காவிட்டால் ஏதோ கோளாறு, எங்கேயோ சிக்கல் என்று பொருள். நாம் மற்றவர்களைக் கவர்ந்து இழுக்க வேண்டுமானால் புன்சிரிப்பு என்னும் ஆயுதத்தைப் பயன்படுத்த வேண்டும். பேசுவதற்கு முன்பே புன்சிரிப்பு மற்றவர்களைக் கவர்ந்து விடுகிறது.

ஏதாவது பிரச்சினையுடன் உட்கார்ந்திருப்பவர்கள் கூடப் புன்சிரிப்புடன் வரும் நண்பர்களைக் கண்டதும் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள், பிரச்சினைகளை மறந்து கலகலவென்று பேசுவார்கள். புன்சிரிப்பு விலை கொடுத்து வாங்கும் பொருள் அல்ல. இலவசமாக, இயற்கையாக அது நம்மிடமிருந்து வரக் கூடிய பொருள். அதை மறப்பானேன்?

நாம் மற்றவர்களைப் புன்சிரிப்புடன் வரவேற்பதாலோ, நம்மிடம் இருக்கும் சிரிப்பு குறைந்து விடுவதில்லை. அள்ள அள்ளக் குறையாதது சிரிப்பு ஒன்றுதான்.

நாம் சிரிப்பது ஒரு சில வினாடிகள்தான். ஆனால் அதன் நினைவுகள் நூறு ஆண்டுகள் கூட நீடிக்கும். பணக்காரர்கள் கூடச் சிரிப்பை மற்றவர்களிடமிருந்து பணம் கொடுத்துப் பெற முடியாது. அன்பினாலும், சிரிப்பினாலும்தான் அவர்கள் இதைத் திரும்பப் பெற முடியும்.

ஏழை எளியவர்களுக்கும் சுலபத்தில் கிடைக்கக் கூடியது சிரிப்பு ஒன்றுதான். பட்டினியாக இருப்பவன் கூடச் சிரித்துப் பேசும் போது தன் நண்பனைக் கண்டால் பட்டினியை மறந்து சிரிப்பான்.

குடும்பத்தில் மகிழ்ச்சியை உண்டாக்குவது புன்சிரிப்பு ஒன்றுதான். உறவுடன் இது நட்பையும் வளர்க்கிறது. குடும்பத்தில் உள்ளவர்கள் சிரித்துப் பழகும்போது நண்பர்களைப் போல் மனம் விட்டுப் பழகுகிறார்கள்.

வியாபாரம் செழிக்கச் சிரிப்புடன் வாடிக்கையாளர்களைக் கவனிக்க வேண்டும். சிரிப்புடன் பேரம் பேச வேண்டும். சிரிப்புடன் ஒப்பந்தங்களைச் செய்ய வேண்டும். நண்பர்கள் பேசும்போதும் பழகும்போதும் மனம் விட்டுச் சிரிக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் பிணைப்பு அதிகமாகும். நகைச்சுவை படங்களை நாம் பார்க்கும்போது நமது கவலைகளை மறந்து சிரிக்கின்றோம். வாழ்க்கையில் சிரிக்காதவன், சிரிக்கத் தெரியாதவன் உருப்பட முடியாது.

சிரிப்பு, விலை மதிக்க முடியாதது. அதை யாரும் அபரிக்க முடியாது. திருட முடியாது. களவாட முடியாது. கொள்ளையடிக்க முடியாது. கடன்கூட வாங்க முடியாது. ஆனால் இயற்கையாக அது நம்மிடம் ஊற்றெடுக்கும் பொருள்.

களைப்பினால் சிலர் சிரிக்க முடியாமல் போகலாம். அந்த நேரத்தில் நாம் சிரித்தால் போதும். அவர்கள் களைப்பு பறந்து போகும். மீண்டும் அவர்கள் சிரிக்கத் தொடங்கி விடுவார்கள்.

**பெயர்களை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்**

எளிதில் மற்றவர்களைக் கவர வேண்டுமானால் நாம் சந்திக்கும் ஒவ்வொருவரின் பெயரையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஏழையோ, பணக்காரனோ கவலைப்படக் கூடாது. எல்லோரையும் சமமாக நினைக்க வேண்டும். நாம் சந்திக்கும் மனிதரின் பெயர் என்ன, ஊர் என்ன? வேலை என்ன? என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அவர் சொல்லும் விவரங்களை மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

(தொ டரும்)

-தமிழ்வாணன்-

# பாடசாலை மாணவர்களின் கல்வியில் அதிபர்கள் அக்கறை எடுக்க வேண்டும்

## வவுனியா தெற்கு கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

வவுனியா,நவ.8

பாடசாலை மாணவர்களின் கல்வியில் அதிபர்கள் அக்கறை எடுக்க வேண்டும். பாடசாலை அதிபர்கள் மாணவர்களுடைய கல்வியில் அக்கறை கொள்பவர்களாக இருந்தால், மாணவர்கள் வகுப்பறையில் என்ன செய்கிறார்கள் என்பதைக் கவனிக்கவேண்டும் என்று வவுனியா தெற்கு கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.அன்ரன் சோமராஜா தெரிவித்தார்.

வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான பௌதிக வளங்கள் பற்றிய தகவல் பெறுதல் தொடர்பான முன்னேற்பாட்டு பயிற்சி நிகழ்வு வவுனியா தெற்கு கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது திருமதி அன்ரன் சோமராஜா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சில பாடசாலை மாணவர்கள் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சமயம், அழகியல் பாடங்களில் 50 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறுகின்றனர். ஆனால்

> அண்மையில் வெளிவந்த புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் திருப்தி தருவதாய் இல்லை.

தமிழ் பாடத்தில் 50 இற்கு குறைந்த புள்ளிகளையே பெறுகிறார்கள். தமிழ் பேசும் மக்களாகிய எமக்கு இதுஒரு அவமானத்தைத் தரும் செயலாகும். ஒவ்வொரு பாடசாலையிலும் உள்ள மாணவர்கள், சாதாரண தரத்தில் சித்தியடைந்து உயர்தர வகுப்புக்குச் செல்ல வேண்டும்.

அண்மையில் வெளிவந்த புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் திருப்தி தருவதாய் இல்லை. சில கிராமப் புற பாடசாலைகள் நகர்ப் புற பாடசாலைகளை விட முன்னேறியிருப்பது பாராட்டத்தக்கது. எனினும் நகர்ப்புறத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு தனியார் வகுப்புகள், பிரத்தியேக வகுப்புகள், பாடசாலையில் தொடர்ச்சியான பயிற்சிகள் என வழங்கப்பட்ட போதும், சென்ற ஆண்டை விட சித்தியடைந்த வீதம் குறைவடைந்து இருப்பதற்கு அந்தந்த பாடசாலையில் உள்ள அதிபர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களுமே காரணமாக உள்ளனர்.

அதிபர்கள் பொறுப்புடன் மிகுந்த புத்தியுடன் மாணவர்களை கண்காணிப்பார்கள் ஆயின், மாணவர்களின் சித்தியடையும் வீதம் அதிகரிக்கும். பாடசாலைகளில் பல நிகழ்வுகள் நடத்தப்பட்டாலும், கல்விப் பெறுபேறுகள் தான் எம்மை உயர்த்திக்காட்டும். மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்காக போதிய பௌதிக வளங்களை வழங்கியிருந்த போதிலும் மாணவர்கள் சித்தியடையாதது ஏன்? இந்த விடயத்தை ஆழமாக நாம் பார்க்கவேண்டும். இதற்கான தூண்டல் என்ன? துலங்கல் என்ன? பலவீனம் என்ன? என்பதை நாம் ஒவ்வொருவரும் அறியவேண்டும்.

என்ன வளம் இல்லை என்பதையே அதிபர்கள் சுட்டிக்காட்டுகிறார்களே தவிர, மாணவர்கள் சித்தியடைவதற்கு அவர்களை துடிப்புடன் செயற்படுத்த தவறுகிறார்கள். என்ன வேலைப்பளு இருந்தாலும் பொறுப்புள்ள ஆசிரியர்களை நியமித்து மாணவர்களின் சித்தியடையும் வீதத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டும். இதுவே என்னுடைய இலக்கு என்றார். (எ-402)




தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கோண்டாவில் பொது நூலகத்தால் முன்பள்ளி மாணவர்களுக்கான வர்ணம் தீட்டுதல் போட்டி நடைபெற்றது. ஸ்ரீ நாராயண முன்பள்ளி, வாகீஸ்வரி முன்பள்ளி, கோண்டாவில் மத்தி முன்பள்ளி ஆகியவற்றின் சிறார்கள் இந்தப் போட்டியில் கலந்து கொண்டனர். கோண்டாவில் பொது நூலகத்தின் உத்தியோகத்தர்கள் ஜோ. சகதீசன், லி.இளங்கோ ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-14)

## பரீட்சையில் சித்தி



முல்லைத்தீவு ஆறுமுகம் வித்தியாலயத்தின் தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சையில் சிவனேசன் ரதுசியன் 149 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். (எ)

## புனரமைப்புக் கூட்டம்

தென்மராட்சி பிரதேச கரம்பகம் கிராம அபிவிருத்திச் சங்க புனரமைப்புக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. கிராம அலுவலர் திருமதி எஸ்.செல்வ விநாயகம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்துக்கு விருந்தினர்களாக பிரதேச செயலக நிர்வாக அலுவலர் க.கார்த்திகேசு, சாவகச்சேரி நகரசபை எதிர்க்கட்சித் தலைவர் சு.அலெக்ஸாண்டர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் ஆசிரியர் கணபதிப்பிள்ளை தலைமையிலான 13 பேர் கொண்ட செயற்குழு தெரிவு செய்யப்பட்டது. (எ-9)

# கட்டுரைப் போட்டி முடிவுகள்

அகில இலங்கை இந்து மாமன்றம் பாடசாலை மட்டத்தில் நடத்திய முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் நினைவுதினக் கட்டுரைப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. மூன்று பிரிவுகளாக நடைபெற்ற போட்டிகளின் முடிவுகள் வருமாறு.

**மேற்பிரிவு**

முதலாம் பரிசு - வாலநாயகம் நிஷாங்கி- பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் தேசிய பாடசாலை களுவாஞ்சிக்குடி, இரண்டாம் பரிசு- [illegible] பிரசாந்- வேலாயுதம் மகா வித்தியாலயம் பருத்தித்துறை, மூன்றாம் பரிசு- ரம்யா சபாரிஷா-விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி நீர்கொழும்பு, அ.ஜொகான்-புனித சவேரியர் ஆண்கள் கல்லூரி மன்னார்.

**மத்தியபிரிவு**

முதலாம் பரிசு-க.கபிந்தன்-கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம், இரண்டாம் பரிசு-லெட்சுமன் ஒளித்திருமகள்-கதிரேசன் இந்து மகளிர் கல்லூரி நாவலப்பிட்டி, மூன்றாம் பரிசு-நடேசன் ஜெபனேஸ்-கதிரேசன் இந்து மகளிர் கல்லூரி நாவலப்பிட்டி, ஆறுதல் பரிசுகள்-சர்மினி முருகையா- தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம் சுழிபுரம், டக்சனா கிருஷ்ணானந்தா-கிளிநொச்சி மகா வித்தியாலயம் கிளிநொச்சி.

**கீழ்ப்பிரிவு**

முதலாம் பரிசு-தி.திருஷாயினி-பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலை பண்டத்தரிப்பு, இரண்டாம் பரிசு-க.பிரியச்செல்வி- தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம் சுழிபுரம், மூன்றாம் பரிசு- வி.சப்னா- விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி நீர்கொழும்பு, ஆறுதல் பரிசுகள்-த.திலக்ஷிகா- தொல்புரம் விக்னேஸ்வரா கல்லூரி சுழிபுரம், பாஸ்கரன் சதுஸ்டிகன்-பரந்தன் இந்து மகா வித்தியாலயம். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா விதி, முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்ரிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' –98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## இன்னுமொரு கலவரக் காலம்

அரசுக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்து வந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் போராட்டம் பெரும் இழுபறிக்குப் பின்னர் – 99 நாள்களின் பின்னர் ஒருவாறு முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. அந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்குள்வேயே அரசுக்கு போதும் போதும் என்றாகிவிட்டது. ஆரம்பத்தில் விரிவுரையாளர்களின் போராட்டம் வழமை போன்று ஓரிரு வாரங்களில் தணிந்துவிடும் என்று அரசு நம்பியது. ஆனால் அதற்கு மாறாக தங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதில் விரிவுரையாளர்கள் விடாப்பிடியாக இருந்தார்கள். அரசும் தன் பங்குக்கு சில அழுத்தங்களை பிரயோகித்து விரிவுரையாளர்களைத் தன் வழிக்குக் கொண்டுவர முயற்சித்தது. ஆனாலும் முடியவில்லை. கடைசியில் இரு தரப்பும் பரஸ்பரம் சில விட்டுக்கொடுப்புக்களுடன் அரை மனதுடன் இந்தப் பிரச்சினைக்கு தற்காலிகத் தீர்வொன்றை கண்டுள்ளது.

ஆரம்பத்தில் விரிவுரையாளர்களுக்கு எதிராக கடும் போக்குடன் நடந்து கொண்ட அரசு, குறித்த புறக்கணிப்பால் ஏற்பட்ட விளைவுகளைக் கண்டு தன்னுடைய நிலையிலிருந்து 'பம்மத்' தொடங்கியது. மூன்று மாதங்களாகப் பல்கலைக்கழகங்கள் செயற்படாமையால் மாணவர் தரப்பு பெரும் விரக்தியில் இருந்தது. அத்துடன் இசற் புள்ளியிடல் பிரச்சினையும் சேர்ந்துகொள்ள பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு கொந்தளிப்பு நிலையிலேயே இருந்தார்கள். எப்போது வேண்டுமானாலும் அவர்கள் அரசுக்கு எதிராகப் பொங்கி எழக் கூடிய நிலையே இருந்தது.

இதுபோதாது என்று உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை திருத்தும் பணிக்குச் செல்லமாட்டோம் என்றும் விரிவுரையாளர்கள் அடம்பிடிக்க அரசுக்கு இறங்கி வருவதைத் தவிர வேறு தெரிவுகள் இருக்கவில்லை.

ஒரு மாதிரி இந்தப் பிரச்சினையிலிருந்து மீண்டுவிட்டதாக அரசு ஆசுவாசப் பெருமூச்சை விட முடியாமல் இன்னொரு திசையிலிருந்து தலையிடி கிளம்பியிருக்கிறது.

பாடசாலைகளின் அதிபர்களும், ஆசிரியர்களும் வெகுவிரைவில் அரசுக்கு எதிரான போராட்டத்தில் குதிக்கவுள்ளார்கள். ஏற்கனவே தம்முடைய சம்பள முரண்பாடு தொடர்பாக கல்வி அமைச்சர் பந்துலகுணவர்த்தனவுக்கு அதிபர்களும் ஆசிரியர்களும் சுட்டிக்காட்டியிருந்தார்கள். ஆயினும் அது தொடர்பில் இதுவரை எந்தவித பதிலும் கிடைக்கவில்லை. எத்தனை நாள் தான் அவர்களும் பொறுத்துப் பார்ப்பது? தாமும் பொங்கி எழுந்தால்தான் ஏதாவதொரு முடிவு கிடைக்கும் என்ற நிலைக்கு அதிபர்களும், ஆசிரியர்களும் வந்துவிட்டார்கள். இன்று 8 ஆம் திகதி தங்களுடைய பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காணப்படாவிட்டால் நாடளாவிய ரீதியில் தொழிற் சங்க நடவடிக்கைகளில் அதிபர்களும், ஆசிரியர்களும் ஈடுபடவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை அதிபர்களுக்கு 'கேணல்' பதவியை கொடுத்தால் மட்டும் போதாது. அவர்களின் உழைப்புக்குரிய ஊதியத்தையும் கொடுக்க முன்வரவேண்டும்.

பல்கலைக்கழக மாணவர் எண்ணிக்கையைவிட பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை பல நூறு மடங்கு அதிகம். எனவே நாடளாவிய ரீதியில் அதிபர்களும், ஆசிரியர்களும் தொழிற் சங்க நடவடிக்கைகளில் குதித்தால் இலங்கையில் கல்வித் துறையே போராட்டம் நடக்கும் காலப்பகுதியில் உறைந்துபோய் விடும். அந்த உறைநிலையை மீள சரி செய்வதற்கு அதே அளவு காலப்பகுதி தேவைப்படும். அதற்குள் காலமும் உருண்டோடி விடும்.

லட்சக்கணக்கான மாணவர்களின் கல்வி நிலையில் திடீரென ஒரு தேக்கம் ஏற்பட்டால் அது நாட்டின் இயல்புத் தன்மையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடும். மாதக்கணக்கில் பள்ளிக்குப் போகாமல் தம் பிள்ளைகள் வீடுகளில் இருந்து கெட்டு குட்டிச் சுவராவதை எந்தப் பெற்றோர்தான் பார்த்துக் கொண்டு வாளாவிருப்பார்கள்? அவர்கள் தமது பிள்ளைகளின் கல்விக்காகப் போராடக் கிளம்பிவிடுவார்கள். ஆகவே விரிவுரையாளர்கள் விடயத்தில் காட்டிய மெத்தனத்தை அதிபர், ஆசிரியர் விடயத்திலும் அரசு காட்டுமானால், இலங்கையில் இன்னுமொரு கலவரக் காலத்தை அரசே உருவாக்கிவிடும்.

# 18 ஆவது அரசமைப்புத் திருத்தம் உருவாக்கி வைத்துள்ள மோதல்

மூலம் : மஃப்பிம
தமிழில் : வீஎஸ்ரீ

**சிரேஷ்ட வழக்கறிஞர் கருணாரத்ன ஹேரத்தின் கருத்து**

பல்லாண்டு காலத்துக்கு முன்பிருந்தே இந்த நாட்டு மக்கள் நீதிமன்றத்தைத் தமக்கு நியாயம் பெற்றுத் தரும், பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் சுதந்திரமானதொரு நிறுவனமாகவே கருதி வந்துள்ளனர். உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பேதமின்றி நாட்டு மக்கள் அனைவரும் நீதிமன்றத்தை நியாயத்தின் கோயிலாகக் கருதிக் கௌரவமளித்து வந்தனர்.

நாடாளுமன்ற மற்றும் நிறைவேற்று அதிகார அரசியல் அதிகாரத் தரப்பினர் தமது அரசியல் கொள்கைகளின் அடிப்படையில் செயற்பட்ட வேளைகளில் தமக்கு வாய்த்த அதிகாரத்தைப் பயன்படுத்தி நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் அல்லது தீங்கு விளைவிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்தனர். இதனால் சமூகத்தின் ஒரு தரப்புக்கு நன்மை விளைவிக்கும் செயற்பாடுகள், சமூகத்தின் மற்றொரு தரப்புக்குத் தீமை ஏற்படுத்துவனவாக அமைய நேர்ந்தது. ஆனால் நாட்டின் நீதித்துறை நியாயமாகவும் சுதந்திரமாகவும் இயங்கி நீதியை நிலைநாட்டி வந்தது.

இவ்விதம் முறைப்படி இயங்கிய நீதித்துறைச் செயற்பாடுகளுக்குப் பங்கம் ஏற்படுத்தும் விதத்தில் நீதித்துறையில் சில அரசியல்வாதிகளின் தலையீடு தலைதூக்கியது. 1978 ஆம் ஆண்டின் அரசமைப்பு மூலம் உருவாக்கப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி நடைமுறையே நீதித்துறையில் அரசியல் தலையீட்டுக்கு வாய்ப்பு ஏற்படுத்தி வைத்தது.

1978 ஆம் ஆண்டின் அரசமைப்பு விதிகளுக்கமைய நாட்டின் ஜனாதிபதிக்கு, அரசின் தலைவர், நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் என்பவற்றுக்கு மேலதிகமாக முப்படைகளின் தலைவர் என்ற அதிகாரப் பதவிகளும் வாய்த்துள்ளன. அதுமட்டுமன்றி கட்டுப்பாடற்ற இந்த அதிகாரங்களுடன் நாட்டின் நாடாளுமன்றத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் ஜனாதிபதிக்கு அரசமைப்பு ஆக்கிக் கொடுத்துள்ளது. அந்த வகையில் தற்போது நாடாளுமன்றம், அமைச்சரவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் என்பவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் ஜனாதிபதி கொண்டுள்ளார்.

இன்று அரச சேவை, சகல பாதுகாப்புத் துறைப் படைப் பிரிவுகள் மற்றும் பொலிஸ் துறை என்பவற்றுக்கு அமைய வேண்டிய பாரபட்சமற்ற சேவை மற்றும் மக்கள் நல சேவை என்பன இலங்கை மக்களுக்கு பழைய அனுபவங்களை அசைபோடுவதற்கு மட்டுமே என்ற அளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

1978 ஆம் ஆண்டின் அரசமைப்பு மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி நடைமுறை படிப்படியாக பொது மக்களுக்கான நீதித்துறையின் பாதுகாப்பை நலிவடைய வைத்தது. ஆரம்பத்தில் சிறிய அளவிலான அழுத்தங்களாக அமைந்தபோதிலும் பின்னர் நீதித்துறையின் சுயாதிபத்தியத்துக்கே அழுத்தம் விடுக்கும் அளவுக்கு, நீதிபதிகள் மீதான தாக்குதல்கள், நீதிமன்றக் கட்டடங்களுக்குக் கல் வீச்சு போன்றவை மேற்கொள்ளப்பட்டதன் மூலம் பொது மக்களுக்கான நீதித்துறையின் பாதுகாப்பு கடும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக நேர்ந்தது.

இற்றைக்கு மூன்று, நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் நமது நாட்டின் பொதுமக்கள் தனிமனிதர்களால் நிர்வகிக்கப்படும் நிலையே உலகின் பல நாடுகளிலும் நிலவியது.

சட்டங்களை வகுத்து, குற்றங்களுக்குத் தண்டனை வழங்கும் சகல நீதிமுறை அதிகாரங்களும் அத்தனி மனிதர்கள் வசமே வாய்த்திருந்தன. ஆனால் 17-18 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல் புரட்சி காரணமாக இந்தச் சர்வ அதிகார நிர்வாக நடைமுறை மாற்ற முற்று அதிகாரப் பகிர்வின் ஊடாக அந்த நடைமுறை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

பிரித்தானிய அரசர் வசமிருந்த அரசமைப்பு அதிகாரம், பொதுமக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கிய நாடாளுமன்றம் என்ற அமைப்பிடம் கையளிக்கப்பட்டு, நீதியை நிலைநாட்டும் அதிகாரம் சுதந்திரமான நீதிமன்ற அமைப்பிடமும் கையளிக்கப்பட்டது. 18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இந்த அதிகாரப் பகிர்வு நடைமுறை முதன் முதலில் அரசமைப்புச் சட்டம் என்ற வகையில் அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனையடுத்து பிரான்ஸ் நாட்டில் அறிமுகமான இந்த நடைமுறை காலப்போக்கில் உலகின் ஏனைய பல நாடுகளிலும் நடைமுறைக்கு வந்தது.

இந்த நடைமுறை மூலம் அரசமைப்பு, நீதித்துறை மற்றும் நிறைவேற்று அதிகாரம் என்ற மூன்று வெவ்வேறு அமைப்புக்களாக ஒவ்வொன்றும் சுதந்திரமான அதிகாரங்களைப் பொதுமக்களுக்காகச் செயற்படுத்துவனவாக அமைந்தன.

அரசமைப்புக்கோ, நிறைவேற்று அதிகாரத்துக்கோ நீதித்துறையின் செயற்பாடுகளில் தலையிடும் அதிகாரம் அற்றுப் போனமை நாட்டின் சட்டதிட்டங்களுக்கமைய நீதித்துறை நீதியை நிலைநாட்டும் வாய்ப்பை ஏற்படுத்தி வைத்தது. சட்டத்தை உருவாக்கும் அரசமைப்புத்துறை தான் உருவாக்கிய சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து செயற்படவும், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறைவேற்றுத் துறை சட்டத்துக்கு அமைந்து தமது செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தவும் நேர்ந்தது. அந்த வகையில் ஒரு ஜனநாயக நடைமுறை கொண்ட நாட்டில் சட்டத்தை மீறி எவராலும் செயற்பட இயலாது போயிற்று.

எந்தவொரு நபரும், அவர் எந்தவொரு உயர் பதவியை வகித்தபோதிலும் சட்டத்துக்குக் கட்டுப்படாது செயற்படும் வேளை அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அதிகாரம் நீதித்துறைக்கே உரியதாகையால், சட்ட மீறல் அழுத்தங்களிலிருந்து தப்பித்துக் கொள்ளும் உரிமை பொதுமக்களுக்குக் கிட்டுகிறது.

1801 ஆம் ஆண்டில் உயர் நீதிமன்றம் நிறுவப்பட்டதன் மூலம் இலங்கையில் சுதந்திரமான நீதித்துறை உருவாக்கப்பட்டது. இரண்டு தசாப்த காலத்துக்கு மேலாக அரசியல் அழுத்தங்கள் எதுவுமின்றி நீதித்துறை சுதந்திரமாக இயங்க முடிந்ததால் நாட்டில் நீதி நிலைநாட்டப்பட்டது.

ஆனால் 1978 ஆம் ஆண்டில் நிறைவேற்று ஜனாதிபதிப்பதவி, அரசமைப்புக்கு, அரச சேவைக்கு மட்டுமன்றி நீதித்துறையின் உயர் அதிகாரத்துக்கும் அழுத்தம் ஏற்படுத்தத்தக்க நிலை அரசமைப்பின் மூலமாகவே ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் நலிவு நிலையடைந்த அதிகாரப் பகிர்வு நடைமுறை, அரசமைப்புக்கான 17 ஆவது திருத்தத்தின் மூலம் மீண்டும் பலப்படுத்தப்பட்டது. அத்திருத்தத்தின் மூலம் நீதித்துறை, தேர்தல் திணைக்களம், அரச சேவை போன்ற சுதந்திரமாக இயங்க வேண்டிய நிறுவனங்கள் நிறைவேற்று அதிகாரத்திலிருந்து விடுபட்டு, சுதந்திரமாகச் செயற்படத்தக்க நிறுவனங்களாக ஆக்கப்பட்டன.

ஆனால் இந்நாட்டின் தேசியத்தின் துரதிர்ஷ்டம் என்ற விதத்தில் இந்த ஜனநாயகவாத அடிப்படையை நலிவடையச் செய்து அரசமைப்புக்கான 18 ஆவது திருத்தத்தை நாடாளுமன்றம் நிறைவேற்றியது. அதனை இந்த நாட்டின் நீதித்துறையும் உறுதிப்படுத்தியது. அரசமைப்புக்கான 17 ஆவது திருத்தத்தின் மூலம் வலுவிழக்கச் செய்யப்பட்ட சர்வ அதிகாரம் அரசமைப்புக்கான 18 ஆவது திருத்தத்தின் மூலம் மீண்டும் வலுவடையச் செய்யப்பட்டது.

இன்று இவ்விதம் வலுவடையச் செய்யப்பட்ட சர்வ அதிகார பலத்தின் செயற்பாடுகளை இந்நாட்டு மக்கள் அனுபவிக்க நேர்ந்துள்ளது. இத்தகைய சர்வ அதிகார நடைமுறையை மீண்டும் பலமடைய வைத்த பங்கை இந்நாட்டு மக்களது சுயாதிபத்திய அதிகாரத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்றமே செய்துள்ளமை இந்நாட்டு மக்களது துரதிர்ஷ்டமே. நீதிச்சேவை ஆணைக்குழு, பொலிஸ் சேவை ஆணைக்குழு போன்ற சுதந்திரமாகச் செயற்படத்தக்க நிறுவனங்களின் சுயாதிபத்திய அதிகாரம் அரசமைப்பின் 18 ஆவது திருத்தத்தின் மூலம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் மூலம் நீதித்துறையின் தீர்மானங்களில் கூட தலையிடும் அதிகாரம் நிறைவேற்று அதிகாரத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

சுயாதீனமாக முடிவுகளை மேற்கொள்ளத்தக்க நீதித்துறையின் சுதந்திரம் இதன் மூலம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. ஜனநாயகவாதத்தை நிலைநாட்டும், தவறற்ற சட்டப்படியான தீர்ப்புக்களை வழங்கும் நீதிமன்றத் தீர்ப்புக்கள் நிறைவேற்று அதிகாரத்தின் அதிருப்திக்கு உள்ளாகும்போது நீதிபதிகள் தாக்குதலுக்கு உள்ளாவதற்கும் உயிர் அச்சுறுத்தலுக்கு உள்ளாவதற்கும் காரணம் அதிகாரங்களைப் பரவலாக்கும் அரசியல் கொள்கை, அரசமைப்பின் மூலம் கைவிடப்பட்டதனாலேயே ஆகும். இதன் மூலம் நீதி தேடி நீதிமன்றங்களை நாடும் நாட்டின் பொதுமக்களே பாதிப்புகளுக்கு உள்ளாக நேர்கிறது.

இவை பொதுமக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் அதேவேளை, நீதித்துறை மீது பொதுமக்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும் அற்றுப் போகச் செய்கிறது. நீதித்துறையில் தமக்கு நியாயம் கிட்டாத நிலையில் பொதுமக்கள் சட்டத்தைத் தமது கைகளில் எடுத்துச் செயற்பட விளையும் தன்மையும் நல்லதொரு நிலையல்ல. அகிம்சை வழியில் பொதுமக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் நிலை இதன் ஆரம்ப அறிகுறியாகக் கொள்ளத்தக்கது.

இலங்கை போன்ற நாடுகளில் இவ்வித ஜனநாயகவாதத்தை நலிவடைய வைக்க முயற்சிக்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சக்திகள் நாட்டு மக்களது அகிம்சை வழியிலான இந்த அரச எதிர்ப்புக்கு தூண்டுதல் அளிக்க முயலக் கூடும் என்பது கசப்பானதொரு உண்மையே. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசேதனத்திலிருந்து சேதன வேளாண்மை நோக்கி...

அர்ச்சனா உதயராட்ணம்
விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

நாம் இருவர் நமக்கேன் ஒருவர் என்று ஆகிவிட்டது சனத்தொகையின்வளர்ச்சி. அந்தளவுக்கு வானை முட்டும் அளவுக்கு பரந்துவிட்டது உலக சனத்தொகை. சனத்தொகையின் அதிகரிப்புக்கு ஏற்ப உணவுத் தேவையும் அதிகரித்தே காணப்படுகின்றது. இதன் விளைவாக ஏற்பட்டதே பசுமைப்புரட்சியாகும்.

இதன் விளைவாக பசுமைப் புரட்சிக்குப்பின்னதாகப் பயன்படுத்தப்பட்ட அசேதன இரசாயனங்களதும் பூச்சி கொல்லிகளினதும் பயன்பாடானது அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் நாம் உட்கொள்கின்ற உணவானது மறைமுகவிடமாகவே காணப்படுகின்றது.

இதனை உட்கொள்கின்றபோது ஏற்படுகின்ற உடல் உபாதைகளை நீக்குவதற்காக மருத்துவரை நாடிச்செல்லும்போது அந்த மருந்து மாத்திரைகளால் ஏற்படும் பக்க விளைவுகள் அதனைவிட அதிகமாகவே காணப்படுகின்றது. இவ்வாறாக இன்று இயந்திர வாழ்க்கையே காணப்படுகின்றது.

இன்றைய விவசாய உலகின் மிகப் பெரும் சவாலாக அமைவது எவ்வாறு அசேதன விவசாயத்திலிருந்து சேதன வேளாண்மைக்கு மாறலாம் என்பது பற்றியதாகும்.

எமது விவசாய நிலங்களில் முக்கியமாக 3 சத்துக்கள் காணப்படுகின்றன. தழைச்சத்து (நைதரசன்), மணிச்சத்து (பொசுபரசு) மற்றையது சாம்பல் சத்து (பொற்றாசியம்) ஆகும். இவை மூன்றும் சரியான விகிதத்தில் காணப்பட்டாலே பயிர்கள் செழிப்பாக வளர்ந்து நாம் எதிர்பார்க்கின்ற விளைச்சலைத் தரும்.

இவ்வாறான சமநிலையை நாம் வளம் பொருந்திய காடுகளிலே காணமுடியும். காடுகளில் காணப்படுவது சேதனஉரமக்கிகள் ஆகும்.

விவசாயிகள் யூரியா, அமோனியம், சல்பேற்று, MOP மற்றும் TSP போன்ற அசேதன உரங்களையும் பூச்சி கொல்லிகளையும் அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறாக பயன்படுத்தும் போது இயற்கையாக மண்ணில் காணப்படுகின்ற சத்துக்களில் பாதிப்பும் அவற்றின் சமநிலைகள் மாற்றப்பட்டு இறுதியாக வேளாண்மை நிலங்கள் தரிசு நிலங்களாக மாற்றப்படுகின்றன.

மண்வளம் குன்றும்போது நாம் பெறுகின்ற விளைச்சலின் அளவும் மிகக் குறைவாகவே காணப்படும். மண்ணில் காணப்படும் சத்துக்கள் அயனிக் வடிவிலேயே காணப்படும்.

குறிப்பாக நைதரசன் பல வடிவங்களில் காணப்படும் $NH_4^+$, $NO_3^-$, $NO_2^-$ மற்றும் களிமண் துணிக்கைகளால் சூழப்பட்ட வடிவிலும் காணப்படும். தாவரத்தின் சிறப்பான வளர்ச்சிக்கு பொறுப்பாகவுள்ள சத்து தழைச்சத்தாகும் (நைதரசன்). எனவே வேளாண்மை நிலங்களைசிறந்தநில மேலாண்மை செய்வதன் மூலமாக தொடர்ந்தும் உற்பத்தித்திறனுள்ள நிலங்களாகப் பேணமுடியும்.

நில மேலாண்மை என்பது நாம் விவசாயத்துக்குப் பயன்படுத்துகின்ற நிலத்தை எவ்வாறு மேலாண்மை செய்து சத்துக்களை அந்த இடத்திலேயே தக்கவைத்துக் கொள்வது என்பது பற்றியதாகும்.

தற்காலத்து விவசாயிகள் மீண்டும் தமது முன்னோர்களின் வழிமுறைகளைப் பின்பற்ற தொடங்கியுள்ளனர். பல்வேறு சேதன முறைகளை பயன்படுத்தி விவசாயத்தை மேற்கொள்கின்றனர். குறிப்பாக மூடு பயிர்கள், சுழற்சி முறை பயிர்ச் செய்கை, ஊடு பயிர்கள் போன்ற முறைகளை சிறப்பாக நடைமுறைப்படுத்துகின்றனர்.

மண் வளத்தை இயற்கையான முறையில் அதிகரிக்கச் செய்வது முக்கியமாகும். ஓர் எல்லைக்கு மேல் எவ்வளவு அசேதன இரசாயனங்களை பயன்படுத்தினாலும் எதிர்பார்த்த விளைச்சலை எட்ட முடியாது. இவ்வகையான அசேதன உரங்களால் மண்ணில் காணப்படும் நன்மை பயக்கின்ற நுண்ணுயிர்கள், மண்புழுக்கள் போன்றவை அழிக்கப்படுகின்றன.

எனவே இயற்கையான முறையில் வேளாண்மை நிலங்களை வளப்படுத்துமாறு விவசாய திணைக்களம் வலியுறுத்தி வருகின்றது. இயற்கையான முறைகளில் மிக முக்கியமானவை பசுந்தாள் பசளை, மண்புழு உரம் மற்றும் வடிநீர், பண்ணைக் கழிவுகள் போன்றவை ஆகும்.

### பசுந்தாள் பசளைகள்

சணல், நுணா, சீமைக்கிழுவை, புங்கம், அகத்தி, வேம்பு, பூவரசு, நொச்சி, ஆடாதோடை, எருக்கலை போன்றவை பசுந்தாள் பசளைகளாக உபயோகிக்கப்படுகின்றன.

இவற்றில் சணல் மிக முக்கியமாக நெல் வயல்களில் நெற்பயிரைத் தொடர்ந்து விளைவிக்கப்படுகின்றது. இவை பூப்பதற்கு சற்று முன்னர்வெட்டப்பட்டுவயல்களிலே உழப்படுகின்றன. இவற்றுக்கு வளிமண்டல நைதரசனை பதிக்கின்ற ஆற்றல் உண்டு. எனவே நிலத்துக்குத் தேவையான நைதரசனை இவை வழங்குவதால் சிறப்பான வளர்ச்சியை காட்டும்.

சீமைக்கிழுவை, புங்கம், அகத்தி, பூவரசு, ஆடாதோடை போன்றவற்றின் இலைகள், தளைகள் என்பவற்றை பறித்து வேளாண்மை நிலத்துக்கு போடுகின்றபோது அந்தப் போகத்துக்குரிய தழைச் சத்து (நைதசரன்) மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களையும் வழங்கக் கூடியதாக இருக்கும்.


பசுந்தாள் பசளைகளை பயிர் நடுவதற்கு 2 வாரங்களுக்கு முன்னதாக ஏக்கருக்கு 2500 கிலோகிராம் என்ற அளவில் இட வேண்டும்.

### பண்ணைக் கழிவுகள்

அன்றாடம் பண்ணைகளில் பல வகையான திண்மக் கழிவுகளும் திரவக் கழிவுகளும் இடப்படுகின்றன. இலைச் சருகுகள், விலங்குகளின் மலங்கள் போன்றவற்றை உக்கச்செய்து அவற்றை வேளாண்மை நிலங்களில் போடுவதன் மூலமாக நிலத்தை வளம் பொருந்தியதாக மாற்றிக் கொள்ளலாம்.

குறிப்பாக கால்நடைகளில் இருந்துகிடைக்கக்கூடியகழிவுகளை பயன்படுத்துவது இலாபகரமானது.

மாடுகள் சராசரியாக நாளொன்றுக்கு 10 கிலோகிராம் சாணம் மற்றும் 6-7 லீற்றர் சிறுநீரையும் கழிக்கின்றன. ஆண்டுக்குப் பார்க்கின்ற போது அண்ணளவாக 3.5 தொன் சாணமும் 2500 லீற்றர் சிறுநீரும் ஒரு மாட்டிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.



மாட்டினுடைய சாணத்தை விட சிறுநீரில் 50 வீதம் தழைச் சத்தும் (நைதசரன்), 25 வீதம் சாம்பல் சத்தும் (பொற்றாசியம்) அதிகமாகக் காணப்படுகின்றன.

ஆட்டை எடுத்துக் கொண்டால் நாளொன்றுக்கு 300 கிராம் பிழுக்கையும் 200 மில்லிலீற்றர் சிறுநீரையும் கழிக்கின்றது. அத்துடன் கோழியுடைய வறண்ட எச்சத்தைக் காட்டிலும் உடன் இடப்பட்ட எச்சத்தில்காணப்படும் தழைச்சத்தானது அதிகமாகக் காணப்படுகின்றது. இவ்வாறான நன்கு உக்கிய பண்ணைக் கழிவுகளைசிறப்பாகமுகாமை செய்வதன் மூலமாகநிலங்களை விளைத்திறன் கூடியதாக மாற்றிக் கொள்ளலாம்.

### மண்புழு உரம்

மண்புழுக்களை பொதுவாக 'விவசாயிகளின் நண்பன்' என அழைப்பர். இயற்கை வேளாண்மைக்கு தேவையான முக்கிய மூலப்பொருளாக நாம் மண்புழுக்களை பயன்படுத்திக் கொள்ளலாம். வீட்டுத் தோட்டங்களிலேயே மண்புழுக்கள் காணப்படுகின்றன. இவ்வாறான மண்புழுக்களைப் பயன்படுத்தி நிலத்தை வளமாக்கிக் கொள்ளலாம்.

சாணம், பண்ணைக்கழிவுகள், வயல்களில் காணப்படும் களைகள், இலைகள், தளைகள், பழங்கள் என்பவற்றை மண்புழுக்களுக்கு உணவாகக் கொடுத்து மண்புழுக்களை வளர்த்துக் கொள்ளலாம். மண்புழுக்கள் உணவாக உட்கொண்டு வெளியேற்றும் எச்சமே மண்புழு உரமாகும். இதனை Vermi compost என்று அழைப்பர்.

மண்புழு உரதயாரிப்பு தொட்டியில் ஊற்றப்பட்ட உபநீரானது கீழே திரவமாக வெளியேறும். இதனை வேர்மிவோஷ் என்பார்கள்.

இதில் நைதசரன், பொசுபரசு, பொற்றாசியம் மற்றும் நுண்ணூட்டச்சத்துக்கள் திரவ நிலையில் உள்ளதால் பயிர்கள் எளிதாக அகத்துறிஞ்சிக் கொள்கின்றன. இதனால் செழிப்பான வளர்ச்சியை கண்கூடாகக் காணமுடியும்.

மண்புழு உரத்தில் உள்ள அனைத்து சத்துக்களும் உடனடியாக தாவரத்துக்குக் கிடைக்கக் கூடியதாக உள்ளதால் வேர்வளர்ச்சி மற்றும் பூக்கும் ஆற்றல் அதிகமாகத் தூண்டப்படுகிறது. இதனால் 20-30 வீதம் விளைச்சலைப் பெருக்கிக் கொள்ளமுடியும்.

இவ்வாறாக இயற்கையாகக் காணப்படுகின்ற பொருள்களைப் பயன்படுத்தும்போது மண்ணின் வளத்தை பெருக்குவதுடன் மண் கட்டமைப்பையும் அதிகரிக்கலாம்.

எம்மிடம் உள்ள வளங்களை நாமே பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் யார்தான் பயன்படுத்திக் கொள்வர். சிறுதுரும்பும் பல்லுக்குத்த உதவும் என்பது ஆன்றோர் வாக்கு. இதற்கு ஏற்ப கழிவுப் பொருள்களை முகாமை செய்து இயற்கை வேளாண்மையை பெருக்கிக் கொள்வோம். ஆரோக்கியம் எமது கைகளிலேயே உள்ளது. புரிந்துகொள்வோம். எதிர்கால சந்ததியினருக்கும் கற்றுக் கொடுப்போம்.

---

செ.ரமேஷ்

# மிருகம் மனிதன் பாதி

மனிதன் அன்று சிந்தித்ததனால் தான் உலகு அபரிமிதமான வளர்ச்சியை இன்று கண்டுள்ளது.

சிந்தனை நல்லதானபடியால் தான் கண்டுபிடிப்புகளும் - புதிய பரிணாமங்களும் தோற்றுவாய்களும் உருவாகின்றன.

இந்த அரிய கண்டுபிடிப்புக்கள் இன்று மனிதனை சந்திரனிலும் - செவ்வாய் கிரகத்திலும் ஏனைய கிரகங்களிலும் புதிய ஆய்வுகள் வரை கொண்டு சென்றுவிட்டுள்ளன.

ஏனைய புதிய கண்டுபிடிப்புக்கள் மனித உலகுக்கு உதவக் கூடியதாக இருந்தாலும் `90 வீதமானவை மனிதனை அழிக்கவே பயன்படுகின்றன. இதனால் மனிதன் மிருமாகின்றான். இன்று உலகம் கணனியில் ஒரு மைல் கல்லாகத் திகழுகின்றது.

தொடர்பாடல் வேகம் அதிகரித்துள்ளது. கற்பனாசக்தி, சிந்தனை சக்தி என்பன நிமிடத்துக்கு நிமிடம் மேலோங்கிச் செல்கின்றது.

உலக மாறுதல்கள் - அழிவுகள் - மாற்றங்கள் ஏற்படப் போவதாகவும் விஞ்ஞானிகள் எதிர்வு கூறி வருகின்றனர்.

இந்த கண நேரத்தில் அறிவு சக்தி படைத்த மனிதன் - இந்த மனித குலத்தை நல்வழியினூடே நகர்த்த வேண்டும்.

தவறான வழிகளைப் பின்பற்றுவதன் மூலம் மனிதனுக்கு மகிழ்ச்சி உண்டாகலாம்.

ஆனால் அது தற்காலிகமானது. நாம் ஒவ்வொருவரும் நமக்கு நாமே கேள்விகளைக் கேட்க வேண்டும்.

எது சரி, எது தவறு, எது தேவை என்பதனைத் தெளிவாகப் பகுத்தறிந்து புரிந்துகொள்ள முடியும்.

அதுவே நிரந்தரமான மகிழ்ச்சியைத் தரும். மனிதனுக்குள் பல வடிவங்களில் மிருகங்கள் உள்ளன. அந்த மிருகங்களின் மகிழ்ச்சி தற்காலிகமானதாகவும் பின் விளைவுகளை ஏற்படுத்துவனவாக [illegible] [illegible] மனித மிருகங்கள் இவற்றைக்கண்டுகொள்வதில்லை.

தற்காலிக மகிழ்ச்சிக்காக எதனையும் செய்யத் துணியும்.

இதுவே இன்றைய உலகிலும் - மானிடம் வாழும் பிரதேசங்களிலும் இடம்பெறுகின்றது.

அன்பு, கருணை, நீதி, நியாயம் என்பன அந்த மிருகத்தை உலுப்பி சுயநலம் மேம்பட்டு மனித இனம் சின்னாபின்னமாகி விடுகிறது.

நாம் இந்த உலகில் பிறந்து வாழுகின்றோம். மனிதனின் பல குணங்கள் உண்டு. அக்குணங்களில் நல்லன, தீயன உள்ளன.

இதில் நல்ல மனிதர்கள் நல்ல விடயங்களை முன்னெடுக்கின்றனர்.

பல நல்லமனிதர்களின் செயல்களை சில கெட்ட மனிதர்கள் மிருக குணத்தினால் அழிக்க முற்படுகின்றனர்.

இதனால் நல்லபல திட்டங்களும் முன்னேற்பாடுகளும் அழிவடைகின்றன.

எனவே இந்த உலகம் மாற்றம் பெற்றுச் செல்கின்றது.

அழிவுகள் இடம்பெறாத - மனித குலம் முன்னேற்றம் அடைந்து செல்லவும் வளர்ச்சி - அபிவிருத்தியை நோக்கி ஒவ்வொரு துறையும் வளர்ந்து செல்லவும் மிருகக் குணம் உள்ள எம்மை மனித குணமாக மாற்றி சாத்வீக அடிப்படையில் சென்றால், நாம் நினைக்கும் இனிய உலகைப் படைக்கலாம்.

எனவே மனிதர் ஆகிய நாம் பகுத்தறிவுடன் மிருக குணத்தையும் மாற்றி செயற்பட முயற்சிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனச்சுமை!

அவர் ஒரு வைத்தியர்.

அவர் இராணுவத்திலே வேலை செய்தார்.

போர் முனையிலே காயப்பட்ட வீரர்களுக்குச் சிகிச்சை அளிப்பது அவருடைய வேலை. எல்லோரிடமும் மிகவும் அன்பாக நடந்து கொள்வார்.

தன்னிடம் வந்து சேரும் நோயாளிகளை மிகவும் விரைவில் குணப்படுத்தி அனுப்பி விடுவார். அப்படிக் குணமாகிப் போகிற வீரர்களை இராணுவத் தலைமை, மறுபடியும் சண்டை போடுவதற்காகக் போர்முனைக்கு அனுப்பி வைத்துவிடும். ஒரு தடவை ஒரு இளம்போர்வீரன் அடிபட்டு அவரிடம் வந்து சேர்ந்தான்.

அவனுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. அவனுடைய தோளிலும், தொடையிலும் குண்டு பாய்ந்திருந்தது.

வைத்தியர் மிகவும் கவனமாக அந்தக் குண்டுகளையெல்லாம் வெளியே எடுத்தார்.

தீவிரமாக சிகிச்சை அளித்தார். அந்த இளைஞன் விரைவில் குணமடைந்து விட்டான். போகும்போது வைத்தியரிடம் கூறினான்:

''வைத்தியர்! இப்போது நான் மறுபடியும் போர்முனைக்குப் போகிறேன். சிறிது நாள் கழித்து விடுமுறை எடுத்துக் கொண்டு சொந்த ஊருக்குப் போகப் போகின்றேன். அங்கே எனது அம்மா எனக்கு திருமணம் செய்யிறதுக்காக ஒரு பெண்ணை பார்த்து வைத்திருக்கிறார். போய் திருமணம் செய்துவிட்டு வரவேண்டும் என்று உற்சாகமாகச் கூறினான். வைத்தியர் மிகவும் மகிழ்ச்சியாக தன்னுடைய நல்வாழ்த்துக்களைச் சொல்லி அந்த இளைஞனை அனுப்பி வைத்தார்.

சிறிது நாள் கழித்து அவருக்கு ஒரு செய்தி வந்தது. அது என்ன தெரியுமா?

அந்த இளைஞன் போர் முனையிலே இறந்து போய்விட்டான்.

இந்தச் செய்தியைக் கேட்டதும் அந்த வைத்தியர் மிகவும் கலங்கி போய்விட்டார். அதன் பிறகு சிந்திக்க ஆரம்பித்தார்.

''நான் குணப்படுத்துகின்றேன் என்பதை விட மறுடியும் அந்த வீரர்களை இறப்பைச் சந்திப்பதற்குத் தயார்படுத்துகின்றேன் என்பது தான் பொருத்தம் என்று நினைத்தார்.

தன்னிடம் வந்து உயிரைக் காப்பாற்றிக் கொண்டு போகின்ற வீரர்களெல்லாம் போர்முனையிலே இறந்து போகிறார்கள். என்ற செய்தி அடிக்கடி வர ஆரம்பித்தது. அவராலே தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனாலே அவர் இராணுவத்தை விட்டு விலகினார். எங்கேயோவெல்லாம் சுற்றினார். தற்செயலாக ஒரு ஜென்ம குருவைச் சந்தித்தார். சிறிது நாள் அவருடன் தங்கியிருந்தார். அந்த சிறிது நாளிலேயே அவருக்கு ஒரு தெளிவு கிடைத்தது.

''யோசித்துப் பார்த்தால் .. இந்த உலகத்திலே பிறந்த எல்லோருமே ஒரு நாள் சாகப்போகிறார்கள் தான். ஆனால் ஒன்று.... சிறிது முன்னே பின்னே போகிறார்கள் அவ்வளவு தான். இதில் வருத்தப்பட என்ன இருக்கிறது.

என்னுடைய கடமை மருத்துவ சிகிச்சை கொடுப்பது தான்! தேவையில்லாத எண்ணங்களைச் சுமப்பது இல்லை.

என்கிற தெளிவு அவருக்கு ஏற்பட்டது. அதன் பிறகு நேராக குருவிடம் சென்றார்...

போய் வருகின்றேன் என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டார்.

மறுபடியும் இரணுவத்திலே இணைந்தார். தன்னுடைய தொழிலை வழக்கம் போல செய்ய ஆரம்பித்தாராம்.

சீன நாட்டிலே ஒரு படைத் தலைவன் இருந்தான். மிகவும் சிறந்த வீரன். துணிச்சலாக பல காரியங்களைச் செய்து இருக்கிறான்.

அவன் ஒரு அழகான கோப்பையைக் கையில் வைத்துக் கொண்டு அப்படியும் இப்படியும் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தான். யாரோ அவனுக்குப் பரிசாகக் கொடுத்தது அது.

அப்படியும் இப்படியும் திருப்பி அதன் பூ வேலைப்பாடுகளை இரசித்தான். அப்படி செய்து கொண்டிருக்கும் போது அந்தக் கோப்பை திடீரென்று கையிலிருந்து நழுவி கீழே விழப் பார்த்தது. அவன் நடுங்கிப் போய்விட்டான்... எங்கே அது உடைந்து விடுமோ என்று! மெதுவாக அதை மேசை மீது வைத்தான். அவனின் மனப்பதற்றம் அடங்க அதிக நேரம் ஆகிவிட்டது.

எத்தனையோ பேரை அவன் கலங்க வைத்திருக்கிறான். இங்கே ஒரு சின்னக் கோப்பை அவனை கலங்க வைத்து விட்டது. இந்த நிலைமை நீடித்தால் தான், ஒரு மனிதன் நோயாளியாகக் கூட ஆகக்கூடும் என்ற எண்ணம் வந்தது.

பொருள் மீது வைத்த பற்றுதான் தன்னைப் பலவீனப்படுத்திக் கொண்டு இருக்கிறது என்றது விளங்கியது.

உடனே அந்தக் கோப்பையை எடுத்தான். வீசி எறிந்தான். அது தூள் தூளாக உடைந்து விட்டது. வேலையாளைக் கூப்பிட்டு அந்த இடத்தைச் சுத்தப்படுத்தச் சொன்னான்.

அதே நேரம் இவனுடைய மனதும் சுத்தமாகி விட்டது. இப்போது அவனுக்கு நிம்மதியாக இருந்தது.

மனதை உதறுவது சிரமமாகத்தான் இருக்கும்!

மனதை உதறிவிட்டால், பிரச்சினையே இல்லை. இதை நாங்கள் விளங்கிக் கொண்டோம் என்றால் வாழ்க்கை ஒரு சுமையாகத் தெரியாது. சுகமாகத்தான் தெரியும். எங்கள் மனிதர் ஒருவர் சொன்னார்:-

''நீங்கள் சொன்ன மாதிரி நானும் ஒரு அழகான கண்ணாடிக் குவளையை தரையிலே வீசி எறிந்து விட்டேன் ஐயா! என்றார்.


''அதன் பிறகு மனதை உதறினீர்களா? என்றேன்.

''இல்லை! அதுக்கு முதல் காலை உதற வேண்டியதாகப் போய் விட்டது! ஏனென்றால் உடைந்த கண்ணாடி ஓடு முதலில் எனது காலைத்தான் பதம் பார்த்தது!'' என்றார்.



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# 18ஆம் நூற்றாண்டு பழைமையான கரமத்தை கந்தசுவாமி ஆலயம்



**லக்ஸ்மன்**

நெடுந்தீவு மேற்கு கரமத்தை கந்தசுவாமி கோயில் கி.பி. 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் புக்காடு ஞானவைரவர் என வணங்கப்பட்ட ஆலயத்தில் சிறு ஆலயம் ஒன்றை முருகப்பெருமானுக்கென உருவாக்கி முதலில் ஆரம்பிக்கப்பட்டதாகும். ஐயம்பெருமாள் சங்கரப்பிள்ளை, ஐயம்பெருமாள் சுப்பிரமணியம் இருவரும் சகோதரர்கள். இவர்கள் முருக பக்தர்கள் என்பதால் இந்த ஆலயத்தை அமைத்து வழிபட்டு வந்தனர்.

தினமும் தவறாது வழிபாடுகளை மேற்கொண்டு வந்தபோதும், அவர்களது குடும்பத்தில் எந்தவித முன்னேற்றமும் காணப்படாது. அடிக்கடி துன்ப நிகழ்வுகள் இடம்பெற்று வந்தமையால் இருவரும் மனமுடைந்த நிலையில் இருந்த போதும் முருகப் பெருமான் மீது கொண்ட பக்தி காரணமாக தமது வழிபாட்டைத் தொடர்ந்து கொண்டிருந்தனர்.

ஓர் இரவில் அவர்களின் கனவில் தோன்றிய அந்தணச் சிறுவன் ஒருவன் ''என்னை இங்கு வைத்துக் காத்து வந்தால், நான் உங்களுக்கு உதவுவேன்'' எனக்கூறியதாகவும், மறுநாள் இரு சகோதர்களும் தாங்கள் கண்ட கனவைப் பரிமாறிக்கொள்ள, வேலை வைத்து தாங்கள் வணங்கியதால் முருகப்பெருமானே தமது கனவில் தோன்றி தமக்குக் கட்டளையிட்டுள்ளதாக எண்ணினர். இதுவரை காலமும் தாங்கள் புக்காட்டு ஞானவைரவர் கோயிலில் வைத்து வழிபட்டு வந்த ஞான வேலையும், மற்றும் பொருள்களையும் எடுத்துக் கொண்டு கனவில் காட்டப்பட்ட இடமாகிய கரமத்தையில் ஒரு சிறிய ஆலயத்தை அமைத்ததாகவும், இது 1815 ஆண்டில் இடம்பெற்றதாகவும் முன்னோர்கள் கூறியதுண்டு.

இரு சகோதரகளும் எழுவர் பெருமையினார், எழுவர் சிதம்பரப்பிள்ளை ஆகிய சகோதார்கள் இருவரைத் தம்முடன் சேர்த்துக் கொண்டு தாம் அமைத்த சிறிய கோயிலை மேலும் பெரியளவில் கட்ட நடவடிக்கை எடுத்தனர். இவர்களது முயற்சியில் இரண்டு மண்டபங்களுடன் கூடிய ஆலயத்தை அமைத்ததுடன் முருகப் பெருமான் தொடர்பான விசேட தினங்களில் ஊர் மக்கள் கூடி விசேட பூசை வழிபாடுகளையும் மேற்கொண்டு வந்தனர். விசேடமாகக் கந்த புராணம் படிப்பதுடன், அன்னதானமும் வழங்கப்பட்டு வந்தது. முதன் முதலாக இங்கேயே அன்னதான நிகழ்வு இடம்பெற்றதாகவும் சொல்வதுண்டு.

> சாராப்பிட்டி தொட்டிச்சாகுளம் சுற்றுவட்டத்தில் வாழ்ந்தவர்கள் வீரசேகர முதலி பரம்பரையினர் என அழைக்கப்படுவதுண்டு இவர்களின் குல தெய்வமாக கரமத்தைக் கந்தன் விளங்கினார். இங்கு கோயில் ஆரம்பிக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்த நாளில் வருடாவருடம் பூசைகள் இடம்பெற்று அன்னதானம் கொடுப்பது காலாதி காலமாக தொடர்ந்து வந்தது.

அன்றைய காலத்தில் நெடுத்தீவு சிறந்த விவசாய பூமியாக விளங்கியது. நெற்பயிர்கள் செழித்துக் கிடந்தன. அதனை மக்கள் அன்னதான நிகழ்வுக்கு உதவியிருந்தனர். எனினும் ஒரு சமயம் அரிசி கிடைக்காது போனதால் அன்னதானம் தடைப்பட்டதாம், அதனால் ஆலய தர்மகர்த்தாக்கள் மனம் வருந்தி செய்வதறியாது நின்றனர்.

அப்போது நெடுந்தீவின் தெற்கு கடல் பகுதியில் கப்பல் ஒன்று உடைந்து கரைசேர்ந்ததாகவும் அந்தக்கப்பலில் இருந்த அரிசியைக் கொண்டு வழமைபோல் அன்னதானத்தை தர்மகர்த்தாக்கள் நிறைவேற்றி வைத்ததாகவும் இது முருகப்பெருமானின் திருவருளே என்று மக்கள் மனம் குளிர்ந்து அவனது அருளை வியந்து நிறைந்ததாகவும் கதைகள் உண்டு.

சாராப்பிட்டி தொட்டிச்சாகுளம் சுற்றுவட்டத்தில் வாழ்ந்தவர்கள் வீரசேகர முதலி பரம்பரையினர் என அழைக்கப்படுவதுண்டு. இவர்களின் குல தெய்வமாக கரமத்தைக் கந்தன் விளங்கினார். இங்கு கோயில் ஆரம்பிக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்த நாளில் வருடாவருடம் பூசைகள் இடம்பெற்று அன்னதானம் கொடுப்பது காலாதி காலமாக தொடர்ந்து வந்தது.

அந்தப் பகுதியில் உடையாராக இருந்த மருதப்ப உடையாரால் இது நடத்தப்பட்டு வந்ததாகவும், மருதப்பர் காலத்தில் ஏற்பட்ட பஞ்சம் காரணமாக அன்னதானம் வழங்க முடியாது மனம் சோர்ந்து முருகப் பெருமானை வேண்டிக்கொண்டதாகவும், றங்கூனிலிருந்து அரிசியுடன் வந்த கப்பல் ஒன்று, அடித்தளம் உடைந்து நெடுந்தீவுக் கரையைச் சேர்ந்தது. அப்போது அங்கு செ ன்ற உடையாரும், பரி வாரங்களும் அரிசியை இறக்கி அன்னதானம் வழங்கினர்.

இந்தக் கோயிலின் முக்கியஸ்தர்களில் ஒருவராக பின் நாளில் இருந்த சின்னையா (தற்போது ஆலய பரிபாலன சபைத்தலைவராக உள்ள ஒய்வு நிலக்காணி உத்தியோகத்தர் தில்லையம்பலத்தின் தந்தையார்) வசம் இருந்த ஏடொன்றில் மேற்கூறப்பட்ட விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. இந்த ஏட்டில் குறிப்பிட்ட

*''காராளி தன்னிலே மகுடமாய்*
*......... அரிசிக்கு கப்பலை*
*உடைத்த கந்தா''*

என்று ஒரு பாடல் இந்தச்சம்பவம் தொடர்பாக எழுதப்பட்ட பாடலாகும். தொழில் திணைக்களத்தின் முன்னாள் உதவி ஆணையாளராக இருந்த வ. சுவாமிநாதனும் இந்தச் சம்பவம் பற்றித் தெரிவித்திருந்தார்.

காலத்துக்கு காலம் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு உற்சவங்களும் சிறப்பாக இடம்பெறுவதுடன், சூரன்போர் நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன. ஆண்டு தோறும் மாசி மாதத்தில் பத்துத்தினங்கள் உற்சவம் இடம்பெறுகின்றது. பொதுமக்கள் இதில் கலந்து கொண்டு திருவிழாக்களை பொறுப்பேற்றுச் செய்கின்றனர். புதிய நிர்வாகம் எஸ். தில்லையம்பலம் தலைமையில் பல. நோ. கூ. சங்கத்தில் பணியாற்றிய தருமலிங்கம், காங்கேசு, தருமரத்தினம் உட்பட ஆலய நிர்வாகிகள் பொதுமக்களின் உதவியுடன் ஆலயத்தை புனரமைத்து இந்த ஆண்டின் முற்பகுதியில் கும்பாபிஷேகம் செய்து இந்த வருடத்துக்கான உற்சவத்தையும் சிறப்பாகச் செய்து முடித்தனர். இடையில் சிறிதுகாலம் இடம்பெறாதிருந்த அன்னதான நிகழ்வும் மீண்டும் புதிய நிர்வாகத்தினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தினமும் பூசைகள் இடம்பெறுகின்றன. வெள்ளிக்கிழமைகளில் மாணவர்களும் அயலிலுள்ள மக்களும் கூடி விசேட வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உற்சவ காலங்களில் தீவின் அனைத்துப்பகுதிகளில் இருந்தும் மக்கள் திரண்டு முருகப்பெருமானை மதவேறுபாடின்றி வழிபடுவதன் மூலம் ஆத்ம திருப்தியடைவதாகக் கூறுகிறார்கள். நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கு மட்டுமன்றி, தீவின் அனைத்து மக்களின் சிறப்பான வாழ்வுக்காக கரமத்தை கந்தசுவாமியின் அருள் நிறையவே கிடைக்கிறது என்கிறார்கள் மக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் வாதிகள் நிர்வாகத்தில் தலையீடு

## அரசே இதற்குக் களம் அமைத்துக் கொடுப்பது எந்தவகையில் நியாயம் எனக் கேட்கிறார் அப்துல் கபூர்

கல்முனை,நவ.8

அரசியல்வாதிகள் நிர்வாக விடயங்களில் தலையிடுகின்றனர். நிர்வாக நடவடிக்கைகளை நெறிப்படுத்துகின்ற தாபன விதிக் கோவைகளை மீறி செயற்படுவதற்கு அரசு களம் அமைத்துக் கொடுக்கின்றமை எந்தவகையில் நியாயமானது? என்று கல்முனை பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.அப்துல் கபூர் கேள்வியெழுப்பியுள்ளார்.

பட்டதாரி பயிலுநர்களாகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களை நீக்கிவிட்டு, அரசியல்வாதிகளின் ஆதரவாளர்களைச் சேர்த்துக் கொண்டமை தொடர்பாக அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல்வாதிகள் நிர்வாக விடயங்களில் தலையிடுவதால் நாட்டில் லஞ்சம், ஊழல், நிர்வாகச் சீர்கேடுகள் நடந்தவண்ணமுள்ளன.

அரசு நாடு முழுவதிலும் இருந்து 42 ஆயிரம் பட்டதாரிகளைப் பயிலுநர்களாகச் சேர்த்துக்கொண்டுள்ளது. இதில் 2005ஆம் ஆண்டுமுதல் 2011 ஆம் ஆண்டு காலப் பகுதியில் உள்வாரி, வெளிவாரியாகப் பட்டம் பெற்றவர்களைப் பயிலுநர்களாகப் பிரதேச செயலகவாரியாகச் சேர்த்துக்கொண்டது. இவர்கள் பிரதேச செயலகங்களுள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இவர்களுள் குறிப்பிட்ட தொகையினரைப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இணைத்துக்கொள்வதற்காக கடந்த மாதம் அம்பாறை மாவட்ட செயலகத்தில் நேர்முகப் பரீட்சை இடம்பெற்றது.

குறிப்பிட்ட பாடங்களில் சித்தியடைந்து பட்டம் பெற்றவர்களைத் தகுதி, திறமை அடிப்படையில் தெரிவுசெய்து நேர்முகப் பரீட்சை இடம்பெற்றது. இதற்கமைய கல்முனை முஸ்லிம் பிரிவு பிரதேச செயலகப் பிரிவில் 37 பேர் நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்டு இவர்களின் பெயர்ப்பட்டியலும் வெளியாகியிருந்தது.

நற்பிட்டிமுனை கிராமத்திலுள்ள கிராம சேவகர் பிரிவுக்கு 5 பேர் தெரிவாகியிருந்தனர். தற்போது கல்முனைப் பிரதேச செயலக அபிவிருத்திக்குழுத் தலைவரினால் நற்பிட்டிமுனையில் உள்ள 5 கிராமசேவகர் பிரிவுக்கு நியமிக்கப்பட்ட 5 பேரும் நீக்கப்பட்டு புதிதாக 5 பட்டதாரி பயிலுநர்கள் சேர்க்கப்பட்டதுடன், இவர்களுள் 2 பேர் வேறு கிராமத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். நற்பிட்டிமுனைக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் பழிவாங்கப்பட்டமை வேதனை அளிக்கும் விடயமாகும்.

1977ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதியில் நிலவிய லஞ்சம், ஊழல், அரசியல் பழிவாங்கல் யாவற்றையும் ஒழித்து தூய்மையான அரசியல் கலாசாரத்தைத் தோற்றுவித்த முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.மன்சூரின் தலைமைத்துவம் போன்ற சிறந்த அரசியல் ஆளுமையைத் தேர்ந்தெடுக்க கல்முனைத் தொகுதி மக்கள் முன்வரவேண்டும்.-என்றார்.(ச)

# கசிப்பு உற்பத்தி; மாட்டினர் ஐவர்



மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகளின்போது சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்ட 5பேர் மாவட்ட மதுவரி திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

200 லீற்றர் கசிப்பு மற்றும் கோடா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன என்று மாவட்ட மதுவரி அத்தியட்சகர் நடராஜா சுசாதரன் தெரிவித்தார்.

ஏறாவூர்பற்று, கிரான் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்தத்தேடுதல் நடத்தப்பட்டுள்ளது. மாவடிச்சேனை மற்றும் வட்டவான் ஆகிய கிராமங்களிலேயே இந்தக் கசிப்பு உற்பத்தி நிலையங்கள் செயற்பட்டு வந்தன என்று அவர் கூறினார்.

கைது செய்யப்பட்ட நபர்கள் மீது ஏறாவூர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.(ச-31)



திவிநெகும சட்டவரைவுக்கு ஆதரவு தெரிவித்து மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (31)

## மட்டக்களப்பில் மோட்டார் குண்டு மீட்பு

எருவில்,நவ.8

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காங்கேயனோடைப் பகுதியில் மோட்டார் குண்டு ஒன்றை காத்தான்குடி பொலிஸார் மீட்டுள்ளனர்.

காத்தான்குடி பொலிஸ் புலனாய்வுத் துறையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், காங்கேயனோடை, மடுவத்தடியில் புதைந்த நிலையில் இருந்த குறித்த மோட்டார் குண்டை அப்பகுதிக்குச் சென்ற காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அஜித் பிரசன்ன தலைமையிலான குழுவினர் மீட்டுள்ளனர்.

குறித்த குண்டு விடுதலைப் புலிகளால் கடந்த காலத்தில் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# கணவனை இழந்தோருக்கு கனடா கிளையால் உதவி

எருவில்,நவ.8

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த கால போரால் கணவனை இழந்த குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக, தமிழ் தேசிய கூட்டமைப்பின் கனடா கிளை மற்றும் கனடா மறுவாழ்வு கழகம் என்பவற்றினால் உதவிகள் வழங்கப்பட்டன.

இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு, நாவற்குடா இந்து கலாசார மண்டபத்தில் உதவிகள் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதேச செயலக ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட கணவனை இழந்த குடும்பங்களை தலைமைதாங்கும் பெண்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக பசு மாடுகள் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு உபகரணங்களுக்கான கடன்கள் வழங்கப்பட்டன.

இந்த நாட்டில் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலையிலும், அதன் வடுக்களாக உள்ள கணவனை இழந்த குடும்பங்களை தலைமைதாங்கும் பெண்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு எவ்வித திட்டங்களும் அரசிடம் இல்லாத நிலையில் புலம்பெயர் உறவுகள் அதற்கான உதவிகளை மேற்கொண்டுவருவது சிறப்பானது என்று தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவர் சீ.யோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா, மாகாணசபை உறுப்பினர்களான இரா.துரைராஜசிங்கம், பிரசன்ன இந்திரகுமார், கிருஸ்ணபிள்ளை, நடராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-31)

# வழிபாட்டுத் தலம் மீது தாக்குதல் சூத்திரதாரிகளை கைது செய்யவும்

### உதுமாவெல்லை வேண்டுகோள்

மட்டக்களப்பு,நவ.8

வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல்கள் சம்பவங்களுடன் தொடர்புடைய சூத்திரதாரிகள் யாராக இருந்தாலும், கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

தேசிய காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் அநுராதபுரம் மல்வத்தை வீதியிலுள்ள தைக்கியா பள்ளிவாசல் மற்றும் திருகோணமலை பாலையூற்று லூர்த் அன்னை ஆலயத்தின் மாதா சொரூபம் ஆகியவற்றின் மீது இனந்தெரியாதோரினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை பல்லின மக்கள் வாழும் ஒரு சுதந்திரத் தேசம். இத்தேசத்தில் வாழுகின்ற ஒவ்வொரு இனத்தினரும் தாம் விரும்புகின்ற மதத்தினையும் அதன் சமய விழுமியங்களையும் பின்பற்றி நடப்பதற்கு உரிமையுடையவர்கள். இலங்கை அரசியல் சாசனத்தில் மத சுதந்திரம் பற்றி தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், அண்மைக் காலமாக சிறுபான்மை சமூகத்தின் வழிபாட்டுத்தலங்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் இத்தகைய ஈனச் செயல்களை அனுமதிக்க முடியாது.

நடந்து முடிந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் பிரசார நடவடிக்கையின் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெற்கில் இடம்பெறும் பள்ளிவாசல்களின் உடைப்புச் சம்பவங்களை கருப்பொருளாக வைத்தே தமது பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

இத்தகைய அரசியல் கட்சிகளின் பிரசார நடவடிக்கைகளுக்குக் கருப்பொருளாக பயன்படுத்தப்படும் வழிபாட்டுத் தளங்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாது [illegible] கொண்டுள்ளது.-என்றார்.(ச)

# பாதணி விற்பனை செய்த சிறுவனை அன்பாகக் கண்டித்தார் அரச அதிபர்

### மட்டு. கண்காட்சியில் சம்பவம்

மட்டக்களப்பு,நவ.8

பாடசாலை வேளையில் இங்கு என்னவேலை. நீர் இங்கு நிற்கக் கூடாது. பாடசாலைக்கு போகவேண்டும் என்று மாணவன் ஒருவரை அன்புடன் கண்டித்தார் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் பி.எம்.சாள்ஸ்.



மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் உள்ள இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் சமுர்த்தி அலுவலகத்தால் கல்லடி, நாவற்குடா விவேகானந்தா விளையாட்டு மைதானத்தில் திவிநெகும சமுர்த்தி எழுச்சி உற்பத்திக் கண்காட்சி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தக் கண்காட்சிக் கூடத்தை திறந்துவைத்த மாவட்ட அரச அதிபர் கண்காட்சியை அதிகாரிகள் சகிதம் பார்வையிட்டார்.

இந்நிலையில் ஒரு கண்காட்சிக் கூடத்தில் சுமார் 12 வயது நிரம்பிய சிறுவன் பாதணி விற்பனையில் ஈடுபட்டுள்ளதைக்கண்டு அவனிடம் சென்று மாவட்ட அரச அதிபர் பாடசாலை செல்வதில்லையா என்று கேட்டார்.

தான் பாடசாலை செல்வதாகவும், இந்தக் கண்காட்சிக்காக தனது தந்தையுடன் வந்ததாகவும் குறித்த சிறுவன் தெரிவித்தான். எனினும் பாடசாலை வேளைகளில் இதில் எல்லாம் ஈடுபடக்கூடாது. வரக்கூடாது பாடசாலை செல்லவேண்டும் என அரச அதிபர் அன்பாகக் கண்டித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்கள் மனம் வருந்தும் வகையில் சிலர் செயற்படுவர். குடும்ப உறுப்பினர்கள் ஆதரவாக நடந்து கொள்வர். தொழில், வியாபாரம் வளர்ச்சிபெற அதிகளவில் பணிபுரிவது அவசியமாகும். எதிர்பார்த்த பணவரவு கிடைப்பதில் தாமதம் இருக்கும்.

**இடபம்:** உங்கள் மனம் தெளிந்த நீரோடை போல இருக்கும். உறவினர், நண்பர் உங்களிடம் சில பொறுப்புத் தரலாம். தொழில், வியாபார வளர்ச்சிப்பணி சிறந்து இனிய அனுபவம் தரும். உபரி பணவருமானம் கிடைக்கும்.

**மிதுனம்:** உங்கள் எண்ணத்திலும் செயலிலும் சிறுஅளவில் மாறுபட்ட தன்மை பிரதிபலிக்கும். அனுபவசாலியின் ஆலோசனையைப் பெற்றுச் செயற்படுவதால் பணிகள் சிறப்பாகும். தொழில், வியாபாரம் சீராக வளர கிடைக்கிற வாய்ப்புக்களைத் தவறாமல் பயன்படுத்த வேண்டும்.

**கடகம்:** உங்கள் செயல்களில் நியாய, தர்மத்தை அதிகம் பின்பற்றுவீர்கள். தாமதமான பணிகளில் வளர்ச்சி நிலை உருவாகும். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் மூலதனம் செய்வீர்கள். உற்பத்தி, விற்பனை சிறந்து ஆதாய பணவரவு கிடைக்கும்.

**சிங்கம்:** உங்களின் சுற்றுச்சூழ்நிலை அறிந்து பேசுவது நல்லது. செயல்கள் சிறப்புப்பெற கூடுதல் சுறுசுறுப்பு தேவைப்படும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனத்துடன், கடின உழைப்பு தந்து முன்னேற்றம் பெறத் தயாராவீர்கள்.

**கன்னி:** உங்கள் செயல்களில் நேர்த்தியும், திறமையும் பரிமளிக்கும். மனச்சாட்சிக்கு கூடுதல் முக்கியத்துவம் தந்து பணிபுரிவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சிறந்து வாழ்க்கைத்தரம் உயரும்.

## நாளை

ஐப்பசி -24 வெள்ளிக்கிழமை 09.11.2012
திதி: தசமி பி.ப. 01.14 வரை
நட்சத்திரம்: பூரம் மு.இ. 07.42 வரை
சுபநேரம்: 06.05 - 07.35 வரை
ராகுகாலம்: 10.35 - 12.05 வரை

**துலாம்:** உங்கள் மனதில் கூடுதல் நம்பிக்கையும் தைரியமும் வளரும். நிறைவேற்ற வேண்டிய பணிகளை உத்வேகத்துடன் செய்து தகுந்த புகழ்பெறுவீர்கள். சான்றோர்களின் ஆசி கிடைக்கும். அதிகாரிகள், பணியாளர்களை அன்புடன் வழிநடத்தி பணி இலக்கைத் திறம்பட நிறைவேற்றுவர். புகழ் கிடைக்கும்.

**விருச்சிகம்:** உங்களின் நற்செயலை சிலர் குறை கூறிப் பேசுவர். அவர்களிடம் நேரத்தைச் செலவிடாமல் சொந்தப்பணிகளில் கவனம் கொள்வதால் அதிக நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை உருவாகும். கண்களின் பாதுகாப்பில் கூடுதல் கவனம் வேண்டும்.

**தனுசு:** நீங்கள் முன்னர் செய்த உதவிக்க நற்பலன் தேடி வரும். உறவினர், நண்பர் பெருமைப்படுத்துவர். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். பணப் பரிவர்த்தனையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**மகரம்:** உங்களின் இனிய பேச்சால் நீண்டநாள் திட்டமிட்ட முக்கியமான காரியம் ஒன்று நிறைவேறும். சமூகத்தில் பெறுகிற மதிப்பு, மரியாதை உயரும். தொழில், வியாபாரத்தில் அதிகப்பணி புரிந்து உற்பத்தி, விற்பனையில் புதிய சாதனை படைப்பீர்கள்.

**கும்பம்:** இனிய எண்ணங்களால் மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். எந்தச் செயலிலும் நிதானத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். எதிர்பார்த்த பணவரவு திருப்திகரமாகக் கிடைக்கும்.

**மீனம்:** குணம் கெட்ட மனிதர் என்று விலகிய ஒருவரிடம் தவிர்க்க இயலாமல் பேசுகிற சூழ்நிலை உருவாகும். கண்ணியத்துடன் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சிபெற இடையூறாக உள்ளவற்றைச் சரிசெய்வீர்கள். பணியாளர், நிர்வாகத்தின் வழி காட்டுதலை கூடுதல் கவனத்துடன் பின்பற்றுவது நல்லது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | | 2 | 8 | | | |
| | 3 | 8 | 1 | | | 9 | | |
| | 2 | | | 9 | | | 7 | 5 |
| 8 | | 6 | | 7 | 4 | | 5 | |
| | | | 9 | 6 | 3 | | | |
| | 9 | | 5 | 8 | | 7 | | 6 |
| 4 | 8 | | | 3 | | | 9 | |
| | | 3 | | | 9 | 6 | 1 | |
| | | | 8 | 1 | | | | 3 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 7 | 6 | 4 | 9 | 5 | 2 | 1 |
| 4 | 5 | 2 | 7 | 8 | 1 | 6 | 3 | 9 |
| 1 | 9 | 6 | 2 | 3 | 5 | 4 | 8 | 7 |
| 9 | 1 | 3 | 4 | 7 | 6 | 2 | 5 | 8 |
| 6 | 4 | 5 | 9 | 2 | 8 | 7 | 1 | 3 |
| 7 | 2 | 8 | 1 | 5 | 3 | 9 | 4 | 6 |
| 2 | 8 | 1 | 5 | 6 | 7 | 3 | 9 | 4 |
| 5 | 7 | 9 | 3 | 1 | 4 | 8 | 6 | 2 |
| 3 | 6 | 4 | 8 | 9 | 2 | 1 | 7 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1−9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1−9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1−9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலகளவில் பிரபல்யமானது.

## அளவெட்டி- மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

**லொறி விற்பனைக்கான கூறுவிலை கோரல்**

எமது சங்கத்தில் 26-7807 இலக்க இசுசு லொறி விற்பனைக்கு உள்ளது. இதனை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் தங்களது கேள்வித் தொகையை குறிப்பிட்டு பொது முகாமையாளர், அளவெட்டி-மல்லாகம் ப.நோ.கூ.சங்கம், அளவெட்டி என்னும் முகவரிக்கு தபால் மூலமோ அன்றி நேரடியாகவோ 20.11.2012 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேற்படி லொறியை சங்கக் காரியாலய நேரத்தில் தலைமைக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்,
அளவெட்டி-மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்.

(சி/4587)(5-6)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.8

கரணவாய் தாமோதர வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மேற்படி வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

அதிபர் சி.சிவகுலலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் ச. சிவபதியும் சிறப்பு விருந்தினராக கரவெட்டி கோட்டக் கல்வி அலுவலர் சி.நற்குணலிங்கமும் கலந்து கொள்வர். திருமதி தர்மிலா சிவஸ்ரீ பரிசில்களை வழங்குவார். (வ-7)

SAAMSON ENGLISH 3 மாத சனி, ஞாயிறு பயிற்சிப்பட்டறை

உலகிலேயே மிகச் சிறந்த கற்பித்தல் முறை மூலம் ஆங்கிலத்தில் ஓர் எழுத்தும் தெரியாதவரையும் 3 மாதத்தில் சரளமாகப் பேசப் பயிற்றுவிக்கும் SAAMSON நிறுவனத்தின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

பயிற்சியில் இணைய விரும்பும் இளைஞர், யுவதிகள், மாணவர்கள், தொழில்புரிவோர் மற்றும் 16 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் பதிவுகளை மேற்கொள்ளவும்.

சனி, ஞாயிறு பிரிவுகள்

| | | | |
|---|---|---|---|
| பிரிவு I | 08 - 10 | பிரிவு III | 01 03 |
| பிரிவு II | 10 - 12 | பிரிவு IV | 03 - 05 |

ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்

முதல் வகுப்பு இலவசம் ( சனி - காலை - 09.00)

SAAMSON ENGLISH 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்.
T.P : 077 621 4567

(சி/4584)(45.6)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
31.03.1937

இறப்பு
07.10.2012



அமரர்
**திருநாவுக்கரசு நாகரத்தினம்**
(சாந்தி அச்சக உரிமையாளர்)


வையத்துள் வாழ்வாங்கு
வாழ்ந்து மறைந்தாலும்
உள்ளத்துள் என்றென்றும்
உணர்வுகளில் உயிர்த்திருக்கும்
வெள்ளை மன மாமனிதரை
வள்ளல் குணமுள்ள மகன்
அள்ளி அள்ளி அன்பையெல்லாம்
அனைவர்க்கும் தந்த மகன்
பொய்யுடம்பை நீத்து
புகழுடம்பை வென்றவராய்
மெய்யுலகில் பெற்றார் சாந்தி

"சாந்தி"
575,கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். 021 221 9384

உங்கள் நினைவில்
குடும்பத்தினர்.

(2593) (6-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய திறன் மற்றும் புத்தாக்கல் கண்காட்சி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அமைச்சர் டலஸ் அழகப்பெரும, பிரதி அமைச்சர் துமிந்த திசாநாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹான் லால் கிரேரூ உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# வாக்காளர் பட்டியல் குறித்து 65,000 மேன்முறையீடுகள்

## தேர்தல்கள் செயலகம் தகவல்

கொழும்பு,நவ.8

2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் தொடர்பில் 65 ஆயிரத்துக்கும் அதிகமான மேன்முறையீடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு கிடைத்த மேன்முறையீடுகளைப் பரிசீலனை செய்யும் நடவடிக்கைகள் அடுத்தவாரம் ஆரம்பிக்கப்படும் என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க கூறினார்.

மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்கள் ஊடாக இந்த மேன்முறையீடுகள் பரிசீலனை செய்யப்படவுள்ளன என்று அவர் கூறினார்.

மேன்முறையீடுகளை பரிசீலனை செய்ததன் பின்னர் வாக்காளர் பெயர்ப்பட்டியலின் இறுதி அறிக்கை வெளியிடப்படவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியலை அடுத்த மாதம் 31ஆம் திகதிக்குள் உறுதிப்படுத்துவதற்கு தேர்தல்கள் செயலகம் திட்டமிட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப்பட்டியல் தொடர்பான முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு கடந்த 31ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ச)

# இலங்கைக்கு எதிரான மற்றொரு பிரேரணை ஜெனிவாவில் தயார்

## ஆபத்தைச் சுட்டிக்காட்டுகிறது ஐ.தே.க.

கொழும்பு,நவ.8

இலங்கைக்கு எதிரான மற்றுமொரு பிரேரணை ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் இப்போதே வந்துவிட்டது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சர்வதேச நாடுகளால் தேடப்படுபவர்களை அந்தந்த நாடுகளிடம் ஒப்படைப்பது தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர்மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த இரண்டு வருடங்களாக ஜெனிவாவில் இலங்கை தொடர்பாக 90 நாடுகள் பேசின. அவற்றுள் 81 நாடுகள் இலங்கைக்கு எதிராகவே பேசின.

இந்த வருடம் மார்ச் மாதம் இலங்கைக்கு எதிராக ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டது. ஆனால், பிரேரணை எதுவும் வராது என அரசு கூறித்திரிந்தது.

அதேபோன்று தான் அடுத்த வருடமும் பிரேரணை கொண்டுவரப்படும். அப்பிரேரணை இப்போதே தயாராகிவிட்டது. காணாமல் போதல், மனித உரிமை மீறல், ஊடக சுதந்திரம் மீதான தாக்குதல் மற்றும் பிரதம நீதியரசருக்கு ஏற்பட்டுள்ள நிலைமை



போன்றவை தொடர்பாகத்தான் கடந்த இரண்டு வாரங்களாக ஜெனிவாவில் பேசப்பட்டுள்ளன.

இலங்கைக்கு எதிராக இந்தியா அங்கு 200 அறிக்கைகளைச் சமர்ப்பித்தது. மஹிந்த சமரசிங்கவின் அறிக்கை நிராகரிக்கப்பட்டு விட்டது. மிகவும் இக்கட்டானதொரு நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது. இந்தியாவுடன் நட்பை வளர்ப்பதா அல்லது இல்லையா என்று இலங்கை அரசுதான் முடிவெடுக்க வேண்டும்- என்றார்.(ச-சி)

# மருந்து ஒவ்வாமை; மாணவர்கள் 27 பேர் வைத்தியசாலையில்

கொழும்பு,நவ.8

மருந்து ஒவ்வாமை காரணமாக குருநாகல், மாஸ்பொத்த மகா வித்தியாலய மாணவர்கள் 27 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குருநாகல் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் வழங்கப்பட்ட விற்றமின் ஏ மருந்து ஒவ்வாமை காரணமாகவே மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பாடசாலையில் 3ஆம், 4ஆம் தரத்தில் பயிலும் மாணவர்களுக்கு இந்த விற்றமின் 'ஏ' மருந்து வழங்கப்பட்டது.

விற்றமின் அருந்தியவுடன் மாணவர்களுக்கு வாந்தி, வயிற்றுவலி, மயக்கம், களைப்பு என்பன ஏற்பட்டதால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதனால் விற்றமின் வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவர்களில் இருவர் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(ச)

# இனந்தெரியாத நபர்களால் பெண் கொலை

கொழும்பு,நவ.8

அனுராதபுரம், மகாவிலச்சிய பகுதியில் பெண்ணொருவர் இனந்தெரியாத நபர்களால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பெண் கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து நேற்று புதன்கிழமை காலை 6.30 மணிக்கு 119 என்ற பொலிஸ் அவசர அழைப்பு இலக்கத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

34 வயதுடைய குறித்த பெண் தனது 12 வயது மகளுடன் வீட்டில் வசித்து வந்த நிலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் கூறினர்.

கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. இந்தச் சம்பவம் குறித்து மகாவிலச்சிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ச)

# மக்களின் பேராதரவுடன் திருப்புமுனைத் தீர்மானம்

## ஹிருனிக்கா அறிவிப்பு

கொழும்பு,நவ.8

கொலன்னாவை மக்களின் ஆதரவுடன் விரைவில் திருப்புமுனைத் தீர்மானம் ஒன்று எடுக்கப்படும். இதுவரையில் யாரும் எதிர்பார்க்காத முடிவாக அது அமையும் என்று ஹிருனிக்கா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

அவரது தந்தையாரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர கொல்லப்பட்டமை தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இதனையடுத்து நீதிமன்றத்துக்கு வெளியில் வைத்து செய்தியாளர்களை சந்தித்த ஹிருனிக்கா இவ்வாறு கூறினார்.



எனது தந்தை உயிரிழந்தமையை காட்டிக்கொடுக்கப் போவதில்லை என்று குறிப்பிட்டார். (ச)

# மலேசியக் கப்பல் தடுத்து வைப்பு

கொழும்பு,நவ.8

மலேசியாவுக்கு சொந்தமான சரக்குக் கப்பலொன்று இலங்கைக் கடற்பரப்பில் கைப்பற்றப்பட்டுள்ளது.

கப்பல் உரிமையாளர்கள் உரிய கொடுப்பனவை செலுத்தத் தவறிய குற்றச்சாட்டின் பேரில் இந்தக் கப்பல் கைப்பற்றப்பட்டது என்று வர்த்தகக் கப்பல் பணிப்பாளர் அஜித் செனவிரத்ன தெரிவித்தார்.

இந்தக் கப்பல் பாணந்துறையை அண்மித்த கடற்பரப்பில் நங்கூரமிடப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

கப்பலின் பணியாளர்களுக்கு இதுவரை சம்பளம் வழங்கப்படாமை தொடர்பாக வணிக மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# கடல்வழி சென்ற 30 பேரை திருப்பி அனுப்பியது ஆஸி.

கொழும்பு,நவ.8

அகதி அந்தஸ்து கோரி ஆஸ்திரேலியா சென்ற 30 இலங்கை இளைஞர்கள் நேற்று புதன்கிழமை இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

விசேட விமானம் மூலம் இவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர் என்று ஆஸ்திரேலிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் படகு மூலம் ஆஸ்திரேலியாவைச் சென்றடைந்தவர்களே இவ்வாறு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்களின் நிலை குறித்து விளக்கப்பட்டு ஆஸ்திரேலியாவின் சர்வதேசகட்டப்பாடுகளுக்கு அமைய அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர் என்று ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர்



கிறிஸ் பொவன் தெரிவித்தார்.

செல்லுபடியற்ற விசா, ஆஸ்திரேலியாவில் தங்கியிருக்க தகுதியின்மை உள்ளிட்ட காரணங்களால் அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்று அவர் கூறினார்.

கடந்த ஓகஸ்ட் 13 ஆம் திகதிக்குப் பின்னர் ஆஸ்திரேலியாவில் இருந்து 156 பேர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன் விளம்பரத் தொடர்புக்கு-

advt@uthayan.com
0215671111

சுன்னாகம் - மயிலணி, திருக்குடவாயில்
ஸ்ரீ விஸ்வநாதசுவாமி கோயில்

### யம சங்கார உற்சவம்

நாளை (09.11.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். அடியார்கள் அனைவரும் கால காலனை தரிசித்து தீர்க்காயுள் ஆரோக்கியம் பெறுவீர்களாக.

(25114) (45-6)

## 31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

தோற்றம் 14.01.1975



மறைவு 09.10.2012

### அமரர் கோசலவதனி கனகரத்தினம்

கடந்த (09.10.2012) அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தின் மூத்த புதல்வியின் மறைவுச் செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறி எமது துயரில் பங்கேற்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (08.11.2012) நண்பகல் 12 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பொன்.கனகரத்தினம் J.P. குடும்பத்தினர்.
சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை.

## சேவை சிறக்க வாழ்த்துகின்றோம்



நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த

### திரு.சின்னராசா கேபவன்

யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக மாவட்ட நீதிபதி (சாவகச்சேரி) செ.லெனின்குமார் முன்னிலையில் சத்தியபிரமாணம் செய்து கொண்டமையை வாழ்த்துவதுடன் அவரது சேவை சிறக்க வேண்டுகின்றோம்.

இவர் இந்துக்கல்லூரியின் (சாவகச்சேரி) பழைய மாணவரும், பாரதி விளையாட்டுக் கழகத்தின் (நுணாவில்) ஆலோசகரும் சமூக சேவையாளரும் கணக்கியலாசிரியரும் ஆவார். (சி/4477) (5-6)

- வாழ்த்துவோர்: உறவினர், நண்பர்கள்.

## வாடகைக்கு கட்டடம் தேவை

ISO தரச் சான்றிதழ் பெற்ற இலங்கையின் பிரபல உணவு உற்பத்தி நிறுவனத்திற்கு தங்கள் உற்பத்திப் பொருட்களை விநியோகம் செய்ய குத்தகைக்கு ஒரு இடம் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் (முறிகண்டி, கொடிகாமம், சாவகச்சேரி, கிளிநொச்சி) தேவைப்படுகின்றது.

**அடிப்படை தேவைகள்:**

4000 சதுர அடிக்கு குறையாத களஞ்சியசாலை, 3பேஸ் மின்சாரம், தொலைபேசி, கழிவறை வசதி, வாகன தரிப்பிட வசதி (குறைந்தபட்சம் 04 கனரக வாகனங்களுக்கு)

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
ஜெகன் - 077 1001876, மின்ஹாஜ் - 077 3667402

## ஆரோக்கியமான உலகத்தை நோக்கிய ஒரு வெற்றிப்பயணத்தில்

உலகத் தரம் வாய்ந்த ஆரோக்கியமான இயற்கை உணவுக் குறை நிரப்பிகளை (Natural health. Supplements) FKC International தமது தெற்காசிய பிராந்திய காரியாலயமான (FKC & ASIA (Pvt)Ltd. மூலம் இப்பொழுது வட பகுதி வாழ் மக்களுக்காக தருவித்து இருக்கிறது. இந்த நிறுவனம் பல் தேசிய கம்பனி என்ற ரீதியில் உலகெங்கும் 40 இற்கும் மேற் பட்ட நாடுகளில் தமது மருத்துவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதோடு தூர நோக்கு சிந்தனையான (Vison Plan) உலகத்தில் உள்ள சகல மக்களுக்கும் ஆரோக்கியத்தை கொண்டு வருதல் என்ற குறிக்கோளை அடைவதற்கு மிகவும் இலகுவில் சேவையினை நடைமுறைப்படுத்தியுள்ளது.

**FKC இன் தீர்வுப்பொதிகள்**


புற்றுநோய், நீரிழிவு, கொலஸ்ரோல், வாதம், குடற்புண், தோல் சுருக்கம், கண் கீழ் கருவளையம், இளநரை, முடியுதிர்தல், பார் வைக்குறைபாடு, உடற்பருமன், வீக்கம், மலச்சிக்கல், பெண் களுக்கான நோய்கள், முட்டு ஆகிய இன்னும் பல நோய்களிலும் இருந்து படிப்படியாக இயற்கையான முறையில் எமது உடல் ஆரோக்கியத்தை விருத்தி செய்து அதன் மூலம் நோய்களில் இருந்து விடுபட உறுதுணை அளிக்கிறது என்றால் மிகையாகாது.

Fkc உற்பத்திகளை நாம் கொள்வனவு செய்யும் போது வீட்டுக்கு வீடு சேவையினை வழங்குவது இந் நிறுவனத்தின் மற்றுமொரு சிறப்பு அம்சம்.

அழையுங்கள் சேவையினை நாட
077 3413 203, 077 3569 796
'நோயற்ற வாழ்வே குறைவற்றசெல்வம்' (25116)(45.6.7)

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு நடராசா (ராசா)



இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு நடராசா 06.11.2012 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், கிருஷ்ணவேணியின் பாசமிகு கணவரும், மதிவண்ணன் (ஜேர்மனி), காலஞ்சென்ற பார்த்தீபன் மற்றும் ராகவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவசோதி(இத்தாலி), கமலாதேவி, பரஞ்சோதி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.11.2012) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்வை இந்து மாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும்ஏற்றுக்கொள்ளவும்.

இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
021 373 5022

(சி/4597)(5-6)

தகவல்: குடும்பத்தினர்.

## சேவை

விமான டிக்கட்டுகள் மிகக்குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ள...............
றெட்டினா டுவர்ஸ் & ட்ரவல்ஸ்
இல. 687, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
மேலதிக விவரங்களுக்கு அழையுங்கள்
(சி/4418)(3.6.7) தொ.பே 0212219686

## கண்ணீர் அஞ்சலி

*07.11.2012 உதயன் பக்கம் 20 B இல் பிரசுரமான டேனி கருணாகரன் அவர்களின் கண்ணீர் அஞ்சலி விளம்பரத்தில் காணி மாவட்டம், திவகம், யாழ்ப்பாணம் என்பதை*
காணி மாவட்டப் பதிவகம், யாழ்ப்பாணம்
*என வாசிக்கவும்.* (25038)(6-7-45)

## விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழி விற் பனைக்குண்டு.
சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி 1Kg 460/=,
உயிர் நிறை 1Kg 250/= உணவகங்களுக்கு
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
தொடர்பு: 077 3996 958
கொடிகாமம் வீதி, கோயிற் சந்தை, கரவெட்டி.
(சி/4581)(6-7-45)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 05.08.1945

உதிர்வு 22.10.2008

திதி:- 08.11.2012

### அமரர் முத்தையா பாலசுப்பிரமணியம்

*அன்பாய் அரவணைத்து வளர்த்தெடுத்தீர்*
*நல்வாழ்வு நாம் பெறவே நீர் உழைத்தீர்*
*நான்காண்டு கழிந்தாலும் உம் நினைவு*
*என்றென்றும் எம் மனதில் நிலைத்திருக்கும்*

உங்கள் ஆத்மா சாந்திபெற அருளுமாறு
சிவபூதநாதேஸ்வரர் பாதம் பணிகின்றோம்.

*என்றும் உங்கள் நினைவுகளுடன்*
மனைவி, மக்கள், மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்.

செல்லப்பா வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
(சி/4594)(2.6)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் இராசாத்தி



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் தெல்லிப் பழையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் இராசாத்தி நேற்று (07.11.2012) புதன் கிழமை காலமானார்.

அன்னார் நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், சிவரஞ்சினி (பவுனா), காலஞ் சென்ற சீதா மற்றும் ரவீந்திரன், காலஞ் சென்ற ரசி மற்றும் வசந்தன் (சுவிஸ்), ஈசன், மோகன் ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற துரைராசா மற்றும் பொன் ராசா, ராணி ஆகியோரின் பாசமிகு சகோ தரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இறுதிக் கிரியைகளுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பேரம்பலம் வைரவகோயிலடி,
தெல்லிப்பழை. (25152) (45.6.7)

தகவல்: குடும்பத்தினர்.

## இதய அஞ்சலி



முன்னாள் வடக்குக் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராகவும், வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும் கல்விப் பணியாற்றி, இறைபதம் எய்தியுள்ள

**இளையதம்பி சிவானந்தன்** அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அன்னாரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன்புரிசங்கம்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம்.
(சி/4595)(2-6)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

### WORKS ENGINEER [CIVIL] [ON ASSIGNMENT]

### WALK IN INTERVIEW

Applications are invited from suitably qualified persons for the post of Works Engineer [Civil] (On Assignment) for six months.

Candidates, who are interested in the above, are requested to present themselves for an interview with their CV and relevant documents on 14.11.2012 at 10.00 a.m in the Board Room of the University of Jaffna.

**QUALIFICATIONS**

(A) Should possess a B.Sc Engineering Degree specializing in Civil Engineering from a recognized University / Higher Educational Institution or an Associate Member of a recognized Institute of Engineers

and

(B) A minimum of five (05) years of experience in the design, construction and Maintenance of Buildings, water supplies, drainage, road and electrical installation. Should also possess experience in handling contracts as well as managing direct labour.

**Salary Scale: Fixed Salary Rs.45, 000.00.**

**REGISTRAR,**
**University of Jaffna,**
**06.11.2012.**

(சி/4593) (2-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

## 12,650 முருங்கை கன்றுகள் யாழ். மாவட்டத்தில் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.8

யாழ். மாவட்டத்தில் 12 ஆயிரத்து 650முருங்கைக் கன்றுகள் வாழ்வாதார உதவித் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளன என்று மாகாண விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விவசாயத் திணைக்களத்தின் அனுமதி யுடன் தனியார் நாற்றுமேடையில் உற்பத்தி செய்யப்பட்ட மேற்படி கன்றுகள் பிரதேச செயலகங்கள் ஊடாக மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-7)



மட்டுவில் காமலாசனி வித்தியாலய பரிசில்நாள் மற்றும் நிறுவுநர் தின நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட வித்தியாலய பழைய மாணவியும் சட்டத்தரணியுமான திருமதி நளினி கணேசயோகன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் உப அதிபர் திருமதி அ.நடராஜா ஆகியோர் ஊர்வலமாக அழைத்துவரப்பட்ட பின்னர், வித்தியாலய அதிபர் செ. பேரின்பநாதன் மங்கல விளக்கேற்றுகிறார். (வ-9)

## பிரபஞ்சத்தில் காணும் அழகுப் பொருள்கள் எமக்கு எதனை ஞாபகப்படுத்துகின்றன

பிரபஞ்சத்தில் நாம் காணும் அழகுப் பொருள்களெல்லாம், எல்லா அழகுக்கும் ஊற்றாக இருக்கும் தெய்வீகத் தலைவனை ஞாபகப்படுத்துகின்றன.

இறைவனின் பெருமை, பேரொளி, மாட்சிமை அனைத்தையும் வானளாவி நிற்கும் மலையின் உச்சியில் காணலாம்.

இறைவனின் பெருந்தன்மை மிக்க அமைதி, மேலான நிம்மதியை தொலைவிலிருந்தும் காடுகளிலும், பரந்த பாலையிலும் காணலாம்.

இறைவனது பெருமைமிக்க காந்தியையும் அழகிய பிரகாசத்தையும் வானத்து சூரியன், சந்திரன் எண்ணற்ற நட்சத்திர மண்டலத்தில் காணலாம்.

பூமியை அழகாக்கும் நகரிலும், பட்டினத்திலும் கிராமத்திலும் வாழ்கின்ற மக்களிடையே அவனது அன்பை, சிருஷ்டியைக் காணலாம்.

நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது



சாயி சிந்தனை

## பட்டமேற்கல்வி டிப்ளோமா கற்கைநெறியின் 5 நாள் பாடசாலைகள்

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் பட்டமேற்கல்வி டிப்ளோமா கற்கைநெறியைத் தொடரும் மாணவர்களுக்கான 5 ஆம் நாள் பாடசாலைகள் எதிர்வரும் 10, 11 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளன. இது குறித்து மேலதிக விவரங்களை யாழ். பிராந்திய நிலைய அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம் என்று இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (வ)

# கால்நடை வளர்ப்போர் சங்கங்களும் ஓட்டோக்களை பயன்படுத்த முடியாத நிலை

## அவற்றுக்குரிய பதிவு இல. கிடைக்கவில்லை

தென்மராட்சி, நவ.8

கால்நடைகள் வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ஓட்டோக்களுக்குரிய பதிவு இலக்கம் இதுவரை கிடைக்காததால் அவற்றைப் பயன்படுத்த முடியவில்லை என்று யாழ். மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

உணவு விவசாய நிறுவனத்தினரால் மாவட்டத்தில் உள்ள கால்நடை வைத்தியர் அலுவலகங்களுக்கும் சாவகச்சேரி சண்டிலிப்பாய் ஆகிய கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கடந்த மாதம் ஓட்டோக்கள் வழங்கப்பட்டிருந்தன.

இவற்றுக்கு சாரதிகள் நியமிக்கப்படாததால் அறைகளில் பூட்டி வைக்கப்பட்டுள்ளதாக செய்தி வெளியாகியிருந்தது குறித்து மாவட்டத் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

வாகனங்களுக்குரிய பதிவு இலக்கம் இன்னமும் வந்து சேராததால் அவற்றினைப் பயன்படுத்த முடியாமல் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-9)

# மழலைகளின் கலைவிழா

திருநெல்வேலி, நவ.8

சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகமும் வழங்கும் மழலைகளின் மாபெரும் கலை விருந்து நிகழ்வுஎதிர்வரும் 11 ஆம் திகதி பி.ப 2மணிக்கு நல்லூர் நடராசா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் பணிப்பாளர் பா.தனபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக நடராசா பரமேஸ்வரி மணிமண்டப ஸ்தாபகர் நடராசா சத்தியரூபன் அவரது பாரியார் விஜயகுமாரி சத்தியரூபன், சிறப்பு விருந்தினராக சைவ தமிழ் பண்பாட்டுக்கழகப் பணிப்பாளர் ஆசிரியர் வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி அருளானந்தன், திருமதி அனுசூயா அருளானந்தன் ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளனர். மழலைகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (வ-253)


## கண்ணீர் அஞ்சலி



வவுனியாவைப் பிறப்பிடமாகவும்
வவுனியா கற்குழியை
வசிப்பிடமாகவும் கொண்ட
லோகராஜன் பிரியதர்சினி
(மாணவி, தரம் - 9 வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்).

*மண்ணிலே பிறந்து வாழ்ந்தே - எம்*
*மனங்களில் நிறைந்து நின்றாய்*
*பண்ணிய செயல்கள் எல்லாம் - நம்*
*மனதிலே பரவிவிட்டு*
*விண்ணிலே மறைந்தாய்*
*விழிகளை கலங்கவிட்டே!*

அன்னாரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*அன்னாரின் பிரிவால் துயருறும்:*
*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,*
*ஆசிரியர் நலன்புரி சங்கம்,*
*வ/வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்.*

(24303)(45-6-7)


# 'சீ—பிளேன்கள்' தரையிறங்க 18 நீர் நிலைகள்

நீரின் மீது மிதந்து செல்லும் விமானமான 'சீ-பிளேன்களைத்' தரையிறக்குவதற்காக 18உள்நாட்டு நீர் நிலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

களனிகங்கை, பெந்தோட்டை ஆறு, தங்காலை, மாவெல்லைகளப்புக் கடல், கொக்கலை களப்புக் கடல், ஜா எல தடுகமை ஆறு, அம்பாந்தோட்டை பந்தகிரிய நீர்த்தேக்கம், திஸ்ஸமஹாராமையிலுள்ள திஸ்ஸ குளம், அறுகம்பே களப்புக் கடல், அம்பாறை, கொண்டவட்டுவான் நீர்த்தேக்கம், பொல்கொல்ல நீர்த்தேக்கம், நுவரெலியா கிரகறி குளம், விக்ரோறியா நீர்த்தேக்கம், காஸல்ரீ நீர்த்தேக்கம், இப்பன் கட்டுவ நீர்த்தேக்கம், கொழும்பு பேரையாறு, இரணைமடுக் குளம் மற்றும் திருகோணமலை உள்ளகத் துறைமுகம், என்பவையே தெரிவு செய்யப்பட்டுள்ள 18 நீர்த்தேக்கங்களாகும்.

தரையிறக்கப்படும் விமானங்களுக்கு கட்டணமாக ஒரு தடவைக்கு ரூபா 250 இற்கும் 300 க்கும் இடையிட்ட தொகையொன்று செலுத்தப்பட வேண்டியுள்ளதாக சிவில் விமான சேவைகள் அமைச்சு தெரிவிக்கிறது. (22)


## நெஞ்சகலா நினைவுகளுடன் பதினோராண்டுகள்



மண்ணில்
1944.11.03

விண்ணில்
2001.11.09

திதி: 08.11.2012

அமரர்
கந்தசாமி
தெட்சணாமூர்த்தி



நிலையற்ற மானிடவாழ்வில்
நிலைத்துநின்ற எங்கள் அப்பா
நினைவுகளைக் கனவாக்கி
நீண்டதூரம் சென்றதென்ன?
ஆண்டுகள் எத்தனைதான் சென்றாலும்.....
ஆறுமோ எம்துயரம் அகிலமதில் வாழும்வரை
"துரை" என்னும் பெயருக்கு இலக்கணமாய் வாழ்ந்துவிட்டு
துயரத்தில் ஆழ்த்திவிட்டு தூரதேசம் சென்றதேனோ?
சிரித்த உம் வதனம் எண்ணி தினம்... தினம்
வேதனையால் வாடுகின்றோம்...
சிரித்தபடி வாழ்ந்திடுங்கள் விண்ணுலகில் என்றென்றும்

"கந்தவாசா", பண்ணாகம், சுழிபுரம். (23688)(2.6)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சண்முகநாதன்

(ஓய்வுநிலை அதிபர்)



புங்குடுதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்,ஹற்றன், யாழ்ப்பாணம்,கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சண்முகநாதன் 06.11.2012 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-வள்ளியம்மை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும்,இந்திராணியின் (ஓய்வுநிலை ஆசிரியை) அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான நல்லையா,கனகசபை, சபாரத்தினம்,(பிரபல வர்த்தகர், டிக்கோயா),நீலாம்பாள், நாகமுத்து,கனகம்மா மற்றும் நாயகப்பிள்ளை(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கனகசபை (ஓய்வுநிலை அதிபர்), கனகாம்பிகை (பிரான்ஸ்), காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் குகபாலன் (பேராசிரியர், யாழ் பல்கலைக்கழகம்),லோகநாதன் (ஓய்வுநிலை ஆசிரியர்- ஜேர்மனி), திருநாவுக்கரசு(அதிபர், மலைமகள் வித்தியாலயம் - ஹற்றன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெயந்தி (யாழ்ப்பாணம்), சதீஸ்குமார்(லண்டன்), சுரேஷ் குமார் (ஜேர்மனி), சுகந்தி,ரமேஷ்குமார் (பிரான்ஸ்), தினேஷ்குமார்(உதவி முகாமையாளர் (IT, John Keells Group) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலரஞ்சன் (யாழ்ப்பாணம்), நீலவேணி (லண்டன்), சித்திரா (ஜேர்மனி), ராஜ்குமார் (லண்டன்), ஜெனனி, அனுஷா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும், சதுர்சன், நிரோஷன், அனோஷன், அபிஷா (ஜேர்மனி), லக்சிகா, மதுஷா, அஸ்வினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.11.2012) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியை நடைபெற்று தகனக்கிரியைக்காக கல்கிசை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

119, 02/01,
மெரிங் பிளேஸ்,
வெள்ளவத்தை,
கொழும்பு-06.
தொ.பே.: 011 236 2480

தகவல்:
மனைவி,பிள்ளைகள்.

(25115)(5-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் ஆற்றலை வளப்படுத்துவது




ஆணும் பெண்ணும் இந்த உலகத்தில் சமமாக படைக்கப்பட்டவர்கள். கலவன் பாடசாலைகள் யாவும் கிராமப்புறத்திலே அதிகமாகக் காணப்படுகின்றன. தனிப் பாடசாலைகள் யாவும் நகர்ப்புறத்திலே கூடுதலாக காணப்படுகின்றன.

கலவன் பாடசாலை எனப்படுவது ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமாக வழங்கப்பட்ட பொதுப் பெயராகும். சமத்துவம், விட்டுக் கொடுப்பு, கூச்சமின்மை என்பன எம்மிடத்தில் இருந்து ஒழிந்து விடும். தனியார் பாடசாலைகளை நோக்கும் போது இதற்கு எதிர்மாறான நிலைமைகளே ஏற்படும்.

பாடசாலைகளை எடுத்துக் கொண்டால் மாணவர்களின் ஆற்றலை மிகவும் வளப்படுத்துவது கலவன் பாடசாலை என்று ஆணித்தரமாக கூறமுடியும். நீங்கள் சற்று சிந்தித்து பாருங்கள், பாடசாலையில் மட்டும் தான் 'தனி' என்று ஒரு பிரிவு காணப்படுகின்றது. மற்றையவற்றில் பல்கலைக்கழகமோ, மாலை நேரக் கல்வி நிறுவனங்களோ தனியாக காணப்படுவதில்லை. கலவனாகவே காணப்படுகின்றன.

பொதுவாக நாம் எல்லோரும் கல்வியில் சேரும் இடம் பல்கலைக்கழகம். இங்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரிவில் கற்பார்கள். இவர்களுக்காக தனி பல்கலைக்கழகத்தை நிறுவ முடியாது. காரணம் பல இன்னல்களை சந்திக்க நேரிடும். இதற்காகவே பல கலைகளையும் கற்கும் அனைவரும் ஒன்று சேரும் இடம் பல்கலைக்கழகம். எங்கள் விருப்பத்துக்கேற்ப பழகலாம், வாழலாம். ஆனால் இதை நாம் தனிப்பாடசாலையை நோக்கும் போது விதிமுறைகள், கட்டுப்பாடுகள் கூடுதலாகவே இருக்கும். கலவன் பாடசாலையில் தடைகள் காணப்படுவது குறைவு. எனவே எனது கல்வி வாழ்க்கையிலும், நான் கற்றுக் கொண்ட உலக அறிவின்படி மாணவர்களின் ஆற்றலை வெளிப்படுத்துவது கலவன் பாடசாலைகளே.



**கலவன் பாடசாலைகளை நோக்கும் போது சமத்துவம், விட்டுக் கொடுப்பு, கூச்சமின்மை என்பன எம்மிடத்தில் இருந்து ஒழிந்து விடும். தனிப் பாடசாலைகளை நோக்கும் போது அதற்கு எதிர்மாறான நிலைமைகளே ஏற்படும்.**

**அல்பிரட் நிதர்சான்,**
புனித செபஸ்ரியார் வீதி, கோண்டாவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.





## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

மாணவர்களின் ஆற்றலை வளப்படுத்துவது

**கலவன் பாடசாலைகளா?**
**தனிப் பாடசாலைகளா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங் களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..............................................

முகவரி :- ..............................................

..............................................

............................ ............................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# கரம் பற்றி...



**வேதநாயகம் ஆயுட் அனுஷலா.**

சகோதரனே! நீ வாழப் படைக்கப்பட்டவன். நீ வாழ வேண்டும். ஆனாலும் மனிதனாக வாழ அழைக்கின்றான் இறையன்பன். ஆனாலும் அதற்கிணங்க உனக்குள்ளே இடமில்லை. காரணம் எம் மண் மோதல்களும், ஆயுத மோதல்களும், மனித புதைப்புக்கள், பதை பதைத்த உறவுப் பிரிவு, உண்மைக்கு மறுப்பு, அநீதிக்கோ ஆதரிப்பு, பொய்மைக்கோ புகலிடம்.

கற்பழிப்புக்கோ ''கமராக்'' காட்சிகள். இத்தனையுமா? இன்னும் உள்ளனவே இலங்கையில் தமிழனாய்ப் பிறந்து விட்டால் அடிமை என்பது உனக்கு விலங்காச்சே, அத்தனையும் தாண்டி அன்பாக, பண்பாக, புனிதனாக, நற்செய்தி தூதுவனாகவும், நல் மனிதனாக வாழவும் இயேசு உன்னை அழைக்கிறார். எனவே நீ இவற்றை எல்லாம் விட்டு அவரது கரத்தைப் பற்றிக் கொள்.

# நல்லதோர் வீணை செய்தே.



நல்லதோர் வீணை செய்தே
நானிலம் பயன் பெற வாழ்வதற்கு
நாளைய உலகம் உயர்வதற்கு- என்ற
நல்ல எண்ணமதில் நம்பிக்கை தளர்ந்ததுவே

அறிவுரை சொன்ன ஆசானும்-பெற்றுப்
பேணி வளர்த்த பெற்றோரும்
ஊட்டி வளர்த்த உறவுகளும் இன்றைய
இளஞ் சந்ததிக்கு தம் சுதந்திரத்துக்கு
தடை சொல்லும்
தம் வேகத்தைத் தடுத்து வைக்கும்
வெறும் தடைக் கற்களே தான்

மூங்கிலின் சரியான துவாரம் தான் புல்லாங்குழல்
காற்றின் இதம் தான் தென்றலின் தாலாட்டு
மழையின் அளவு தான் நிலங்களின் பசுமை
மருந்தின் விடியல் தான் வலியின் தீர்வு
ஆசையின் முடிவில் தான் அடையும் வெற்றி
கனவுகளின் பின்னால் இமயத்தை தொடுதல்
இவை இல்லை என்றால் மனிதா
உன் பிறப்பில் ஊனம்

உடல் ஊனமா? பரவாயில்லை
சிந்திக்க மறுத்த உன் இதயமும்
செயற்திறன் இல்லாத உன் சிந்தனையும்
உனக்கு மட்டுமல்ல பிறருக்கும் உதவாது
போகும் ஊனம் தான் பாரடா?

உன்னைப் பெற்றவளும்
உன்னைச் செதுக்கியவர்களும்
நல்லதோர் வீணை செய்தோம்
என மகிழ்ந்து கொள்ள- நீ
என்ன செய்தாய்? என்று கேட்டுப்பார்
உன்னை நீயே கேட்டுப்பார்.

**போஜினி பஞ்சலிங்கம்,** ஆரம்பக்கல்வி
2ஆம் வருடம், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

# பொன் மொழிகள்



★நாம் விரும்பியதை பெற்றுக் கொண்டால்- அது வெற்றி. நாம் பெற்றுக் கொண்டதை விரும்பினால்- அது சந்தோஷம்

★காலம் வரும் என நினைத்து, கடமையை கைவிட்டு விடாதே.

★கருவாடு மீனாகாது. கறந்தபால் முலைக்கேறாது. நடந்தது நடந்தது தான்.

★தூசியைக் கண்டவுடன் இமை மூடுவது போல தீமையைக் கண்டவுடன் விலகி விடு.

★பலவீனமான மனத்தின் அறிகுறி பரபரப்பு. வலிமையான மனத்தின் அறிகுறி விரைவு.

**சா.ஜிந்துஜா, கோண்டாவில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி தியாகராஜா ரஞ்சனி

*(கைதடி அரச சிறுவர் இல்லத்தில் பணிபுரிபவர்)*



நல்லூர் மூத்தவிநாயகர் வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தியாகராஜா ரஞ்சினி நேற்று (07.11.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கெங்காதரம் (ஆட்ஸ் மாஸ்டர்) இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், தியாகராஜாவின் அன்பு மனைவியும், கம்சா, கௌதமன் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற காங்கேசன் மற்றும் கமலாசனி, ஈசுவரி, லோகேஸ்வரி, பூங்கோதை (பிரான்ஸ்), கலாவதி, சிவகுமார் (கனடா), தயாளன், விமலன் (பாரின்), அம்பிகை, அம்பிகைபாகன் (லண்டன்), மங்களம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

14, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(25139)(9.14)

தகவல்:
குடும்பத்தினர்.

# தொடர்ச்சியான மழையால் யாழில் நெற்பயிர்கள் நாசம்

யாழ்ப்பாணம், நவ.8

யாழ். மாவட்டத்தில் கடந்த வாரம் பெய்த தொடர்ச்சியான மழையால் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தில் விதைக்கப்பட்ட நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளன.

இதற்கான நஷ்டஈடு எவையும் மேற்படி விவசாயிகளுக்குக் கிடைக்கமாட்டாது என்று விவசாய அமைப்புகள் கவலை தெரிவிக்கின்றனர். யாழ். மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஏக்கர் கணக்கான காணிகளில் நெற்செய்கையை மேற்கொள்பவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவானதாகும்.

இதன் காரணத்தால் நெல் விதைப்பில் ஈடுபடும் விவசாயிகளில் பல நூற்றுக் கணக்கானவர்கள் காப்புறுதி செய்வதில் கவனம் செலுத்துவதில்லை. இயற்கை சீராக மழை பெய்யும் வேளையில் பாதிப்புக்கள் ஏற்படுவதும் இல்லை.

இந்த முறை மழை ஆரம்பத்திலேயே தொடர்ந்து பெய்தமை வெள்ளம் செல்ல வேண்டிய வாய்க்கால்கள் தடைப்பட்டுள்ளமை குறிப்பாக பல வாய்க்கால்கள் மழை காலத்துக்கு முன்னர் துப்புரவு செய்யப்படுகின்ற போதிலும் இந்த முறை அத்தகைய நடவடிக்கைகள் எவையும் பல இடங்களில் நடைபெறவில்லை.

இத்தகைய காரணங்களினால் திடீரென மழை பெய்த நிலையில் வெள்ளம் வடிந்தோடும் வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்படாமை போன்ற காரணங்களினால் விவசாயப் பெருமக்கள் பலரின் வயல்கள் அழிவுக்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (வ-86)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி




அமரர்
## பொன்னுத்துரை பாலசுப்பிரமணியம்

திதி 08.11.2012 நவமி

குடும்பமென்ற விருட்சத்தின் ஆணி வேராய்
என்றென்றும் எம் இதயத்தில்
என் அன்புத் தெய்வமே
ஆண்டு இரண்டு ஓடி மறைந்தாலும்
ஆறாது அப்பா நம் துயரம்
பரிவும் நேசமும் பொழிந்தெம்மை
வாழ்வில் உயர வைத்த எம் அப்பாவே
நற்பண்புகள் பல கற்றுத்தந்து

நற்பலன்கள் பல அீரித்து
நலமோடு நாம் வாழ நல்வழி காட்டி
எம்மை வாழ வைத்த எங்கள்
அன்புத் தெய்வமே
நீங்கள் இறைவனுடன்
இரண்டறக் கலந்து
ஆண்டு இரண்டு ஆனதுவே
என்றும் உங்கள் நினைவலைகளை
எம்மோடு சுமந்து வாழும்.

16/11, சீனியர் லேன்,
கலட்டி,யாழ்ப்பாணம். (25122)(5.6)

மனைவி, பிள்ளைகள்.

# 2013ஆம் ஆண்டு வரவு- செலவுத் திட்டம் தொடர்பான ஆய்வுக் கருத்தரங்கின் நேரடி ஒளிபரப்பு

இடம்- Tilko Jaffna Hotel மாநாட்டு மண்டபம்
காலம்- 09 நவம்பர் 2012 வெள்ளி 8.30- 10.30

விடயம் I- 2013 வரவு- செலவுத்திட்டம் தொடர்பான தனிநபர், கம்பனி, வருமான வரிகள் மற்றும் நேரில் வரிகளான VAT, ESC

வழங்குபவர்- துமிந்த ஹலன்கமுவ Earnst & Young

விடயம் II- 2013 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட பிரகாரம் எதிர்நோக்கும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி தொடர்பான அரசியல் பொருளாதார கொள்கைகள் பற்றிய ஆய்வு

வழங்குபவர்- கலாநிதி P.B ஜெயசுந்தர

அனுமதி - இலவசம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

M.RAJANAYAHM & CO
Charted Accounts.

**Hotel Vacancy**

* Executive Chef
* Food & Beverage Manager
* Kitchen Helpers
* Front Officer Manager/ Executive
* Restaurant / Banquet Stewards

Please Forwrad your CV to
gm@cityhotealjaffna.com
On Or Before 09.11.2012
T.P.No:0771064385

TILKO Hotels
Tilko Jaffna City Hotels (Pvt) Ltd.
No: 70/6, K. K. S. Road,
Jaffna, Sri Lanka.
(25131)(3.14)

**கார்கள் விற்பனைக்கு**

ஆங்கில இலக்கமுடைய நிசான் FB 15 Super Saloon KD xxxx Silver, நிசான் FB 12 Trad Sunny 17 xxxx White ஆகிய கார்கள் விற்பனைக்குண்டு.

T.P - 0777292199

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கனகம்மா நவரத்தினம் (கனகமணி)

சங்கானை தெற்கைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி, நாலுகால் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா நவரத்தினம் நேற்று (07.11.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்பு மனைவியும், அன்பரசி, தயாளன் (லண்டன்), சகிலா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. பவளச் சந்திரன் (மருமகன்)

நாலுகால் மடம்,
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. (சி/4706)(3.14)

# மரண அறிவித்தல்

## அம்பலவாணர் சிற்றம்பலம் (கைதடி)



கைதடி கிழக்கு கைதடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, சுவிசை வதிவிடமாகவும் கொண்ட அம்பலவாணர் சிற்றபலம் கைதடியில் நேற்று (07.11.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - பறுபதம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - மலர் தம்பதியரின் அன்பு மருமகனும், கற்பகத்தின் அன்புக் கணவரும், பத்மலோஜினி (சுவிஸ்), தர்மலோஜினி (பிரான்ஸ்), வசந்தன் (கொழும்பு), வசீகரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வசீகரன் (சுவிஸ்), இராயேந்திரன் (பிரான்ஸ்), காயத்திரி (கொழும்பு), சிந்துயா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும், திலகவதி (கொழும்பு), புனிதவதி (கைதடி), சண்முகநாதன் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான லிங்கராசா, லோகநாதன், அன்பழகி, அறிவழகி, அருளழகி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான கணேசன், வரதராசா, திலகவதி மற்றும் ஜெயசித்தி ஆகியோரின் மைத்துனரும், லவணி (சுவிஸ்), ராஜினி (பிரான்ஸ்), வசந்த் (பிரான்ஸ்), ரஜிற் (பிரான்ஸ்), ரிஷிகேஷ் (கொழும்பு), ரித்திகா (கொழும்பு), உதேஷ் (சுவிஸ்), திக்ஷா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.11.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கைதடியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊற்றல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சந்நிதி இல்லம்"
கைதடி கிழக்கு, கைதடி.
(25137)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

# விஞ்ஞான தினம்

வேலணை தீவகக் கல்வி வலய விஞ்ஞானதினம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

தீவகக் வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோண் குயின்ரஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி அபிவிருத்திப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வ.ஸ்ரீஸ்கந்தராசாவும் சிறப்பு விருந்தினராக தீவக வலய ஓய்வு நிலைவலயக்கல்விப் பணிப்பாளர் ஜி.வி. இராதாகிருஷ்ணனும் கலந்துகொள்ளவுள்ளனர். (16)

**வேலையாள்கள் தேவை**

அளவெட்டியில் உள்ள கோழிப்பண்ணை ஒன்றுக்கு பராமரிப்பாளர், காசாளர் தேவை.

தொடர்பு:
0776049853
(25138)(3.14)

## சிதம்பரம் இராசலிங்கம்



வள்ளுவர் சனசமூக நிலையம், மாவிட்டபுரம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், தேவாலயவீதி, சங்கானையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரம் இராசலிங்கம் நேற்று (07.11.2012) புதன்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரம்- செல்வி தம்பதியரின் புதல்வனும், விசாலாட்சியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, தர்மலிங்கம், பூமணி, சிவபாக்கியம், அமுதலிங்கம் (ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கணபதி- பத்தினி ஆகியோரின் அன்பு மருமகனும், நிர்மலாதேவி (கனடா), இரவீந்திரன் (தபால் அலுவலகம், தெல்லிப்பழை), ஸ்ரீதரன் (தபால் அலுவலகம், தெல்லிப்பழை), ஸ்ரீபாஸ்கரன் (ஜேர்மனி), இரவிச்சந்திரன் (சாரதி யாழ். போதனா வைத்தியசாலை), நிறைஞ்சனாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசலிங்கம் (கனடா), அருந்தவச்செல்வி, இரத்தினவதனா, சுகந்தினி (ஜேர்மனி), பிறேமலதா, பகீரதன் (ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை) ஆகியோரின் அன்பு மாமனும், றோனேஸ் (கனடா), அபிலாஜினி (கனடா), நிறோஜினி (கனடா), றஜிந்தன் (கனடா), மிறாஜினி, சுஜீந்தன், திபோஜினி, சேந்தன் (ஜேர்மனி), நிவேதினி (ஜேர்மணி), திலக்ஷிகா (ஜேர்மனி), கேதுஷா, கிருஷிகன், ஆரணி, சாளினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (8.11.2012) வியாழக்கிழமை மு.ப 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கராச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி,
சங்கானை.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் பழைய மாணவியும், கல்லூரியின் முன்னாள் உப அதிபராக கடமையாற்றியவருமான திருமதி இந்திரகுமாரி சிவானந்தன் அவர்களின் அன்புக் கணவர்

## இளையதம்பி சிவானந்தன்

(வடக்குக்கிழக்கு கல்வி அமைச்சின் உப செயலாளர் ஓய்வுநிலை)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, கோப்பாய்.

(25120)(45,6,7)

## சங்காபிஷேகமும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வித்தக விநாயகப் பெருமானுக்கு சங்காபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது. பிற்பகல் 2 மணிக்கு பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் கல்லூரியின் கலையரங்கில் 'வித்தகர்' மகா கும்பாபிஷேக மலர் வெளியீடு நடைபெற இருக்கின்றது. (ப)

## வாடகை அடிப்படையில் வான் பெறுவதற்கான கேள்வி விலை கோருதல்

**மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம், யாழ்ப்பாணம்.**

மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணத்தின் கீழ் உள்ள முல்லைத்தீவு மாவட்ட அலுவலகத்திற்கு வாடகை அடிப்படையில் வான் பெற்றுக் கொள்வதற்கான கேள்வி கோரலை இல.40, ரக்கா லேன், சுண்டுக்குளியில் அமைந்துள்ள எமது அலுவலகத்தின் விளம்பரப் பலகையில் பார்வையிட்டு கேள்விப் பத்திரங்களை பெற்று 16.11.2012 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு முன்னராக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

எந்திரி செ.மோகனதேவன்
தலைவர்,
பெறுகைக் குழு,
கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம்,
இல.40, ரக்கா ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கங்கள்: 0212228091 / 0213202638

(ச/4702)(3.6)

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 02.02.1952 — மறைவு 21.10.2011

அமரர்

## வில்வரத்தினம் புவனேஸ்வரி

ஊரெல்லாம் கூடி தேர் இழுத்து
ஓராண்டு ஆனதோ அம்மா
ஈரம் கொண்ட விழியுடன் நாம்
ஏங்கித் தவிக்கின்றோம் — இறைவன்
தாள் பணிந்து போற்றுகின்றோம்.

இல.10, கிருஸ்ணபிள்ளை லேன்,
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

என்றும் உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(23688)(2.6)

# மரண அறிவித்தல்

## எசக்கியல் எலிசபேத் (இராசமணி)



சேந்தாங்குளம், இளவாலையைப் பிறப்பிடமாகவும் உயரப்புலம், ஆனைக்கோட்டையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட எசக்கியல் எலிசபேத் (இராசமணி) நேற்று (07.11.2012) புதன்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபமாலை - லூர்த்தம்மா தம்பதியரின் அன்பு மகளும், ஜேம்ஸ்சின் அன்புச் சகோதரியும், எசக்கியலின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற மரியபுஸ்பம் மற்றும் கென்றிஜோசப் (பிரான்ஸ்), மேரிறீற்றா கமலலோயினி (இத்தாலி), செல்ரன் றஞ்சித் றாஜ் (வசி, பிரதேச செயலகம், உடுவில்) ஆகியோரின் அன்புத் தாயும், டொன்பொஸ்கோ, மேரி விக்ரோறியா, மேரியசிந்தா ஆகியோரின் மாமியும், டேமியன் ஜோர்ச், ஜெனிசன், றொனிசன், ஜினோலினி, ஜினோத், ஜினோசன் ஆகியோரின் பேர்த்தியும், டிசாந்தின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.11.2012) வியாழக்கிழமை அவரது இல்லத்திலிருந்து பிற்பகல் 3.00 மணிக்கு ஆனைக்கோட்டை புனித அடைக்கலநாயகி தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் பூதவுடல் நல்லடக்கத்துக்காக காக்கைதீவு புனித அடைக்கலநாயகி சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: (25129) (2.6)
உயரப்புலம், ஆனைக்கோட்டை. **எ.றஞ்சித்றாஜ் (வசி - மகன்)**

## University of Jaffna, Sri Lanka
## Faculty of Arts
### WALK -IN – INTERVIEW

Walk in interview for appointments to the following posts will be held at **9.30 a.m on 16.11.2012** at the Board Room of this University.

Candidates who have the required qualifications are invited for a Walk in Interview, with self-prepared applications for the posts mentioned below:-

**(i) Visiting Lecturer in Fine Arts / Drama & Theatre Arts/ Home Economics/Sociology/History/Archeology/Economics/Hindu Philosophy**

**Qualifications**

a) A special degree in relevant field/subject and a Postgraduate degree (M.Phil/Ph.D) in relevant field/subject **OR**

b) First or second class special degree in relevant field/subject with at least five years teaching experience

**(ii) Visiting Instructor in Fine Arts / Drama & Theatre Arts/ Home Economics/Sociology/History/Archeology/Economics/Hindu Philosophy**

**Qualifications**

a) A special degree in relevant field/subject

| POST | SALARY SCALE |
|---|---|
| Visiting Lecturer | Rs.1,500/- per hour for lecture |
| | Rs.200/- per hours for tutorial/practical |
| Visiting Instructor | Rs.250/- per hour |

Interested candidates with the required qualifications are expected to be present for the interview at time with relevant certificates, NIC and self prepared application.

**Registrar**
University of Jaffna. 07.11.2012

(C/4600)(6)

## VACANCIES
### UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned posts.

**FACULTY OF AGRICULTURE**

**Senior Professor/ Professor** in
Agronomy / Agricultural Biology /Agricultural Chemistry/ Agricultural Economics

**Senior Lecturer Grade I/Senior Lecturer Grade II/Lecturer (Probationary)** in
Agronomy / Agricultural Engineering

**SPORTS SCIENCE UNIT**

Lecturer (Probationary) in Sports Science

**PHYSICAL EDUCATION UNIT**

*Instructor (Male) in Physical Education Grade II

*Preference will be given who have competency in any two of the following Games: Badminton/ Baseball/ Chess/ Karate/ Rowing/ Rugby Foot ball/Swimming/Taekwondo/ Tennis/ Wrestling

Age Limit- Not more than 45 yrs

| Post | Salary |
|---|---|
| Senior Professor | Rs.67100-11x1425-82775 p.m. |
| Professor | Rs.56505-13x1310-73535 p.m. |
| Senior Lecturer Grade I | Rs.45545-7x1050-52895 p.m. |
| Senior Lecturer Grade II | Rs.39755-11x790-48445 p.m. |
| Lecturer (Probationary) | Rs.27775-10x645-34225 p.m. |
| Instructor Grade II | Rs.24930-19x360-31770 p.m. |

**Note:** In addition to the above salary the following allowances will also be paid.

i Academic allowance } other than Instructor Grade II
ii. Research allowance
iii. Special allowance
iv. Cost of living allowance

**Statutory benefits**

i.Sabbatical leave entitlement for the post of Senior Lecturer Grade II and above.
ii.Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System.
iii.Gratuity payments
iv.Employees' Trust Fund benefits
v.Free medical Services

**Closing date:**

Post of Senior Professor/ Professor/ - 07.02.2013
Other Posts - 07.12.2012

Applications and other required documents for the Post of Senior Professor/ Professor shall be sent to the Vice-Chancellor with a covering letter. Applications for the other posts shall be sent to the Senior Assistant Registrar/ Academic Establishments.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post on a payment of Rs.100/- per application form at the People's Bank, University Branch or at the Shroff's counter of the University of Jaffna.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with **a self–addressed stamped envelope** 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one post** should make **separate applications**.

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Heads of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**Registrar, 07.11.2012**

(C/4598)(6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரணைமடுக் குளத்தில் இராணுவத்தினருக்கு

## மீன்பிடிக்க அனுமதி வழங்க மறுத்த சங்கத் தலைவருக்கு அச்சுறுத்தல்

கிளிநொச்சி, நவ. 8

இரணைமடுக் குளத்தில் மீன்பிடிக்க தமக்கு அனுமதி தரவேண்டும் என அந்தக் குளத்தின் நன்னீர் மீன்பிடிச் சங்கத்தின் தலைவரை இரா ணுவத்தினர் மிரட்டியுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

தினமும் தமக்கு 100 கிலோ மீன் தேவைப்படுவ தாகவும் அதனை இரணைம டுக் குளத்திலிருந்து பிடிப்ப தற்கு அனுமதி தரவேண்டும் எனவும் இராணுவத்தினர் கோரியுள்ளனர். இதற்கு மறுப்புத் தெரிவித்த நன்னீர் மீன்பிடிச் சங்கத்தின் தலை வரை இராணுவத்தினர் கடு மையாக மிரட்டியுள்ளது டன், அனுமதி தராவிட்டா லும் தாம் குளத்தில் மீன் பிடிப்போம் எனவும் தெரிவித் துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நன்னீர் மீன்பிடிச் சங்கத் தலைவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது;

"நேற்றுமுன்தினம் இரா ணுவத்தினர் சிலர் குளத்தில் மீன்பிடிக்க அனுமதி கோரினர். அதற்கு நான் மறுத்துவிட் டேன். இந்தக் குளத்தில் சுற் றயல் பகுதிகளைச் சேர்ந்த 400 குடும்பங்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர். அவர்களின் வாழ்வாதாரம் இந்தக் குளத்திலேயே தங் கியுள்ளது. இதனால் இராணு வத்தினரை மீன்பிடிக்க அனு மதிக்க முடியாது என நான் மறுத்திருந்தேன். இந்த நிலை யிலேயே என்னை இராணு வத்தினர் கடுமையாக மிரட் டினர். இது தொடர்பில் இரா ணுவத்தினரின் 56 ஆவது படைப்பிரிவுத் தலைமை யகத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளேன்." - என்றார்.

(ஐ-16)

## அரசுக்கு எதிராக தமிழ் இளைஞர்களை ஆயுதமேந்துமாறு தூண்டுகிறது சர்வதேசம்

### அமைச்சர் சந்திரசிறி கஜதீர குற்றச்சாட்டு



கொழும்பு,நவ.8

சர்வதேச சக்திகள் சில வடக்குக்குச் சென்று தமிழ் இளைஞர்களை அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்துமாறு தூண்டியுள்ளன என்று புனர் வாழ்வு மற்றும் சிறைச்சாலை கள் அமைச்சர் சந்திரசிறி கஜதீர நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

சபையில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற சர்வ தேசத்தால் தேடப்படுவோரை அந்தந்த நாடுகளிடம் ஒப் படைப்பது தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், மேலும் கூறியதாவது:-

நாம் கடந்த காலங்களில் கே.பியை மாத்திரமன்றி அனை வரையும் புனர்வாழ்வளித்து விடுதலைசெய்துள்ளோம். கே.பி. கடந்த காலங்களில் முல்லைத் தீவுக்குச் சென்று இனவாதத் துக்கு எதிரான பிரசாரத்தை மேற்கொண்டார். ஆனால், இன வாதத்தை விரும்புபவர்கள் கே.பியை எதிர்க்கின்றனர்.

நாம் இனவாதத்துக்கு எதிராகச் செயற்படுகின்றோம். 11 ஆயிரத்துக்கு மேற்பட்ட முன்னாள் புலிகளுக்கு புனர் வாழ்வளித்து விடுதலை செய் துள்ளோம். அவர்கள் புலி களுடன் இருந்தார்கள் என்ப தற்காக அவர்களை நாம் கொலை செய்யவில்லை.

வவுனியா சிறைச்சாலை யில் இடம்பெற்ற சம்பவம் போல் ஒருசில சம்பவங் கள் இடம்பெறலாம். ஆனால், நாம் கொலை செய்யமாட் டோம். இருந்தும் வவுனியா சிறைச்சாலை சம்பவத்தை நாம் அறிந்திருக்கவில்லை.

நாம் ஜனநாயக நீரோட் டத்தில் இணைந்துள்ளோம். வடக்கில் இனவாதத்துக்கு எதிரான செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்கின் றோம். ஆனால், சில சர்வதேச சக்திகள் வடக்கில் உள்ளமுகாம் களுக்குச் சென்று உங்களை விடுதலை செய்தபோதும் பய னில்லை. மீண்டும் ஆயுதம் ஏந்துங்கள் என்று கூறுகின்றன.

நாம் அதற்கு இடம் கொடுக்கமாட்டோம். இனங் களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் செயற்பாட் டிலேயே ஈடுபட்டுள்ளோம். இதனால் சர்வதேசத்தில் உள்ள சக்திகளை நாம் முறி யடித்து வருகின்றோம். முன் னாள் போராளிகள் பலரை சிவில் பாதுகாப்புப் படையில் இணைத்து இனவாதமற்ற செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றோம். இது தொட ரும் - என்றார்.

(ச-சி)

## நெடியகாடு யங்ஸ்ரார் வி.கவுக்கு நிதி உதவி

வலி.வடக்கு, நவ.8

வல்வெட்டித்துறை நெடியகாடு யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் அபிவிருத்திச் செயற்பாட் டுக்கென பன்முகப்படுத் தப்பட்ட பகுதியின் கீழ் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் யாழ். மாவட்ட உறுப் பினர் மாவை சேனாதிராசா 50 ஆயிரம் ரூபா நிதியை வழங்கியுள்ளார்.

இளைஞர்களிடையே விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கும் முகமாகவும் இளைஞர்களின் பொழுது போக்கு நல்லமுறையில் அமைய வேண்டும் என்ற அடிப்படையிலுமே குறித்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது.

நாடாளுமன்ற உறுப் பினரின் குறிப்பிட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் சுமார் 75 கழக அங்கத்தவர்கள் நேரடியாக பயனடைய முடியும் எனவும் தெரி விக்கப்படுகின்றது.

(வ-86)

# கே.பியின் ஆயுதக் கொள்வனவின் பின்னணியைப் பகிரங்கப்படுத்துக

### நாடாளுமன்றில் விஜிதஹேரத் ஆவேசம்



கொழும்பு,நவ.8

சட்டவிரோத ஆயுத விற்பனைச் சந்தையில் கே.பி. எப்படி ஆயுதம் கொள் வனவு செய்துள்ளார். அதன் பின்னணியிலுள்ள உலக நாடுகளின் உதவி ஆகி யவை உட்பட கே.பி. சார்ந்த அனைத்து விடயங்களையும் அரசு பகிரங்கப்படுத்த வேண்டும் என்று நாடாளு மன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தெரி வித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற சர்வதேச நாடுகளால் தேடப் படுபவர்களை அந்தந்த நாடுகளிடம் ஒப்படைப்பது தொடர்பான சபை ஒத்தி வைப்புவேளை பிரேரணை யில் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:-

புலிகளின் சர்வதேச வலையமைப்பைப் பலப் படுத்தி ஆயுத விநியோகம் செய்த கே.பியை கைது செய் வ தற்கு முன்னர் அவரி டம் கப்பல், காசு, தங்கம் ஆகியன இருப்பதாக அரசு கூறியது. ஆனால், அவர் கைது செய் யப்பட்ட பின்னர் அவை தொடர்பில் அரசு இன்னும் எதையும் அறிவிக்க வில்லை.

கே.பி. எவ்வாறு சர்வ தேசச் சந்தையில் ஆயுதம் வாங்கினார் என்ற உண்மை எமக்குத் தெரியவேண்டும். அதற்கான உரிமை உள்ளது. ஏனெனில், அவர் எவ்வாறு ஆயுதம் வாங்கினார் எனத் தெரிந்து கொண்டால்தான் சட்டவிரோதமாக ஆயு தங்கள் எப்படிக் கிடைத் தன? இதன் பின்னணி என்ன என்பது உட்பட முக் கிய பல விடயங்கள் அம்பல மாகும்.

போரால் வடக்கு கிழக்கு மக்கள்தான் அதிகம் பாதிக் கப்பட்டனர். அங்கு வாழும் இளைஞர், யுவதிகள் பலர் தற்போது சிறைச்சாலை களில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். ஆனால், கேபியை அரசு ஆதரிக்கிறது.

அரசின் இந்தப் பாகுபாட் டால், வடக்கு, கிழக்கு தமிழ் இளைஞர்கள் மனதில் வன்மம், குரோதம் ஏற்படும். அதன் தாக்கம் அரசுக்கு 10,15 வருடங்கள் கழிந்த பின்னர் தான் தெரியவரும்.

கே.பிக்கு போன்று சிறை யிலுள்ள இளைஞர்களுக் கும் சொத்து இருந்திருந்தால் அவர்களையும் அரசு சொகுசாக நடத்தியிருக்கும். ஆனால், அவர்களுக்கு குடிசை வீடு மாத்திரமே இன்று மிஞ்சியுள்ளது.

அதேவேளை, அரச பாதுகாப்பில் இருக்கும் போது உயிரிழந்த டில்ருக் ஷன், நிமலரூபன் ஆகியோ ரின் மரணம் தொடர்பில் உரிய விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளை அரசு இன்னும் இனங்காண வில்லை.

அத்துடன், தமிழ் அரசி யல் கைதிகள் விவகாரம் தொடர்பில் ஒரு மாத காலத் துக்குள் நடவடிக்கை எடுப் பதற்கு விசேட நீதிமன் றங்கள் நியமிக்கப்படும் என அரசு கூறியது. ஆனால், இதுவரை என்ன நடந்துள் ளது?- என்றார்.

அதேவேளை, இவ் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி,

இந்த நாட்டில் மீண்டு மொரு போருக்கு இடமளிக்க மாட்டோம். சர்வதேச பொலிஸாரால் கூட கைது செய்ய முடியாமல்போன கே.பியை எமது புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள் ளனர். இதற்காக நாம் அவர் களுக்கு நன்றிகளைக் கூறிக் கொள்கின்றோம் என்று கூறினார்.

(ச-சி)

## பிரதம நீதிய சருக்கு எதிராக கையெழுத்திட மை சரியானதே

### பிரபா கணேசன் எம்.பி. கருத்து

கொழும்பு,நவ.8

பிரதம நீதியரசருக்கு எதிராக 14 குற் சாட்டுகளை முன்வைத்து அரசு கொண் வந்திருக்கும் பிரேரணைக்கு ஆதரவா கையெழுத்திட வேண்டிய கடப்பா அரசில் இருக்கும் தென்னிலங்கை இந் வம்சாவளி நாடாளுமன்ற உறுப்பினர்கள எங்க ளுக்கு உள்ளது என்று ஜனநா மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும பிரபா கணேசன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய் குறிப்பில் மேலும் தெரிவித்ததாவது:-

நீதித்துறையில் அரசு தலையிடுகி என்ற குற்றச்சாட்டை எதிர்க்கட்சிகள் புறம் வைக்க இதில் கைச்சாத்திட்ட த நாடாளுமன்ற உறுப்பினர்களை வ பாடுவது இன்னொரு புறம் இருக்கின்றது. இந் திய வம்சாவளி தென்னிலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அரசு மூலமாக கொழும்பு, களுத்துறை ஆகிய பகுதிகளிலுள்ள பல தமிழ்ப் பாடசாலைகளை அபிவிருத்தி செய் யக் கூடிய வாய்ப்புக் கிடைத்துள்ளது. பிரதம நீதியரசர் தமது பதவிக் காலத்திலே தமிழ் அரசியல் கைதிகள் சம்பந்தமாக எவ்வித அக்கறையும் கொண்டதில்லை. தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் ஷிராணி பண்டார நாயக்க விலக்கப்பட்டு அதற்காக பிரியாணி பண்டார நாயக்க வந்தாலும் தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மையும் பயக்கப் போவதில்லை. ஆகவே அவ ருக்கு எதிராக கையெழுத்திடுவதன் மூலமாக தமிழ் மக்களுக்கு மேலதிகமாக எதனையாவது அர சின் மூலமாக பெற்றுக்கொடுக்க முடியுமா என்பதே எனது குறிக்கோளாகும்- என்றுள்ளது.

(வ)

## வடமாகாண கண்காட்சி குறித்த அபிவிருத்திக் கூட்டம் நேற்று நடைபெற்றது

யாழ்ப்பாணம், நவ.8

வடக்கு மாகாண கண் காட்சி தொடர்பான அபிவிருத் திக் கூட்டம் மாவட்ட மட் டத்தில் நேற்று இடம்பெற்றது.

வடமாகாண உள்ளு ராட்சி ஆணையாளர் ம.ஜெகூ தலைமையில் இடம்பெற்ற மேற்படி கூட்டத்தில் உள் ளூராட்சி மன்றங்களின் "சிறந்த செயலாற்றுகை" தொடர்பாக ஆராயப்பட்டது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூராட்சிச் சபைகளின் செயலாளர்கள் சிறந்த செய லாற்றுகை தொடர்பாக ஆணை யாளருக்கு விளக்கமளித்த னர். இதில் வல்வெட்டித்துறை நகரசபை இயற்கை அனர்த் தங்களும் மக்கள் பங்களிப்புடன் கரையோரப் பாதுகாப்பும், நல்லூர் பிரதேச சபை- கழிவ கற்றல் செயற்பாடு, பருத் தித்துறை நகரசபை- வீதி வலையமைப்பு, பருத்தித்துறை பிரதேச சபை- மீள்குடியேற் றத்தில் மாதிரி கிராமம், வடம ராட்சி தெற்குமேற்கு பிரதேச சபை- பொது தொடர்பு அலு வலகமுறை, வலி.வடக்கு பிர தேச சபை- யாத்திரைத் தலங் களும் உள்ளூராட்சி மன்றங் களும், வலி.கிழக்கு பிரதேச சபை- டெங்கு விசேட செயற் திட்டத்தில் பிரதேச சபைக ளின் பங்கு, வலி.தெற்கு பிரதேச சபை- முப்பரிமாண நூலக மாதிரி,

வலி. மேற்கு பிரதேச சபை- மாதிரி சமூக நீர்விநியோக திட்டம், வலி.தென்மேற்கு பிரதேச சபை- மாதிரி நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ச.ச.நிலையம், காரைநகர் பிர தேச சபை- நீர்விநியோக திட்டம், வேலணைப் பிர தேசசபை- மாற்று மின்சக்தி மூலம் தெருவிளக்குக்கு ஒளியூட்டல், ஊர்காவற்றுறை பிரதேச சபை-சமூக் கணக் காய்வு, நெடுந்தீவு பிரதேச சபை- இயற்கை முருகைக் கற்களைக் கொண்டு வீதி புனரமைப்பு, சாவகச்சேரி நகரசபை- சட்ட விண்ணப் பங்களும் நடைமுறைக ளும், சாவகச்சேரி பிரதேச சபை- ஆயுள்வேத மூலிகை களும் மருந்தும், யாழ். மாநகர சபை- மாதிரி நகர அபிவிருத்தித் திட்டம், போன்ற விடயங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டன.

இதேவேளை மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய நான்கு மாவட்ட ங்களும் 17 சிறந்த வெவ்வேறு செயலாற்றுகையை கண்காட்சி யில் வெளிப்படுத்துவர் என தெரிவிக்கப்படுகிறது. (வ-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற 16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் மூன்றாம் இடத்தினைப்பெற்றுக் கொண்ட யாழ்.மத்தியகல்லூரி அணி வீரர்கள். (ந-23)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,நவ.8

யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களில் சிறந்த அணிகளாகத் தெரிவு செய்யப்பட்ட 8 கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் விலகல் முறையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்ட போட்டி களில், இன்று வியாழக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-

பி.ப.3 மணி

குருநகர்பாடும்மீன் விளையாட்டுக்கழகம் எதிர் அச்செழு வளர்மதி விளையாட்டுக்கழகம்

பி.ப.மணி

நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் எதிர் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம்

★ ★ ★

யாழ்ப்பாணம்,நவ.08

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஆதி சக்தி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்கு கொள்ளவுள்ள அணிகள் விவரம் வருமாறு-

பி.ப. 3.30 மணி

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் எதிர் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம். (ந-23)

# ஆஸி.மெய்வன்மை போட்டிக்கு சென்றார் இந்துவின் செந்தூரன்



ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள மெய்வன்மைப்போட்டி ஒன்றில் யாழ். இந்து மாணவனான செந்தூரன் பங்கேற்கவுள்ளார்.

ஆஸ்திரேலியா அல்பேட் பாக்கில் நடைபெறவுள்ள இந்தத் தடகள விளையாட்டுப் போட்டியில் உயரம் பாய்தல் நிகழ்வில் பங்கு பற்றும் வாய்ப்பு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வீரன் இ.செந்தூரனுக்குக் கிடைத்துள்ளது. அல்பேட் பாக்கில் செந்தூரனின் உயரம் பாய்தல் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆஸ்திரேலியா நேரப்படி பி.ப 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

செந்தூரன் கனிஷ்ட மெய் வன்மைப் போட்டியில் 16 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தலில் 192 சென்ரி மீற்றர் உயரம் பாய்ந்து புதிய சாதனை படைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆஸ்திரேலியாவில் நடை பெறவுள்ள இந்த மெய்வன்மைப் போட்டியில் இலங்கை சார்பில் எட்டு வீரர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இவர்களில் வடமாகாணத்தைச் சேர்ந்த ஒரே ஒரு தமிழ் வீரர் செந்தூரனே ஆவார்.

இவரது வெற்றிப் பயணத்துக்கு கல்லூரி அதிபர், விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியர்ஆகியோருடன் பயிற்சி, நெறிப்ப டுத்தல் என்பவற்றை க.சுவாமிநாதன், செ.றமணன் ஆகியோர் வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-23)

# நாளை ஆரம்பம் மேசைப்பந்து

வவுனியா,நவ.8

வவுனியா பிரதேச செயலகமும், பிங்பொங் மேசைப்பந்தாட்ட அக்கடமியும் இணைந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மாவட்ட அணிகளுக்கிடையே நடத்தும் மேசைப் பந்தாட்டச்சுற்றுப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை வவுனியா நகரசபை உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்கு பெற்றுவதற்காக 20 பேர் அடங்கிய யாழ். மாவட்ட அணியினர் இன்று வவுனியா செல்லவுள்ளனர். (ந-23)

# உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம்,நவ.8

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஆதி சக்தி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று புதன்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றியீட்டியது.

நேற்று இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் ஒன்றை ஒன்று விட்டுக்



கொடுக்காமல் விளையாடின. இதனால் ஆட்டநேர முடிவில் இரு அணியினரும் தலா ஒவ்வொரு கோலினைப் பெற்றனர்.எனவே ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

ஆட்டத்தின் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சம நிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாக பயன்படுத்திக் கொண்ட உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் இளவாலை சென்.லூட்ஸ் அணியை வீழ்த்தி வெற்றியீட்டியது. (ந-23)

# தேசிய மட்ட கராத்தே போட்டி சென்.ஜோன்ஸ் தனுசன் தங்கம்

யாழ்ப்பாணம்,நவ.8

இலங்கை கராத்தே சம்மேளனம் நடத்திய தேசிய மட்ட கராத்தேப் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் தனுசன் தங்கப் பதக்கம் வென்று சாதனைப் படைத்துள்ளார்.

கொழும்பு சுகததாச விளையாட்டு உள்ளக அரங்கில் நடைபெற்றுவரும் தேசிய மட்ட கராத்தே சுற்றுப் போட்டியில் 13 வயதுப் பிரிவினருக்கான மண்ணிறப் பட்டிக்கான குமித்தே போட்டி யில் தனுசன் தங்கப்பதக் கத்தினையும், காட்டா போட்டியில் வெண்கலப் பதக்கத்தினையும் வென்றுள்ளார்.

இதேவேளை 9 வயதுப் பிரிவினருக்கான நாவல் நிறப்படிக்கான காட்டா போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த நிவேதன் வெள்ளிப் பதக்கத்தினையும், குமித்தே போட்டியில் வெண்கலப் பதக்கத்தினையும் பெற்றுள்ளார்.

10 வயதுப் பிரிவினருக்கான பச்சைநிற பட்டிக்கான குமித்தே போட்டியில் இதே கல்லூரியைச் சேர்ந்த சாந்தரூபன் வெண்கலப் பதக்கத்தினையும் காட்டா போட் டியில் சிறந்த பெறுபேற் றினையும் பெற்றுள்ளார். (ந-23)

# கரப்பந்தாட்டம் ஞாயிறன்று

யாழ்ப்பாணம்,நவ.08

ஜனாதிபதி வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் சங்கானை,சண்டிலிப்பாய், தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட விண்ணப்பித்த கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சங்கானை சிவப்பிரகாசா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும். (ந-23)

# நல்லூர் கோட்ட மட்ட உதைபந்து இறுதி இராமகிருஷ்ணாவில் இன்று

யாழ்ப்பாணம், நவ.8

நல்லூர் கல்வி கோட்ட மட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த 14வயது மற்றும் 16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடை யிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டங்கள் இன்று வியாழக் கிழமை காலை 8.30மணிக்கு கோண்டாவில் இராம கிருஷ்ணா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளன.

14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய அணி மோதவுள்ளது.

இதே வயதுப் பிரிவில் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் கோண்டா வில் இராமகிருஷ்ணா வித்தியாலய அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதியாட்டத்திலும் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியும் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியால அணியுமே மோதவுள்ளன.

அதேபோன்று 16 வயதுப் பிரிவில் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கோண்டாவில் இராமகிருஷ்ணா வித்தியாலய அணி மோதும். (ந-23)

# சிநேகபூர்வ உதைபந்தாட்டம் முதல்நாள் ஆட்டங்களின் முடிவு

யாழ்ப்பாணம்,நவ.8

யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களில் சிறந்த அணிகளாகத் தெரிவு செய்யப்பட்ட 8 கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் விலகல் முறையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்ட போட்டிகள் நேற்று புதன் கிழமை உரும்பிராய் இந்து மைதானத்தில் ஆரம்பமாகின.

இதன் போது இடம்பெற்ற ஆட்டங்களில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுகழகம்,ஊரெழுறோயல் விளையாட்டுக்கழகம் ஆகியன வெற்றிபெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழுறோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அன்னை ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் ஊரெழுறோயல் விளையாட்டுக்கழக அணி 5:0 என்ற கோல்கணக்கில் அபார வெற்றியீட்டியது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணிமோதிக்கொண்டது.

ஆட்ட நேர முடில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது. (ந-23)



யாழ்.மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபை, முன்னாள் மாணவ முதல்வர் அமரர் பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்திய கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பெண்கள் பிரிவில் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்ட உடுவில் மகளிர் கல்லூரி அணியினர். (ந-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சினுக்கு உயரிய ஆஸி. விருது!

மும்பையில் வழங்கப்பட்டது.

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் எண்ணற்ற சாதனை படைத்த 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சினுக்கு, ஆஸ்திரேலிய அரசு சார்பில் 'ஓர்டர் ஒப் ஆஸ்திரேலியா' எனும் உயரிய விருது நேற்று முன்தினம் மும்பையில் வழங்கப்பட்டது.

இந்திய அணியின் 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின் (வயது-39). சர்வதேச போட்டியில் சதத்தில் சதம் உட்பட பல்வேறு சாதனைகள் நிகழ்த்திய இவருக்கு, ராஜீவ் கேல் ரத்னா உள்ளிட்ட நாட்டின் பல உயரிய விருதுகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. இந்த வரிசையில் 'ஓர்டர் ஒப் ஆஸ்திரேலியா' என்ற அந்த நாட்டின் உயரிய விருதையும் பெற்றார். மும்பையில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்ச்சியில் ஆஸ்திரேலிய அமைச்சர் சைமன் கிரியன், சச்சினுக்கு இந்த விருதுக்கான பதக்கத்தை வழங்கிக் கௌரவித்தார்.


இதன்மூலம் இந்த விருது வென்ற முதல் இந்திய விளையாட்டு வீரர் என்ற சாதனை படைத்தார். தவிர இந்த விருது வென்ற இரண்டாவது இந்தியரானார். இதற்கு முன்னர் இந்தியா-ஆஸ்திரேலியா இடையில் சிறந்த சட்ட உறவுக்காக 2006 இல் முன்னாள் சட்டமா அதிபர் சோலி சொராப்ஜி இந்த விருதை பெற்றார்.

இந்த விருது வென்ற ஆஸ்திரேலியர்கள் அல்லாத 4 ஆவது கிரிக்கெட் வீரர் என்ற பெருமை பெற்றார். ஏற்கனவே மேற்கிந்தியத்தீவுகளின் கிளைவ் லொயிட் (1985), சோபர்ஸ் (2003), லாரா (2009) ஆகியோர் இந்த விருதை வென்றுள்ளனர்.

இது குறித்து ஆஸ்திரேலிய அமைச்சர் சைமன் கிரியன் கூறுகையில், உலகின் தலைசிறந்த வீரரான சச்சினுக்கு 'ஓர்டர் ஒப் ஆஸ்திரேலியா' விருது வழங்கி கௌரவிப்பதில் பெருமை அடைகிறேன். இவர் கிரிக்கெட் வீரர்களுக்கு மட்டுமல்லாமல் அனைத்து விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கும் 'ரோல் மொடலாக' விளங்குகிறார், என்றார்.

சச்சின் கூறுகையில், முதன்முதலில் 1991-92 இல் ஆஸ்திரேலியா சென்றதை என்றும் மறக்க முடியாது. மூன்றரை மாதம் நீடித்த இந்தத் தொடர் என்னை முழுமையான கிரிக்கெட் வீரராக மாற்றியது. பொதுவாக போட்டியில் ஆஸ்திரேலிய வீரர்கள் கடுமையான சவால் அளிப்பார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. அதேவேளையில் திறமையானவர்களை கௌரவிப்பதில் முன்னிலை வகிப்பவர்களும் இவர்கள் தான்.

கிரிக்கெட் ஜாம்பவான் பிரட்மனின் 90 ஆவது பிறந்தநாளின் போது அவரை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவிக்கும் வாய்ப்பு கிடைத்தது மறக்க முடியாத தருணம். இந்தியாவுக்கு வெளியே கிரிக்கெட் விளையாட மிகவும் பிடித்தமான இடமாக ஆஸ்திரேலியாவை குறிப்பிடுவேன். சிட்னி தான் பிடித்தமான மைதானம். இங்குள்ள தட்பவெப்பநிலை விளையாடுவதற்கு அருமையாக இருக்கும்.







**சுற்றுலா பயணியாக...**

இந்திய அணி எதிர்வரும் 2014 இல் தான் ஆஸ்திரேலியா செல்கிறது. அப்போது சச்சின் இடம் பெற வாய்ப்பு இல்லை. இது குறித்து இவர் கூறுகையில், அடுத்த முறை கிரிக்கெட் விளையாட செல்வேனா அல்லது ஒரு சுற்றுலாப் பயணியாக ஆஸ்திரேலியா செல்வேனா என்பது தெரியாது. ஆனால், நிச்சயமாக அங்கு செல்வேன். ஏனெனில் அந்த இடம் எனக்கு மிகவும் பிடிக்கும், என்றார்.

(5)

# ரெய்னா தேர்வு செய்யப்படாதது ஏன்?

அண்மைய போட்டியில் மிகப் பெரிய அளவில் சாதிக்காததால், இங்கிலாந்துக்கு எதிரான முதலிரண்டு டெஸ்ட் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணியில் சுரேஷ் ரெய்னாவுக்கு இடம் கிடைக்கவில்லை, என்று அவரது பயிற்சியாளர் தீபக் சர்மா தெரிவித்தார்.

இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 4 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. இதில் சுரேஷ் ரெய்னாவுக்கு இடம் கிடைக்கவில்லை.

இது குறித்து ரெய்னாவின் பயிற்சியாளர் தீபக் சர்மா கூறியதாவது:

சுரேஷ் ரெய்னா திறமையான வீரர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் போட்டியில் இவரது செயல்பாடு ஒரே மாதிரியாக இல்லாதது பெரும் பின்னடைவாக அமைந்தது. அண்மைய போட்டிகளில் மிகப் பெரிய அளவில் சாதிக்காததால், அணித் தேர்வாளர்களுக்கு இவர் மீதான நம்பிக்கை குறைந்துள்ளது என்று நினைக்கிறேன். அடுத்து வரவுள்ள ரஞ்சி கிண்ணப் போட்டியில் முழுத்திறமையை வெளிப்படுத்தி, மிகப் பெரிய ஓட்ட எண்ணிக்கையைப் பதிவு செய்ய வேண்டும். இவர், போட்டியில் திட்டமிட்டு விளையாடும் பட்சத்தில் அதிக ஓட்டங்கள் எடுக்கலாம். தற்போதுள்ள சூழ்நிலையில் ஒவ்வொரு வீரரும் டெஸ்ட், ஒருநாள் மற்றும் 'ரி-20' போட்டிகளுக்கு ஏற்ப ஆட்டத்தில் மாற்றம் கொண்டுவர வேண்டும். அப்போதுதான் சாதிக்க முடியும். இவர் அடுத்து வரும் போட்டியில் தனது திறமையை நிரூபித்து, விரைவில் டெஸ்ட் அணியில் இடம் பிடிப்பார் என்று நம்புகிறேன் - என்றார். (5)

# வீரர்களுக்கு பாதுகாப்பு போதுமானது

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அடுத்த மாத இறுதியில் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து இரண்டு 'ரி-20' மூன்று ஒரு நாள் போட்டியில் விளையாடுகிறது.

இந்த தொடரில் பங்கேற்பதற்காக டிசெம்பர் 22 ஆம் திகதி ஹபீஸ் தலைமையிலான பாகிஸ்தான் அணி இந்தியா செல்கிறது.

முதல் 'ரி-20' ஆட்டம் 25 ஆம் திகதி பெங்களூரிலும், இரண்டாவது ஆட்டம் 27 ஆம் திகதி அஹமதாபாத்திலும் நடைபெற உள்ளது.

பாகிஸ்தான் அணி இந்தியா வருகையையொட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. போட்டி நடைபெறும் மைதானம், வீரர்கள் தங்கும் விடுதி ஆகியவற்றில் 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட உள்ளது. இந்த நிலையில் பாகிஸ்தான் அணிக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்படும் என்று இந்திய அரசு பாகிஸ்தான் அரசுக்கு உறுதி அளித்துள்ளது.

அது மட்டுமின்றி பாகிஸ்தான் ரசிகர்களுக்கு 5 ஆயிரம் விசாக்கள் வழங்க ஆலோசனை நடந்து வருகிறது. இந்த முறை கடுமையான கெடுபிடி இருக்கும் என்று தெரிகிறது.

இந்த நிலையில் போட்டி பாதுகாப்பு தொடர்பாக ஆய்வு செய்வதற்காக இந்தியாவிற்கு விரைவில் குழு ஒன்று அனுப்பி வைக்கப்படுமென பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஜொகா அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், இந்திய சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் பாகிஸ்தான் அணிக்கு இந்தியாவில் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படும் என்று நம்புகிறேன்.

பாகிஸ்தான் அணியின் இந்திய சுற்றுப்பயணம் பற்றி பல்வேறு கருத்துக்கள் வெளிவந்தாலும், அதை பொருட்படுத்தாமல் வீரர்கள் கிரிக்கெட்டில் மட்டும் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார். (5)

# பொறுமையாக இருக்க வேண்டும்

அண்மையில் அறிவிக்கப்பட்ட இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் குழாமில் மத்தியவரிசைத் துடுப்பாட்ட வீரர் மனோஜ் திவாரி இடம்பெற்றிருக்காத போதிலும், தான் பொறுமையாகக் காத்திருக்க வேண்டியுள்ளதாக மனோஜ் திவாரி தெரிவித்துள்ளார்.

இந்திய அணி சார்பாக அண்மைக்காலமாக வழங்கப்பட்ட வாய்ப்புக்களில் பிரகாசித்துவரும் மனோஜ் திவாரி, உள்ளூர்ப் போட்டியிலும் சிறப்பாகச் செயற்பட்டுவருகிறார். ஆனால் இங்கிலாந்து அணிக்கெதிரான 15 பேர் கொண்ட குழாமில் அவர் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

இந்திய அணியில் சேர்க்கப்பட்டிருக்காத ஏமாற்றங்கள் தனது முன்னேற்றத்தைப் பாதிப்பதை விரும்பவில்லை எனத் தெரிவித்த அவர், ரஞ்சிக் கிண்ணப் போட்டியில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தி தனக்கான வாய்ப்புக்களை அதிகரிக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

(5)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்துவோம்

பங்களாதேஷிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி 2 டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தும் என்று மேற்கிந்தியத் தீவுகள் அணியின் உப தலைவரும், இலக்குக் காப்பாளருமான டினேஷ் ராம்டின் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 13 ஆம் திகதி முதல் பங்களாதேஷில் இடம்பெறவுள்ள இந்தத் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணி உலக 'ரி 20' தொடரை வெற்றிகொண்ட தன்னம்பிக்கையுடன் களமிறங்குகிறது.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்த டினேஷ் ராம்டின், பங்களாதேஷிலுள்ள ஆடுகளங்கள் மெதுவானவையாகவும், சுழற்பந்து வீச்சாளர்களுக்கு உதவியை வழங்கக்கூடியவாறும் காணப்படுபவை எனவும், அவை கரீபியன் தீவுகளின் ஆடுகளங்களுக்கு ஒப்பீடானவை எனவும் தெரிவித்தார்.

எனவே பங்களாதேஷில் போட்டியில் பங்குபற்றுவது மேற்கிந்தியத் தீவுகளுக்கு அனுகூலமாக அமையும் எனத் தெரிவித்த அவர், மேற்கிந்தியத் தீவுகளின் சுனில் நரைன், வீரச்சாமி பெருமாள் ஆகிய இருவரும் போட்டியில் பங்குபற்றினால் பங்களாதேஷ் அணியை விரைவாக ஆட்டமிழக்கச் செய்ய முயற்சிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி மிர்பூரில் இடம்பெறவுள்ள நிலையில், அந்த மைதானம் மிச்சிறப்பான மைதானம் எனத் தெரிவித்த டினேஷ் ராம்டின், பந்துவீச்சாளர்கள் அதிக இலக்குகளைக் கைப்பற்றுவார்கள் எனத் தெரிவித்தார். சுனில் நரைன் பங்களாதேஷிலுள்ள ஆடுகளங்களில் முதன்முதலாகப் போட்டியில் பங்குபற்றவுள்ளார் எனத் தெரிவித்த அவர், அங்குள்ள ஆடுகளங்கள் அவருக்கு அதிக உதவியை வழங்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

(5)



# பழிவாங்கும் தொடரல்ல

இங்கிலாந்துக்கெதிரான 4 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி பங்கேற்க உள்ளது.

இந்திய அணி கடந்த ஆண்டு இங்கிலாந்து மண்ணில் 0-4 என்ற கணக்கில் தோற்றது. எனவே இந்தத் தொடரை இந்திய அணி பழி வாங்கும் தொடராக கருதும் என்று கூறப்படுகிறது.

இதை மறுத்த இந்திய அணியின் தொடக்க வீரர் சேவாக் கூறுகையில், இங்கிலாந்து தொடரை நாங்கள் பழி வாங்கும் தொடராக கருதவில்லை. பழிவாங்குவதற்காக நாங்கள் வரவில்லை.

களத்தில் அபாரமாக விளையாடி, அணிக்காகவும், நாட்டுக்காகவும் வெற்றி பெற வேண்டும் என்பதில் கவனம் செலுத்தி வருகிறோம்.

இந்த டெஸ்ட் தொடரை வெல்ல வேண்டும் என்பதே எங்களது முக்கிய இலக்கு. இங்கிலாந்து சவால் அளிக்கக்கூடிய நல்ல அணி. நாங்களும் சிறந்த அணியாகவே விளங்குகிறோம்.

எனவே இந்தத் தொடர் இரண்டு அணிக்கும் கடினமாக இருக்கும் என்று நினைக்கிறேன். இந்த டெஸ்ட் தொடர் எப்போது தொடங்கும் என்ற ஆவலுடன் காத்திருக்கிறோம். இதற்கு தயாராகும் வகையில் வருகிற 9 ஆம் திகதி எங்களுக்கு பயிற்சி முகாம் தொடங்குகிறது.

உத்தரப்பிரதேச அணிக்கெதிரான ரஞ்சி கிண்ண ஆட்டத்தில், சதம் அடித்தும், எங்களது அணி (டெல்லி) சமன் செய்ய முடியாமல் போனது ஏமாற்றம் அளிக்கிறது.

இந்த ஆட்டத்தின் போது எனது விரலில் காயம் ஏற்பட்டது. விரலின் நிலைமையில் முன்பை விட முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் தற்போது நன்றாக இருப்பதாக உணருகிறேன் எனவும் தெரிவித்தார்.

(5)

**மாபிள் பதித்தல்**

10 வருடங்கள் மத்திய கிழக்கு நாட்டில் வேலை செய்தவர்களால் டோகா அரசாங்கத்தினால் பாராட்டுப் பெற்றவர்களால் உங்கள் விருப்பத்துக்கு ஏற்ற வகையில் குறுகிய காலத்தில் வேலை செய்து தரப்படும்.

தொடர்பு: பாபு
0773824871

(21587)(3.14.6)

**Clerk தேவை**

யாழ் நகரிலுள்ள நிறுவனம் ஒன்றுக்கு தமிழ், ஆங்கிலத்தில் கணினியில் தட்டெழுத்துச் செய்யக்கூடிய E.mail இல் சிறப்பான தேர்ச்சியுமுடைய பெண் Clerk தேவை.

T.P: 0212219514

(25118)(3.6)

**வீட்டுடன் காணி தேவை**

கட்டட ஒப்பந்தகார நிறுவனம் ஒன்றுக்கு வீட்டுடன் கூடிய காணி ஒன்று மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் வாடகைக்கு உடனடியாக தேவை.

தொடர்பு: 0771023817

(25127)(3.6)

**கார் விற்பனைக்கு**

நல்ல நிலையில் HX-xxxx தொடரிலக்கமுடைய Nissan FB 15 Car (2000 மெடல்) உடன் விற்பனைக்கு உண்டு

விலை - 1975000/=

தொடர்பு: 0785409106 / 0779947442

(25128)(3.6)

**நியூ சயன்ஸ் அக்கடமி நெல்லியடி**

யாழ். வடமராட்சி முன்னணி ஆசிரியர்களின் ஒன்றிணைந்த கற்பித்தலில் க.பொ.த உயர் கணித விஞ்ஞான வகுப்புக்கள் 01.11.2012 முதல் நடைபெறுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| உயிரியல் | பொன் திவாகரன் | சனி, ஞாயிறு, செவ்வாய் | 2013 Batch - 3.30 - 4.30 |
| | | | 2014 Batch - 4.30 - 5.30 |
| | இளங்கோ | திங்கள், வியாழன் | 2014 Batch - 3.30 - 4.30 |
| | | | 2014 Batch - 4.30 - 5.30 |
| இரசாயனவியல் | க.சிவத்திரன் | சனி, ஞாயிறு, | 2013 Batch காலை - 6.30 - 7.30 |
| | | | 2014 Batch காலை - 7.30 - 8.30 |
| | சி.தங்கராசா | சனி, ஞாயிறு, | 2013 Batch காலை - 7.30 - 8.30 |
| | | | 2014 Batch - 8.30 - 9.30 |
| | | திங்கள், புதன் | 2013 Batch - 3.30 - 4.30 |
| | | | 2014 Batch - 4.30 - 5.30 |
| பௌதீகவியல் | S.சோதிலிங்கம் | சனி, ஞாயிறு, செவ்வாய் | 2014 Batch - 3.30 - 4.30 |
| | | | 2013 Batch - 4.30 - 5.30 |
| | J.சந்திரப்பிரகாசம் | சனி, ஞாயிறு, | 2013 Batch - 8.30 - 9.30 |
| | | | 2014 Batch - 9.30 - 10.30 |
| | | புதன் | 2014 Batch - 3.30 - 4.30 |
| | | | 2013 Batch - 4.30 - 5.30 |
| இணைந்த கணிதம் | க.அருளானந்தம் | சனி, ஞாயிறு, | 2013 Batch - 3.30 - 4.30 |
| | | | 2014 Batch - 4.30 - 5.30 |
| | P.விமலநாதன் | செவ்வாய், வியாழன் | 2013 Batch - 3.30 - 4.30 |
| | | | 2014 Batch - 4.30 - 5.30 |

**2013 Batch & Day Class Chemistry**

சிவத்திரன் ஆசிரியரால் Industrial Chemistry உடன் General தவிர்ந்த ஏனைய அலகுகளுக்கான 1979 - 2012 M.C.Q வினாக்கள் செய்யப்படும்.

தங்கராசா ஆசிரியரால் Physical Chemistry உடன் சகல அலகுகளுக்குமான பகுதி - II வினாக்கள் மட்டும்.

**2014 Batch Chemisty**

சிவத்திரன் ஆசிரியரால் In Organic Chemistry செய்யப்படும்.

தங்கராசா ஆசிரியரால் Organic Chemistry, Physcial, Industrial செய்யப்படும்.

**2013 Batch & Day Class Physics**

செவ்வாய், புதன் 04.30 - 5.30
சனி, ஞாயிறு 2.30 - 3.30

கடந்த 30 வருட M.C.Q உடன் பகுதி - II வினாக்களும் சோதிலிங்கம், சந்திரப்பிரகாசம் ஆகியோரால் செய்யப்படும்.

நிர்வாகி.

(சி/4707)(3.14)

**Doctor on Call** Home Visiting Service

வைத்தியரை அழையுங்கள்

MBBS Doctors on your service

M.B.B.S வைத்தியர்களால் நேரடியாக உங்கள் வீட்டிலேயே வைத்திய சிகிச்சையும் ஆலோசனையும் வழங்கப்படும் உன்னத சேவை. (ஒரே தடவை பதிவு செய்வதன் மூலம்.)

வைத்திய உதவி உங்கள் ஒரு அழைப்பில் 0777302882

முக்கிய குறிப்பு. முற்பதிவு செய்வதன் மூலம் முன்னுரிமை.**

***முற்பதிவின்றி சேவை வழங்கப்படமாட்டாது.

**பதவி வெற்றிடம்**

பிரபல பத்திரிகை நிறுவனத்துக்கு
- ஒப்புநோக்குநர்
- விளம்பர வடிவமைப்பாளர் தேவை.

தகுதியானவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையுடன் 9.11.2012 மு.ப. 10.00 மணிக்கு நேரில் வரவும். சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 567 7602

**அன்பொளி கல்வியகம்**

யாழ்.இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2012 சித்தியடைந்த மாணவர்களுக்கான

**பரிசளிப்பு நிகழ்வு**

எமது கல்வியகத்தில் கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 10.11.2012 சனிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ்) நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

- இயக்குநர்.

(சி/4580)(6.7.8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

HP recommends Windows.

intel inside
CORE i5
Ultrabook
Inspired by Intel



# குறைந்த எடையில் புதுநுட்பம்.

அறிமுகப்படுத்துகின்றோம் HP ENVY 4-1015TU Ultrabook™. மிகக்குறைந்த எடைகொண்டதும், அதிக சக்திமிக்கதும், அதிக செயற்திறன் கொண்டதுமான, எதனையும் நிறைவேற்றும் Ultrabook™. Intel® Core™ i5-3317U processor^ வலுவுடன், 8 மணித்தியாலம் வரையான பற்றரிக் காலத்துடன் தற்போது கிடைக்கின்றது*.


+ Intel® Rapid Start Technology*
+ HP ProtectSmart hard drive protection
+ beatsaudio

**Ultrabook™. Inspired by Intel®. Perfected by HP.**

**HP ENVY 4-1015TU Ultrabook™** (B4Q08PA#UUF)

- 3rd Generation Intel® Core™ i5-3317U Processor^ (1.70 GHz)
- Windows® 7 Home Basic[1]
- 320GB HDD 5400rpm Fixed
- 14.0" Diagonal High-Definition LED HP Brightview Widescreen Display

**ரூபா. 120,000.00**
(வரிகள் உள்ளடக்கப்படவில்லை)




எமது அங்கீகாரம்பெற்ற பங்காளர்களை அணுகி, ஒரேதடவையிலான, சிக்கலற்ற உள்நாட்டு மற்றும் சர்வதேச உத்தரவாதத்தை HP இடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்
**இன்றே அழையுங்கள்: 0115-109109**

அணுகுங்கள் : எமது அங்கீகாரம்பெற்ற பங்காளர்களை.
க்ளிக் செய்யுங்கள் : www.hp.com/personal

விநியோகஸ்தர்கள்: Tech Pacific Lanka (Pvt) Ltd • iTLink (Pvt) Ltd. • Redington Distribution Pte Ltd. • Ingram Micro India Exports Pte Limited
மீள்விற்பனையாளர்கள்: கொழும்பு 4 • The TechnoCity (Pvt) Ltd தொலைபேசி: 077 3846384 • The X'pess Store தொலைபேசி: 077 3951336 • The Laptop Mega Store தொலைபேசி: 077 3951338 • The HP Store தொலைபேசி: 077 3951334 • IT GALAXY (PVT) LTD தொலைபேசி: 077 3845384 • Lapzone (Pvt.) LTD தொலைபேசி: 0777148737

hp

*Battery life will vary depending on the product model, configuration, loaded applications, features, use, wireless functionality and power management settings. The maximum capacity of the battery will naturally decrease with time and usage. See MobileMark07 battery benchmark. Requires a 2nd gen Intel® Core™ processor, Intel® software and BIOS update, and Intel® Solid State Drive (SSD) or mSATA cache module + HDD. Depending on system configuration, your results may vary. ^Intel's numbering is not a measurement of higher performance. Specifications are subject to change without notice. Terms & conditions apply. Ultrabook, Celeron, Celeron Inside, Core Inside, Intel, Intel Logo, Intel Atom, Intel Atom Inside, Intel Core, Intel Inside, Intel Inside Logo, Intel vPro, Itanium, Itanium Inside, Pentium, Pentium Inside, vPro Inside, Xeon, Xeon Phi, and Xeon Inside are trademarks of Intel Corporation in the U.S. and/or other countries. [1]All other trademarks are the property of their respective owners. Not all features are available in all editions of Windows 7. This system may require upgraded and/or separately purchased hardware to install the Windows 7 software and take full advantage of Windows 7 functionality. See http://www.microsoft.com/windows/windows-7/ for details. ©2012 Hewlett-Packard Development Company, L.P.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடிகாமம் தேவாலயத்தில் ஒலிபெருக்கிச் சாதனம் திருட்டு

கொடிகாமம் பகுதயில் உள்ள தேவாலயக் கதவு உடைக்கப்பட்டு அங்கிருந்த ஒலி பெருக்கிச் சாதனம் திருடிச் செல்லப்பட்டுள்ளதாகத் தேவாலய பங்குத் தந்தையால் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொடிகாமம் வாகைப்பட்டி வீதியில் அமைந்துள்ள தேவாலயத்திலேயே குறித்த களவு இடம் பெற் றுள்ளது. தேவாலயத் தின் தேவைக்காக வைக் கப்பட்டு இருந்த சுமார் பதினையா யிரம் ரூபா பெறுமதி யான அம்பளி வயர் திருடிச் செல்லப்பட்டுள்ளது. கொடிகாமம் பொலிஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் மேற்படி களவுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. (வ-86)

## நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

3ஆம் ஆண்டு



திருமதி பரமேஸ்வரி நல்லதம்பி
(உப அதிபர்)
மலர்வு 17.04.1941
உதிர்வு 11.10.2009

10ஆம் ஆண்டு



திருமதி குகானந்தி சூரியஜீவன்
(நீர்ப்பாசனத் திணைக்களம்)
மலர்வு 09.12.1968
உதிர்வு 15.10.2002

நினைவுகளில் நனைகின்றோம் உம் கனவுகளை சுமந்தபடி

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இல.11,3ஆம் குறுக்கு,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (25098)(5-6-7)

கணவர், மகன், மகள்.

**ஓட்டோ விற்பனைக்கு**

TVS ஓட்டோ (7000 Km ஓடியது) உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 6268 029, 077 2487 170
(25105)(45.6.7)

**கடை வாடகைக்கு**

மானிப்பாய் சந்தைக்கு அருகில் கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0770055300
(25028)(2,6,7)

## மரண அறிவித்தல்

### திருமதி சதயராணி கருணாநிதி



நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் சுவிற்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சதயராணி கருணாநிதி சுவிற்சர்லாந்தில் 02.11.2012 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், சங்குவேலி சச்சிதானந்தன் காலஞ்சென்ற கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகளும், கருணாநிதியின் அன்பு மனைவியும், சாலினி, சுபாசினி, கஜதாஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், டொமினிக்கின் அன்பு மாமியாரும், மியா அலிசியாவின் அன்புப் பேர்த்தியும், மகேந்திரதாசன்(ஓய்வுநிலை வைத்தியசாலைச் செயலாளர்,போதனா வைத்திசாலை, யாழ்ப்பாணம்) கமலாதேவி, அருந்ததி(சுவிஸ்),கலைவாணி(போதனா வைத்தியசாலை,யாழ்ப்பாணம்) காலஞ்சென்றவர்களான புஷ்பம், சண்முகதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்மகுலசிங்கம் (சுவிஸ்),ரவிச்சந்திரன் (ஆசிரிய கலாசாலை-கோப்பாய்),பவானி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2012) வியாழக்கிழமை மு.ப. 11.00மணியளவில் (சுவிஸ் நேரம்) சுவிஸ்சில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

333,(117), ஆனந்தன் வடலி வீதி,
நாயன்மார்கட்டு,யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 1138,021 300 1907, 0041 3238 45974

தகவல்:
குடும்பத்தினர்.
(25050)(5 6 7)




"கொண்டாட்டம் கொண்டாட்டம்...."

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

"ஸ்ரைல் பார்க்கில்

ஒளிரும் தீபாவளியை மிளிரும் வண்ண
ஆடைகளுடனும் உங்கள் மன நிறைவுடனும் கொண்டாட்டம்...."
கொண்டாடி மகிழ்ந்திட இன்றே விரையுங்கள்

Style Park Jaffna.

Style Park

171,K.K.S.Road, Jaffna.



(C/4560) (2,7)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

மலர்வு
06-06-1970

உதிர்வு
09-10-2012



உதய நிலவே-நின்
உறவு வெளி வானத்தின்
உறக்கம் கலைந்ததம்மா!
உன் அயல் நட்சத்திரங்கள்
ஒவ்வொருநாள் இருளோடும்
உருகிக் கிடக்குதம்மா!
காயமே பொய்யென்று
கலைத்து விட முடியாதுன் நினைவு!
அம்மா காயத்திரி !
ஆறாத காயத்தோடெம்
அழுகுரல் கேட்காத தூரத்தில்-
அதற்கிடையில்- ஏனம்மா?

### திருமதி காயத்திரி பாலமுரளீதரன்

( ஆசிரியை, யா/கொக்குவில் இந்துக்கல்லூரி)

கடந்த 09-10-2012 அன்று அமரத்துவமடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கு அமரர் திருமதி காயத்திரி பாலமுரளீதரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று(08-11-2012)வியாழக்கிழமை காலை 07.00 மணியளவில் வில்லூன்றி புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். அந்நிகழ்வில் கலந்து கொள்வதோடு 10-11-2012 சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை சொர்ணாம்பிகை மண்டபத்தில்(T.C.T) இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல: 19, 6 ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(க/4579)(45.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org